விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 தை 23 வெள்ளிக்கிழமை (06.02.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 049

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

# தனித்துவமும் தமது இடமும் தமிழருக்குக் கிடைக்கவில்லை

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு



(கொழும்பு) இலங்கையர் என்ற தனித்துவமும், தமக்குரிய இடமும் கிடைக்கவில்லை என்ற பெரும் கவலைதான் தமிழ் மக்கள் மனதில் இருக்கின்றது என்று தெரிவித்தார் அமைச்சர் ராஜித சேனாரட்ன. தமிழ் மக்கள் அபிவிருத்தியைக் கேட்கவில்லை. அதைக் கொடுத்து எந்தப் பயனும் இல்லை. இலங்கையர் என்ற தனித்துவத்தையே அவர்கள் கேட்கின்றனர். அதைத் தான் வழங்க வேண்டும் என்றும் அவர் கூறினார். (23 ஆம் பக்கம் பார்க்க)

## 19-வது திருத்தச் சட்டம் சுதந்திரக் கட்சியிடம்

(கொழும்பு)

19-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் முன்னர் அரசாங்கம் அதனை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிடம் வழங்கியுள்ளது.

பிரதமர் ரணில் விக்ரமசிங்க, அதனை எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வாவிடம் வழங்கியுள்ளார்.

அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கையை 30 ஆக குறைப்பது, 17-வது திருத்தச் சட்டத்தின் மூலம் கொண்டு வரப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களை வலுப்படுத்துவது, ஒருவர் ஜனாதிபதி பதவியை வகிக்கும் கால வரையறையை நீக்கிய 18-வது திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்வது ஆகிய திருத்தங்கள் 19-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்த திருத்தச்சட்டத்தை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை 23ஆம் பக்கம் பார்க்க....

## முதன் முறையாக பங்கேற்பு!

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது அரசியல் வாழ்க்கையில் முதன்முதலாக இலங்கை சுதந்திரதின நிகழ்வுகளில் பங்கேற்றுள்ளதாக சுகாதார அமைச்சின் முன்னாள் ஊடக ஒருங்கிணைப்பாளர் தர்ம வன்னிநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி முன்னர் நடைபெற்ற எந்தவொரு தேசிய சுதந்திரதின நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளவில்லை. 23ஆம் பக்கம் பார்க்க....

## வாழ்த்துவதற்காக அழைத்த என்னை திட்டித் தீர்த்தார் மகிந்த ராஜபக்ஷ

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு



(கொழும்பு)

வாழ்த்துவதற்காக தொலைபேசி அழைப்பை விடுத்த சந்திரிகா பண்டாரநாயக்கவை 19 நிமிடங்கள் தொடர்ச்சியாக திட்டித் தீர்த்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ.

ஊடகமொன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சந்திரிகா பண்டாரநாயக்க பதவியிலிருந்து ஓய்வு பெறும் சந்தர்ப்பத்தில் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷவை நிறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அப்போதிருந்த 61 அரச கட்சி உறுப்பினர்களில் 56 பேர் மகிந்த ராஜபக்சவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்த வேண்டாம். அவர் கட்சி தலைமைத்துவத்திற்கு பொருத்தமற்றவர் 23ஆம் பக்கம் பார்க்க....

## மொஹான் பீரிஸ் மூன்று முறை ஓய்வு

(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை சட்டவிரோதமாக அந்த பதவியில் இருந்து நீக்கி விட்டு, சட்டவிரோதமாக நியமிக்கப்பட்ட மொஹான் பீரிஸ் ஏற்கெனவே இரண்டு முறை அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்றவர் என நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மொஹான் பீரிஸ் தற்போது மூன்றாவது முறையாக ஓய்வுபெற விருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். கண்டி மல்வத்தை விகாரையில் மாநாயக்க 24ஆம் பக்கம் பார்க்க....

## வெளிநாடு செல்ல கே.பிக்கு தடை



(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் முன்னாள் தலைவர் கே.பி. என்றழைக்கப்படும் குமரன் பத்மநாதன் வெளிநாடுசெல்வதை தடைசெய்யும் உத்தரவொன்றை மேன்முறையிட்டு நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை பிறப்பித்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) நாடாளுமன்ற உறுப்பினர் 23ஆம் பக்கம் பார்க்க....

## மேலிடத்து உத்தரவு

## ஓமந்தையில் மீண்டும் சோதனை நடவடிக்கை

(ஓமந்தை)

நிறுத்தப்பட்ட ஓமந்தை சோதனை சாவடி சோதனை நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சோதனை நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பித்து பழையபடி நடந்துகொள்ளுமாறு மேலிடத்தில் இருந்துவந்த உத்தரவின்படியே மீண்டும்சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக கூறப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை 2 ஆம் திகதி முதல் நிறுத்தப்பட்டிருந்த ஓமந்தை சோதனைச் சாவடியின் சோதனை நடவடிக்கைகள், புதன்கிழமை இரவு முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருப் 24ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ் மக்களுக்கு நன்மை அதனாலேயே பங்கேற்பு

### சம்பந்தன் தெரிவிப்பு



(கொழும்பு)

புதிய சூழலில் தமிழ் பேசும் மக்களுக்கு நன்மை பயக்கும் என்ற எதிர்பார்பிலும், தாங்களும் இந்த நாட்டின் பங்காளிகள் என்பதை தெரியப்படுத்துவதற்காகவும் இம்முறை சுதந்திரதின நிகழ்வில் பங்கேற்றதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத் தலைவர் 24ஆம் பக்கம் பார்க்க....

## முன்னாள் ஜனாதிபதிகளை கூட்டிணைக்க முயற்சி !

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால, முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க, மகிந்த ராஜபக்ஷ ஆகிய மூவரையும் எதிர்வரும பொது தேர்தலில் ஒரே மேடைக்கு கொண்டு வந்து ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி ஆட்சியை மீண்டும் கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

கம்பஹா மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் பீலிக்ஸ் பெரேராவின் இல்லத்தில்லநதுரையாடலொன்று இடம்பெற்றது. குறித்த கலந்துரையாடலில் கம்பஹா மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி 23ஆம் பக்கம் பார்க்க....

## கொலைகள் தொடர்பில் விசாரணை நடத்தப்படும்

### எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பு


(கொழும்பு)

கடந்த ஆட்சிக்காலத்தில் இடம் பெற்ற பல்வேறு திட்டமிட்ட கொலைகள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படும் என நோர்வேயின் இலங்கைக்கான முன்னாள் சமாதான ஏற்பாட்டாளர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார். நோர்வே நாட்டின ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே 23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணம் ஏற்படுத்திய சந்திப்பு



(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் காவத்தை பிரதேசத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த சாந்த தொடங்கொட என்பவரின் குடும்பத்தினர் நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்தனர்.

மரணத்தை ஏற்படுத்திய சம்பவம் குறித்து ஜனாதிபதி தொடங்கொட குடும்பத்தினரிடம் தனது கவலையை தெரிவித்து கொண்டதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த சந்திப்பில் ராஜாங்க அமைச்சர் தலதா அத்துகோரளவும் கலந்து கொண்டார். (எ-11)

# ஓய்வெடுக்குமாறு மகிந்தவுக்கு ஆலோசனை


(கொழும்பு)

ஸ்ரீ ஜயவர்தனபுரவில் நடைபெற்ற இலங்கையின் 67வது சுதந்திர தின விழாவில் பங்கேற்குமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும் அவர் அதில் கலந்து கொள்ளவில்லை.

உடல் நல குறைவு காரணமாகவே மகிந்த ராஜபக்ஷ சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

தங்காலையில் உள்ள கால்டன் இல்லத்தில் வசித்து வரும் மகிந்த விசேட மருத்துவ பரிசோதனைக்காக கடந்த வெள்ளிக்கிழமை கொழும்புக்கு வந்திருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி கடும் மன உளைச்சலில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால், உத்தியோகபூர்வ நிகழ்வுகள், செயற்பாட்டு ரீதியான அரசியல் செயற்பாடுகளில் இருந்து முற்றாக ஒதுங்கி ஓய்வெடுக்குமாறு அவரது மருத்துவர்கள் ஆலோசனை வழங்கியிருப்பதாக முன்னாள் ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள்



மேலும் தெரிவித்துள்ளன.

அதேவேளை அரசியல் வங்குரோத்து நிலையை அடைந்துள்ள சில அரசியல்வாதிகள் இணைந்து தேசப்பற்றுள்ள அரசியல் முன்னணி ஒன்றை ஆரம்பிக்க உள்ளனர்.

அத்துடன் மீண்டும் மகிந்தவின் வருகைக்கு நீங்கள் தயாரா? என்ற தொனிப்பொருளில் கருத்தரங்குகளையும் நடத்த அவர்கள் தீர்மானித்துள்ளனர். (எ-11)

# மரண அறிவித்தல்கள்

## அல்பிரட் தம்பிப்பிள்ளை அரசரட்ணம்

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர் - வீடமைப்புத் திணைக்களம்)
(புன்னாலைக்கட்டுவன் வடக்கு)

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும், திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட அல்பிரட் தம்பிப்பிள்ளை அரசரட்ணம் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - ஆசைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - றோசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், பிரியதர்சினி (கனடா), புவனேந்திரா (டென்மார்க்), ஜீவதர்சினி (திருகோணமலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வராஜா (கனடா), ரேணுகா (டென்மார்க்), வரதநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், டெனிசியா, அன்றூ, ஜோஸுவா, மிசேல், கலைவிழி, பாவலன், திகழினி ஆகியோரின் அன்புப் பேரனும், திருமதி கிருபை திருராஜா மற்றும் காலஞ்சென்றவர்களான ரத்தினம், நேசம் பரமானந்தம், சந்திரா மயில்வாகனம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (07.02.2015) சனிக்கிழமை காலை 8.00 மணிமுதல் ஜயரத்ன மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு காலை 11.00 மணிக்கு ஆராதனை இடம்பெற்று நல்லடக்கத்திற்காக பொரளை கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
(சி-029) தொ. இல: 0778012704
பிள்ளைகள்

## தம்பிப்பிள்ளை சிவலிங்கம்



சிவசோதிபவனம் சந்தை வீதி, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை சிவலிங்கம் நேற்று (05.02.2015) இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை சிவக்கொழுந்து தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற காசிப்பிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், அமரர்களான சிவானந்தன், திருமதி சிவமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமரர்களான பரஞ்சோதி, திருமதி கிருகாம்பாள் ஆகியோரின் மைத்துனரும், திருமதி சுமதி (நிர்வாக உத்தியோகத்தர் (AO) சுகாதாரத் திணைக்களம்), காலஞ்சென்ற சி.புஸ்பா மற்றும் ச.சுபத்திரா (ஜேர்மனி), காலஞ்சென்ற சி.சித்திரா மற்றும் ச.சத்தியபாமா (HNB பருத்தித்துறை) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், ப.சிவகுமார், நா.சந்திரசேனன் (ஜேர்மனி), ஜெ.சங்கர் (பாரத் ஸ்ரூடியோ உடுப்பிட்டி) மற்றும் அமரர் ப.ஆனந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், சேயோன், வைஸ்ணவன், அட்சயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2015) பி.ப 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
குடும்பத்தினர்
"சிவசோதி பவனம்"
சந்தை வீதி, உடுப்பிட்டி.

தொலைபேசி இலக்கம்:
0212055823, 0778545422 (சி-027)

# சர்வதேச நீதிமன்றிற்கு எவரையும் கொண்டு செல்லோம்

## அமைச்சர் மங்கள தெரிவிப்பு



ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் சமர்ப்பிக்கப்பட உள்ள இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பான ஐ.நா அறிக்கையை எதிர்கொள்வதற்காக நம்பிக்கையான உள்நாட்டு விசாரணை ஒன்றை நடத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டு வருவதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனை கூறியுள்ளார்.

போர்க்குற்றங்கள் சம்பந்தமான இலங்கையர் எவரையும் சர்வதேச நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல இடமளிக்க போவதில்லை.

போர்க்குற்றங்கள் தொடர்பாக விசாரணை நடத்த கோரிய நாடுகளுடனும் இது சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. உள்நாட்டு விசாரணைகளுக்கு அவர்களின் உதவிகள் கோரப்பட்டுள்ளன.

செயற்பாட்டு ரீதியான வெளிநாட்டு கொள்கை இருந்தால், மேற்குலக நாடுகள் அதனை புறந்தள்ள முடியாது.

புதிய அரசாங்கம் இந்தியாவுக்கு சார்பான கொள்கையை கடைப்பிடிப்பதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை நிராகரிக்கின்றோம். இந்தியாவுடன் மாத்திரமல்ல சீனாவுடனும் உறவுகளை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜனாதிபதி சீனாவுக்கு விஜயம் செய்ய உத்தேசித்துள்ளதாகவும் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார். (எ-11)

**போட்டிப் பரீட்சைகளுக்கான விசேட கருத்தரங்குகள்**

- ♦ வட மாகாண முகாமைத்துவ உதவியாளர் (ஞாயிறு 10.30 - 2.00 மணிவரை)
- ♦ சிறைச்சாலை ஜெய்லர் தெரிவு (28 ஆம் திகதி பரீட்சை) சனி, ஞாயிறு 1.00 - 5.00 மணிவரை
- ♦ SLAS சனி, ஞாயிறு 9.00 மணி

(9437)

T.P : 0766883394
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ்.ஆஸ்பத்திரி வீதி, கொமர்சல் வங்கியருகில்)

# விசாரணைக்கு அழைப்பு

சுதந்திர தினத்தன்று நல்லூர் பிரதேச சபையில் தேசியக்கொடி ஏற்றப்படாமை தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக பயங்கரவாதக் குற்றத்தடுப்புப் பிரிவினர் தனக்கு அழைப்பு விடுத்துள்ளதாக நல்லூர் பிரதேச சபை தவிசாளர் பா.வசந்தகுமார் கூறினார்.

இலங்கையின் 67ஆவது சுதந்திர தினமான நேற்று முன்தினம் நல்லூர் பிரதேச சபையில் தேசியக் கொடி ஏற்றப்படவில்லை. இது தொடர்பில் தொடர்ந்து கருத்து தெரிவித்த தவிசாளர், அன்றைய தினம் தனக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்திய பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினர், ஏன் தேசியக் கொடி ஏற்றவில்லை என கேட்டனர். சபையின் தீர்மானத்துக்கமைய ஏற்றவில்லை என கூறியபோது, இது தொடர்பில் கொழும்புக்கு விசாரணைக்கு அழைப்போம் அப்போது வர வேண்டும் எனக் கூறினர் என்று அவர் கூறினார். (எ-4)

**மந்திகை நோயாளர் நலன்புரிச் சங்கம்**

**நோயாளர் பராமரிப்புச் சேவை ஆண்கள்**

நோயாளர் நலன்புரிச் சங்கத்தால் நடத்தப்படும் நோயாளர் பராமரிப்புச் சேவைக்கு ஆட்கள் தேவை. 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் விண்ணப்பிக்கவும்.

தலைவர்,
மந்திகை நோயாளர் நலன்புரிச் சங்கம்
ஆதார வைத்தியசாலை,
பருத்தித்துறை.
(சி-028)

விண்ணப்ப முடிவுத் திகதி : 20.02.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ அகதிகளைத் திருப்பி அனுப்பும் முயற்சியை அரசு கைவிட வேண்டும்



## தொல்.திருமாளவன் கோரிக்கை

(சென்னை)

**இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பும் முயற்சியைக் கைவிடுமாறும் விரும்பும் அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

இது குறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்,

நாட்டில் முகாம்களிலும் முகாம்களுக்கு வெளியிலும் தஞ்சமடைந்து வாழ்ந்துவரும் சுமார் ஒரு இலட்சம் ஈழத் தமிழ் அகதிகளை அவர்களது விருப்பத்துக்கு மாறாக இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டிருக்கிறது.

இதற்காக இலங்கை அரசின் பிரதிநிதிகளோடு டில்லியில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. பேச்சுவார்த்தையை ஒத்திவைக்க வேண்டும் என்ற தமிழக அரசின் கோரிக்கையைப் புறக்கணித்து இந்தப் பேச்சுவார்த்தையை மத்திய அரசு நடத்தியிருப்பது கண்டனத்துக்குரியது.

இலங்கையில் ஆட்சி மாற்றம் நடந்து ஒருசில வாரங்கள்தான் ஆகிறது. தமிழர் பிரச்சினை தொடர்பாக புதிய அரசின் அணுகுமுறை இன்னும் தெளிவாகவில்லை. தமிழர் பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தைத் திரும்பப்பெறுவதற்கோ, அவர்களால் அபகரிக்கப்பட்டிருக்கும் தமிழர்களின் நிலங்களைத் திருப்பிக்கொடுப்பதற்கோ, சிறைகளில் வாடும் ஆயிரக்கணக்கான தமிழர்களை விடுதலை செய்வதற்கோ மைத்திரிபால் தலைமையிலான புதிய அரசு எந்தவொரு நடவடிக்கையையும் இதுவரை எடுக்கவில்லை. மாறாக, புலம்பெயர் நாடுகளில் செயற்படும் ஈழத் தமிழர் அமைப்புகளின் மீது ராஜபக்ஷ விதித்த தடைகள் தொடரும் என்று மைத்திரிபால தெரிவித்திருக்கிறார்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் வாக்குறுதியளிக்கப்பட்டவற்றை நடைமுறைப்படுத்தவும், தமிழ் மீனவர்கள் மீதான தாக்குதல்களைத் தடுத்து நிறுத்தவும் இலங்கை அரசை வலியுறுத்தி நடவடிக்கை எடுப்பதில் முனைப்புக் காட்டாத இந்திய அரசு, இங்கிருக்கும் அகதிகளைத் திருப்பி அனுப்புவதில் குறியாக இருப்பது ஏன்? இலங்கையில் இயல்புநிலை வந்துவிட்டது என உலக நாடுகளுக்குக் காட்டி அடுத்துவரும் ஐ.நா. மனித உரிமைக் கவுன்சில் கூட்டத்தில் போர்க்குற்ற விசாரணை தொடர்பாக வரவிருக்கும் தீர்மானத்தை முறியடிப்பதற்கு இலங்கை அரசுக்கு உதவ வேண்டும் என்பது தவிர இந்த அவசரத்துக்கு வேறு காரணம் இருக்க முடியாது. இது அப்பட்டமான தமிழர் விரோதச் செயல் அல்லாமல் வேறு ஒன்றுமில்லை.

1995 ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து திருப்பி அழைத்துச் செல்லப்பட்ட ஆயிரக்கணக்கான ஈழத்தமிழ் அகதிகளை வவுனியாவில் இருக்கும் சிதம்பரபுரம் என்ற இடத்தில் முகாம்களில் தங்கவைத்தார்கள். இருபது ஆண்டுகளாகியும் அவர்கள் மறுகுடியமர்த்தம் செய்யப்படவில்லை. தமிழ்நாட்டில் இருப்பதை விடவும் மோசமான முகாம்களில் அவர்கள் இப்போதும் அல்லல்படுகிறார்கள்.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு திரும்பிச் சென்றவர்களின் கதியே அப்படி இருக்கும் போது இங்கிருப்பவர்களையும் அங்கே அனுப்பினால் என்ன ஆகும் என்பதை இந்திய அரசு எண்ணிப் பார்க்க வேண்டும்.

அகதிகளை வலுக்கட்டாயமாக இலங்கைக்குத் திருப்பி அனுப்பும் முயற்சியைக் கைவிடுமாறு மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறோம். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இந்திய குடியுரிமைச் சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தத்தை நீக்கி விரும்பும் அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வலியுறுத்துகிறது. (இ-5)

## ஓய்வூதிய கொடுப்பனவுகள் புதிய அரசினால் அதிகரிப்பு!

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் வழிநடத்தலின் கீழ் புதிய அரசாங்கத்தினால் ஓய்வூதியகாரர்களுக்கு வழங்கப்படும் மேலதிக கொடுப்பனவு தொடர்பில் பிரதி நிதியமைச்சர் ஹர்ஷ டி சில்வா விளக்கம் அளித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு 25 ஆயிரம் ரூபா அதிகரித்ததோடு புதிய அரசாங்கத்தினால் ஆயிரம் ரூபாய் அதிகரித்ததனால் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு கொடுப்பதாக கூறிய 3 ஆயிரத்து 500 ரூபாய் முழுமையடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

புதிய அரசாங்கத்தின் 100 நாட்கள் வேலை திட்டத்தில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு 3 ஆயிரத்து500 ரூபாய் வழங்குவதாக தெரிவித்தோம். எனினும் வரவு செலவு திட்டத்தில் ஆயிரம் ரூபாவே அதிகரிதோம். அப்படி செய்தது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வரவு செலவு திட்டத்தில் 2 ஆயிரத்து 500 ரூபா அதிகரித்திருந் தார். இரண்டையும் சேர்த்தே முழுமையாக 3 ஆயிரத்து 500 ரூபா அதிகரிப்பு என குறிப்பிடப்பட்டதாக பிரதியமைச்சர் மேலும் தெரிவித்துளளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-5)


31 ஆம் நாள் நினைவுதின அழைப்பிதழ்



கடந்த 09.01.2015 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்த

அமரர்

செல்வி ஸ்டெலா பொன்னையா

அவர்களின் 31 ஆம் நாள் நினைவு தின வழிபாடுகள் நாளை 07.02.2015 சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு அடைக்கல மாதா (O.L.R) ஆலயத்தில் நடைபெற இருப்பதால் அத் திருப்பலியில் கலந்து கொள்வதோடு 08.02.2015 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

51, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (9436)

இங்ஙனம் குடும்பத்தினர்.


## இராசி பலன்

06.02.2015

(தை 23, வெள்ளிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு

துதியை முற்பகல் 9.22 மணிவரை

பூரம் பின்னிரவு 4.46 மணிவரை

இராகுகாலம் 11.05-12.35 மணிவரை

சுபநேரம் 6.35-8.05 மணிவரை

வளவன்

**மேடம்:** சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், எதிர்பாராத தொகைகள் கிடைப்பதற்கான வாய்ப்புண்டு, சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படும்.

**இடபம்:** தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் அதிகரிக்கும், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள்.

**மிதுனம்:** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், சகோதர ஒற்றுமை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு, வருமானம் திருப்திதரும்.

**கடகம்:** கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தூரதேசச் செய்திகள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.

**சிம்மம்:** குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புகளும் கூடலாம், திடீர் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆழ்ந்த சிந்தையுண்டு.

**கன்னி:** விரதங்களில் நம்பிக்கைகூடும் நாள், குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வதன் மூலம் மகிழ்ச்சி அதிகரிக்கும், ஒரு வேலையை முடிக்க ஒன்றுக்கு இரண்டுமுறை அலைய நேரிடலாம்.

**துலாம்:** தொலைதூரப் பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்:** இனிய சம்பவங்கள் நடைபெறும் நாள், விருந்தினர் வருகையுண்டு, பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், [illegible] மேன்மையுண்டு.

**தனுசு:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், தொழில் ரீதியாக முக்கிய புள்ளிகளைச் சந்திப் பீர்கள், தடைப்பட்ட காரிய ங்களில் முன்னேற்றம் ஏற்படும்.

**மகரம்:** தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கும்பம்:** புதிய பொருட் சேர்க்கையுண்டு, புதிய தொழில் வாய்ப்புகள் தேடி வரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு, கௌரவமான நாள்.

**மீனம்:** உங்களின் திறமைகளை மற்றவர்கள் பாராட்டுவர், நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், அலுவலகப் பணிகள் துரிதமாகும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## ஆன்மீகம் 141

...அவர்கள் அதனுடன் சில காலம் சென்ற பிறகு அதிலும் ஏதோ குறைபாடு இருப்பதாக எண்ணி அடுத்ததற்குத் தாவுகிறார்கள். மற்றவரிடம் எந்தத் தவறும் இல்லை. உண்மையிலேயே அந்தக் குறைபாடுகளுக்குக் காரணம் அவர்களுடைய சொந்த கற்பனைதான் என்பது அவர்களுக்குத் தோன்றுவதேயில்லை.

அவர்கள் கற்பனை உலகில் ஆழ்ந்து நிலைபெற்று விட்டதால் நிஜம் அவர்களுக்கு கற்பனையைப் போல் தோன்றுகிறது! நான் சொல்கிறேன் இதுதான் நமது தொல்லைகளுக்கெல்லாம் ஆரம்பம். நாம் இன்று முதல் நிகழ் காலத்தில் வாழ ஆரம்பிக்கிறோமோ அன்றுதான் ஆனந்தத்தை உணர ஆரம்பிப்போம். அன்று தான் நாம் இதுவரையில் இந்த அளவிற்கு கற்பனையில் இருந்திருக்கிறோம் என்பதை கண்டுபிடிப்போம்.

இன்று ஒருவரையொருவர் சகித்துக் கொள்வது இளைஞர்களுக்கு மிகவும் கடினமாகிக் கொண்டே போவதால் திருமணங்கள் எளிதில் முறிந்து விடுகின்றன. இதுபோன்ற நிகழ்வுகள் பார்ப்பதற்கு மிகவும் அனுதாபத்துக்குரியது. இப்பொழுது ஒரு விழிப்பு தேவை ஆழமான புரிந்து கொள்ளுதலே இந்த விழிப்பைக் கொண்டு வரும்.

உறவுகள் என்று வரும் பொழுது நாம் அனைவரும் அடுத்தவரை நோக்கி விரல்களைச் சுட்டத் தயாராக இருக்கிறோம். கை தட்ட ஒலியெழுப்ப இரண்டு கைகள் தேவை என்பதை மறந்து விடுகிறோம். நீங்கள் உங்கள் மீது செயல்படுவீர்களானால் உங்களால் விடயங்களை உங்களுக்கும் மற்றவர்களுக்கும் சிறப்பாகச் செய்யமுடியும். அடுத்தவரும் மாறவேண்டும் என்பது பற்றியெல்லாம் கவலைப்படாதீர்கள். நீங்கள் இது வரையல் எழுதப்பட்டுள்ள எல்லாக் காதல் கதைகளையும் படித்தீர்களானால் நிஜத்தில் செயல்படும் நிலையில் ஆணும் பெண்ணும் முழு நேரமும ஒன்றாக சேந்திருப்பதை எங்கும் காண முடியாது.

ரவீந்திர நாத் தாகூர் எழுதியுள்ள நிரந்த்ரக் காதலர்கள் பற்றிய் ஒரு கதையில் கதாநாயகனும் கதாநாயகியும் நிரந்தரக் காதலர்களாக கங்கையின் இரு கரைகளிலும் தங்கி வசிப்பது என்று திர்மானிக்கிறார்கள். வாரம் ஒருமுறை அவர்கள் படகில் வந்து சந்தித்து விட்டுத் திரும்பி விடுகின்றனர்.

இப்படிச் செய்தார்களானால் அவர்கள் சந்திக்கும் போது நிச்சயமாக அமைதியாகத்தான் இருப்பார்கள. ஒவ்வொரு முறை அவர்கள் சந்திக்கும் பொழுதும் அதில் புத்துணர்ச்சி இருக்கும் ஏனெனில் அவர்கள் ஒன்றாக இருக்கப் போவது சில மணி நேரங்கள் தான் என்பது அவர்களுக்குத் தெரியும். அந்தக் கனங்கள் விலை மதிப்பற்றது.

எல்லா நிரந்தரக் காதலர்களுமே அது ரேமியோ ஜூலியட்டாக இருக்கட்டும், லைலா மஜ்னுவாக இருக்கட்டும், அல்லது அம்பிகாபதி அமராவதியாக இருக்கட்டும், அவர்கள் ஒரு போதும் ஒன்றாக வாழ்ந்ததில்லை! ஒன்றாக வாழ்ந்திருந்தால் அவர்களது நிரந்தரக் காதலை மீண்டும் வேறு மாதிரியாகச் சொல்ல வேண்டியிருந்திருக்கும்!

பிரச்சினை என்னவென்றால் வாழ்க்கைக்குப் பின்னணி இசை கிடையாது! தொலைக்காட்சியில் காதல் கதைகளைப் பார்க்கும் பொழுது அவை அனைத்தும் பின்னணி இசையுடன் வருவதால் உங்களால் எளிதாகக் கனவுலகில் நுழைந்து விட முடியும. இசைக்கு உங்களைக் கரைத்து ஒரு

# மனக்கோட்டைகளைத் தகர்த்தல்!



பலவீனமான நிலைக்கு எடுத்துச் செல்லக்கூடிய சக்தி இருக்கிறது. நீங்கள் காணும் எல்லாக் காட்சிகளுமே முக்கியமாக காதல் காட்சிகள் பின்னணி இசையுடன்தான் வருகிறது. பின்னணி இசையால் தான் அதை நீங்கள் மிகவும் ரசிக்கிறீர்கள். நீங்கள் தொலைக்காட்சி பெட்டி உருவாக்கும் சூழ்நிலையால் முழுவதும் மனோவசியம் செய்யப்பட்டு விடுகிறீர்கள்.

நிஜ வாழ்க்கையில் உங்களால் இசையத் தேடிக் கண்டு பிடிக்க முடியவில்லை. கற்பனையிலிருந்து கவிதை எழுதுவதற்கும் மனதால் உருவகப்படுத்தி கவிதை எழுதுவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. முன்னது வெறும் கற்பனை. அது வானத்தைச் சென்றடைவது போன்றது பின்னது நிஜம். (தொடரும்)

**பரமஹம்ஸ சுவாமி**

# அதிசய உலகம்

**மனதை உருக்கும் தீர்மானம்.. இந்த தெய்வ குணம் யாருக்கு வரும்..?**

உடல்குறைபாடுடன் பிறந்த தமது சொந்தப் பிள்ளைகளை பெற்றோர் கைவிடும் சூழ்நிலையில், நபரொருவர் உடல் குறை பாடுடைய இரட்டைக் குழந்தைகளை தத்தெடுத்து அவற்றுக்கு தனது ஈரலின் ஒரு பகுதியை தானமாக வழங்க முன வந்துள்ள சம்பவம் கனடாவில் இடம்பெற்றுள்ளது.



ஒன்டாரியோ மாநிலத்தைச் சேர்ந்த மைக்கேல் வக்னர் என்ற மேற்படி நபருக்கும் அவரது மனைவிக்கும் ஏற் கனவே 5 சொந்த பிள்ளைகள் உள்ளனர். இந்நிலையில் வியட்நாமிய அநாதரவானவர்களுக்கான இல்லமொன்றிலிருந்து பரம்பரை ரீதியான குறைபாட்டுடன் பிறந்த பின்ஹ் மற்றும் புவொக் ஆகிய மேற்படி ஒன்றரை வயது இரட்டைக் குழந்தைகளை அவர்கள் தத்தெடுத்தனர். இந்நிலையில் தற்போது 3 வயதாகும் அந்த் சிறுமிகளது பாதிக்கப்பட்ட ஈரல்களுக்கு தானமாக வழங்குவதற்கு தனது ஈரல் பொருத்தமாகவுள்ளதை மைக்கேல் அண்மையில் அறிந்து தனது ஈரலின் ஒரு பகுதியை தானமாக வழங்க முன் வந்துள்ளார்.

ஆனால், மருத்துவர்களோ அவரால் வழங்கப்படும் ஈரலின் பகுதியை ஒரு குழந்தைக்கே பொருத்த முடியும் எனவும் இரட்டையர்களில் எந்தக் குழந்தைக்கு ஈரலை அவர் பொருத்த விரும்புகிறார் என்பதை அவரே தீர்மானிக்கும் படியும் கூறி அவரை திகைக்க வைத்தனர்.

இந்நிலையில் தற்போது இரு குழந்தைகளுக்கும் ஒரே சமயத்தில் அறுவை சிகிச்சையை மேற்கொள்ள ஈரலை தானமாக பெறும் முயற்சியில் மைக்கேல் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

# சமைப்போம் சுவைப்போம்

## இறால் பிரியாணி



**தே.பொருட்கள்:-**

இறால் - அரை கிலோ
பாசுமதி அரிசி - 2 கப்
வெங்காயம் - 2
தக்காளி - ஒன்று
பச்சை மிளகாய் - 3
இஞ்சி பூண்டு விழுது - 1ஸ்பூன
தயிர் - 1 ஸ்பூன்
மிளகாய் தூள் - 1 ஸ்பூன்
மஞ்சள் தூள் - சிறிது
மல்லித் தழை, புதினா - ஒரு கைப்பிடி உப்பு - தேவயானஅளவு


இறால் ஊற வைக்க: இஞ்சி பூண்டு விழுது - 1ஸ்பூன், மிளகாய் தூள் - கால் ஸ்பூன், உப்பு மஞ்சள் தூள் - சிறிது தாளிக்க:பட்டை - சிறு துண்டு ஏலக்காய் - 3, பிரியாணி இலை - ஒன்று அன்னாசிப்பூ - பாதி , எண்ணெய் - தேவையான அளவு

**செய்முறை**

முதலில் இறாலை சுத்தம் செய்து ஊற வைக்க கொடுத்தவற்றை சேர்த்து 1 மணி நேரம் ஊற வைக்க வேண்டும். அரிசியை 20 நிமிடம் ஊற வைக்கவும். பச்சை மிளகாய் . வெங்காயம், தக்காளியை பொடியாக நறுக்கி வைக்கவும். குக்கரில் எண்ணெய் விட்டு காய்ந்ததும் தாளிக்க கொடுத்தவற்றை போட்டு தாளிக்கவும். பின் பொடியாக நறுக்கிய வெங்காயம் சேர்த்து வதக்கவும். வெங்காயம் முக்கால் பதம் வதங்கியதும் இஞ்சி, பூண்டு விழுது, பச்சை மிளகாய் சேர்த்து வதக்கவும் வத ங்கியதும் தக்காளி சேர்த்து குழைய வதக்கவும். பின் இறாலைச் சேர்த்து ஒரு முறை பிரட்டி விடவும். அதிகம் வதக்கக் கூடாது. தயிர் மற்றும் தூள் வகைகள் சேர்த்து பிரட்டவும். பின் 2 கப் அரிசிக்கு 3 1/2 கப் தண்ணீர் சேர்த்து கொதிக்க வைக்கவும் தண்ணீர் நன்கு கொதித்ததும் அரிசியை நன்கு வடித்து போடவும். அதனுடன் தேவையான அளவு உப்பு சிறிதளவு நெய் சிறிது புதினா சேர்த்து நன்கு கிளரி ஒரு கொதி வந்ததும் குக்கரை மூடி விசில் போட்டு அடுப்பை சிம்மில் வைத்து 10 நிம்டம் கழித்து இறக்கவும். இறக்கி 10 நிமிடம் கழித்து நன்கு கிளரி பரிமாறவும் சுவையான இறால் பிரியாணி ரெடி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





நல்லூர் பிரதேச சபையின் புதிய கட்டடம் மற்றும் கலாசார மண்டபத் திறப்பு விழா நேற்றுக் காலை பிரதேச சபையின் தவிசாளர் பா.வசந்தகுமார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மங்கல விளக்கேற்றுவதையும் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உள்ளிட்ட விருந்தினர்கள் கட்டடத்தை திறந்து வைப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-உ.சாளின்

# 16 ஆயிரம் ஈழக்குழந்தைகளுக்கு இந்தியாவில் குடியுரிமை இல்லை

## சந்திரஹாசன் தகவல்

(சென்னை)

**இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகளுக்குப் பிறந்த 16 ஆயிரம் குழந்தைகள் குடியுரிமைகள் இல்லாத நிலையில் அகதிகளாக வாழ்ந்து வருவதாக ஈழ அகதிகள் புனர்வாழ்வு அமைப்பின் நிறுவுனர் எஸ்.சி.சந்திரஹாசன் தெரிவித்துள்ளார்.**

இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகள் நாடு திரும்ப வேண்டுமென இலங்கை இந்திய அதிகாரிகள் கலந்துரையாடிவரும் நிலையில் இவ்விடயம் தொடர்பாக அதிகாரிகள் கவனம் செலுத்தி வருகின்றனர்.

அகதி முகாம்களில் பிறக்கும் குழந்தைகள் குறித்து இலங்கை தூதரகத்தில் பதிவு செய்ய வேண்டும். பிறந்த ஒரு வருடத்துக்குள் பதிவு செய்த பின் பிறப்புச் சான்றிதழைப் பெற வேண்டும். கடந்த 30 ஆண்டுகளில் தமிழகத்தில் உள்ள பல்வேறு முகாம்களில் 24 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் பிறந்துள்ளன. இவற்றில் 8 ஆயிரம் குழந்தைகளுக்கு மாத்திரமே பதிவு செய்யப்பட்டிருப்பதாக எஸ்.சி.சந்திரஹாசன் சுட்டிக் காட்டியுள்ளார்.

16 ஆயிரம் பிள்ளைகள் பதிவு செய்யப்பட வேண்டி உள்ளது. இவர்களில் பலர் இளைஞர்களாகி விட்டனர். அவர்கள் நாடு திரும்பினாலும் அது சட்ட ரீதியானதாக அமையாது. எனவே அவர்களின் பதிவுகளை இந்திய அரசாங்கம் உறுதி செய்ய வேண்டியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அகதி முகாம்களில் பிறக்கும் குழந்தைகளைப் இலங்கை தூதரகத்தில் பதிவு செய்யும் நடவடிக்கை சுமுகமாக நடைபெற்றது. அப்போதிருந்த தூதரக அதிகாரி மக்களிடம் சென்று பதிவுகளை நடத்தினார்.

இந்த நிலையில் சந்திரிகா காலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட கொள்கையை மீண்டும் கடைப்பிடிப்பதற்கு இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சந்திரஹாசன் தெரிவித்துள்ளார்.

2012 ஆம் ஆண்டு ஈழ அகதிகள் புனர்வாழ்வு அமைப்பு பதிவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. எனினும், ஈழ ஆதரவு குழுக்களால் இந்த முயற்சி தடை ஏற்பட்டது.

இந்தியாவிலுள்ள அகதிகளை நாட்டுக்கு அழைப்பதற்கு முன்னர் அவர்களை பதிவு செய்வது தொடர்பில் தெளிவான நிலைப்பாடு ஒன்றை இலங்கை அரசாங்கம் எடுக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# குறைந்த விலையில் நெல் கொள்வனவு

## விவசாயிகள் ஆதங்கம்

(தர்மபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கண்டாவளை, தர்மபுரம், குமரபுரம் ஆகிய இடங்களில் பெரும் போக நெற்செய்கையின் அறுவடைப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறு அறுவடைசெய்யப்படும் நெல் இனங்கள் தரகர்களினால் குறைந்த விலைக்கே எடுத்துச்செல்லப்படுவதால் தாம் எதிர்பார்த்த இலாபத்தை ஈட்டமுடியாதுள்ளதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போது ஒருகிலோ நெல் 50ரூபா என அரசினால் நிர்ணயிக்கப்பட்ட நிலையில், தரகர்கள் கிலோ ஒன்றிற்கு 27 ரூபா தொடக்கம் 36 ரூபா வரை வழங்கி கொள்வனவில் ஈடுபடுகின்றனர்.

இதனால் இடைத்தரகர்களும் முதலாளிகளுமே அதிக இலாபத்தை ஈட்டுவதாக விவசாயிகள் ஆதங்கம் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடும் மழை பெய்து வருவதால் இன்னும் ஓரிரு நாட்களில் அறுவடை வேலைகள் நிறைவுபெறும்.

விவசாயிகளுக்கு களஞ்சியப்படுத்தும் வசதி குறைவாக காணப்படுவதால். கொள்வனவாளர்கள் கேட்கும் விலைக்கே விவசாயிகள் நெல்லை வழங்குகின்றனர்.

எனவே நெல் சந்தைப்படுத்தும் சபையினர் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2-282)

# வாகன விபத்தில் பொலிஸ் படுகாயம்

(முக்கொம்பன்)

மோட்டார் சைக்கிளும் டபிள் கப் ரக வாகனமும் மோதிய விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் படுகாயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

இதில் புத்தளத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் எஸ்.ஐ.புஸ்பகுமார என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர் விடுப்பில் புத்தளம் செல்வதற்காக ஏ-9 வீதியூடாக மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தவேளை கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அருகாமையிலுள்ள குறுக்கு வீதியால் ஏ-9 வீதி நோக்கி பயணித்த குறித்த வாகனம் மோதியதிலேயே படுகாயமடைந்தார்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த கிளிநொச்சி பொலிஸார் பொலிஸ் உத்தியோகத்தரை மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டு சென்றதோடு வாகன சாரதியையும் கைது செய்து வாகனத்தையும் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

இது தொடர்பான விசாரணையை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2-283)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 07<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: O/L, DIPLOMA IN ENGLISH, DIPLOMA IN ENGINEERING, COMPUTER COURSES, HND COURSE FOLLOWING (லண்டன் NOT PR)<br>தொ.இ: B/4097 | பிறப்பு: 1970 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 36 சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSC/ ஆசிரியர்<br>தொ.இ: G/352 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 34 உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: O/L/ தனியார் (டோகா)<br>தொ.இ: B/177 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 41 செவ் 8 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/358 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 18 செவ் 4 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ தனியார்<br>தொ.இ: B/181 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 41 செவ் 2 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்<br>தொ.இ: G/359 |
| பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 13 உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்<br>தொ.இ: B/191 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 82 செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: AAT (லண்டன் PR)<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/360 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருட்டு மின்சாரம் பெற்ற நால்வர் கரவெட்டியில் கைது

யாழ்.வடமராட்சி கரவெட்டி பகுதியில் சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற 4 பேர் நேற்று முன்தினமிரவு நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். மின்மானிக்குள் கம்பி வைத்து மின்னோட்டத்தை குறைத்த குற்றச் சாட்டில் மூன்று பேரும் திருட்டு மின்சாரம் பெற்ற ஒருவருமாக மொத்தம் நான்கு பேர் கைது செய்யப்பட்டனர்.


இவர்கள் நான்கு பேரும் பருத்தித்துறை நீதிமன்றில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர். நான்கு பேருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டதுடன் 50 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் செல்ல நீதிபதி மா.கணேசலிங்கம் உத்தரவிட்டார்.

மேற்படி வழக்கு விசாரணைகளை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பருத்தித்துறைப் பகுதியில் திருட்டு மின்சாரம் பெற்ற மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் திருட்டு மின்சாரம் பெற்றனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த வருடமும் அதற்கு முன்னரும் பலர் கைது செய்யப்பட்டு பல ஆயிரம் ரூபா பணத்தை நீதிமன்றங்களுக்கு தண்டப் பணமாக செலுத்தியிருந்தனர்.

இருப்பினும் திருட்டு மின்சாரம் பெறும் நடவடிக்கைகள் யாழ்.மாவட்டத்தில் கட்டுப்பாட்டுக்குள் இன்னும் கொண்டுவரப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3-60)




# கோவில்களை அழித்து விஹாரைகள் அமைப்பு

**மயிலிட்டி மக்கள் குற்றச்சாட்டு**

(யாழ்ப்பாணம்)

**இராணுவத்தினரின் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் அடங்கும் வலிகாமம் வடக்கு மயிலிட்டி பகுதியிலிருந்த எங்கள் கோயில்கள் இடிக்கப்பட்டு பௌத்த விஹாரைகள் கட்டப்பட்டுள்ளன. நாங்கள் குடியிருந்த வீடுகள் தரைமட்டம் ஆக்கப்பட்டுள்ளன என மயிலிட்டி மக்கள் பிரதிநிதி ஒருவர் கவலையுடன் தெரிவித்துள்ளார்.**

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ் கிளையின் ஏற்பாட்டில் 'இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் மற்றும் நல்லாட்சிக்கான மக்கள்' கலந்துரையாடல் நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றபோது அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஆட்சி காலத்தில் இருந்தது போலவே நாம் இன்றும் வாழ்கின்றோம்.இந்த ஆட்சி மாற்றத்தினால் நாம் எதனையும் புதிதாக பெற்றுக்கொள்ளவில்லை. உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள மயிலிட்டி கண்ணகி அம்மன் ஆலயத்துக்கு கடந்த செவ்வாய்க்கிழமை சென்று வழிபாடுகளை நடத்தி பொங்கல் செய்வதற்கு இராணுவத்தினர் அனுமதித்து இருந்தனர்.

கடந்தமுறை தைப்பூச தினத்தன்று இந்தக் கோயிலுக்கு சென்றபோது, அங்கு இருந்த பிள்ளையார் கோவில் தற்போது இடித்து அழிக்கப்பட்டு அந்த கோயில் இருந்த இடத்தில் பௌத்த விஹாரை ஒன்று கட்டப்பட்டுள்ளது.

கடந்தமுறை இருந்த எங்கள் உறவினர் ஒருவரின் வீடும் இடித்தழிக்கப்பட்டு விடுதி கட்டியுள்ளார்கள். அதேபோன்று கடந்த 2002ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரை கோயிலுக்கு செல்ல அனுமதித்து இருந்த காலப்பகுதியில் எங்களுடைய வீடுகள் சிறிய சேதத்துடன் இருந்தன.

தற்போது அந்த வீடுகள் மற்றும் கோயில்கள் அனைத்தும் இடித்து அழிக்கப்பட்டு மண் மேடாக காட்சியளிக்கின்றன.

அச்சுவேலி தொண்டைமானாறு வீதி வழியாக நாங்கள் போக்குவரத்து செய்ய முடியாதவாறு தடை செய்து வைத்துள்ள இராணுவத்தினர், தென்னிலங்கை சுற்றுலா பயணிகளை மட்டும் அந்த வீதியை பயன்படுத்த இராணுவத்தினர் அனுமதித்துள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் ஊடாக நாம் எமது சொந்த ஊர்களுக்கு செல்லலாம் என நினைத்து இருந்தோம்.

இந்த ஆட்சி மாற்றத்திலும் அது சாத்தியப்படும் என்ற நம்பிக்கையும் தற்போது இல்லாமல் போகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி.ப 1 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் மா.ஆனந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் வலிகாமம் வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. கோசலை குலபாலசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப 1.30 மணிக்கு அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஓய்வு பெற்ற தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி. இராதாகிருஷ்ணன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)




## வியாபார நிலையத்தில் திருடும் போது கையும் மெய்யுமாக அகப்பட்ட சிறுவன்

(கரணவாய்)

பருத்தித்துறை மந்திகைப் பகுதியில் உள்ள வியாபார நிலையம் ஒன்றில் தொடர்ந்து இடம்பெற்று வந்த திருட்டு சம்பந்தமாக நேற்று முன்தினம் சிறுவன் ஒருவன் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டுள்ளான்.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

கடந்த ஐந்து நாட்களாக மந்திகைப் பகுதியிலுள்ள வியாபார நிலையமொன்றில் திருட்டு இடம்பெற்று வந்துள்ளது.

கடை உரிமையாளர் மதிய உணவுக்காக கடையைப் பூட்டிவிட்டு வெளியே செல்கின்ற நேரம் இத் திருட்டு இடம் பெற்றுள்ளது.

இதனால் நேற்று முன்தினம் மதிய உணவுக்காகச் சென்று உடனடியாகத் திரும்பி வந்த பொழுது சிறுவன் கடைக்கூரையின் ஓட்டைப் பிரித்து உள்ளிறங்கி திருடிக் கொண்டிருந்துள்ளான்.

சிறுவனைக் கையும் மெய்யுமாகப் பிடித்த கடை உரிமையாளர் பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தார்.

பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-3-60)

## இறுதிப்போட்டி

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் விக்ரம்-ராஜன்-கங்கு கிரிக்கெட் கிண்ணத்துக்கான இறுதிப்போட்டி நாளை மு.ப 9 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த இறுதிப்போட்டியின் சென்றலைற்ஸ் விளையாட்டுக்கழகமும் ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் எஸ்.சபாணந் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)

## கல்வி ஆய்வு நூலகம் திருநெல்வேலியில் திறப்பு



யாழ். பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மா.சின்னத்தம்பியால் உருவாக்கப்பட்ட எம்எஸ் எட்ஸ்பிறிங் என்ற கல்வி ஆய்வு நூலகம் கடந்த 3ஆம் திகதி இல.20, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் திறந்து வைக்கப்பட்டது.

பேராசிரியர் மா.சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நூலகத்தைத் திறந்து வைத்தார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம், யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ஜெயலஷ்மி இராசநாயகம், விரிவுரையாளர் எம். சத்தியகுமார், கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன், திருநெல்வேலி மக்கள் வங்கி முகாமையாளர் சத்தியமூர்த்தி, கூட்டுறவாளர் கனகசபாபதி ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினர்.

தமிழகம் காரைக்குடியில் உள்ள அழகப்பா பல்கலைக்கழகம் சார்ந்த கற்கைநெறிகளை எம்எஸ் எட்ஸ் பிறிங் முன்னெடுத்து வருகின்றது. கல்வியில் முதுகலைமாணிக் கற்கையை நூற்றுக்கணக்கானோர் பயின்று வருகின்றனர்.

நூலகத்தில் பேராசிரியர் எம். சின்னத்தம்பி சேகரித்த கல்வியியல் சார்ந்த நூல்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3-23)

## ஓய்வூதியர் சங்க பொதுக்கூட்டம்

யாழ்.மாவட்ட இலங்கை வங்கி ஓய்வூதியர் சங்கத்தின் 7 ஆவது வருடாந்த பொதுக்கூட்டமும் ஒன்று கூடலும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.30 மணிக்கு இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொதுமுகாமையாளர் காரியாலய கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

சங்கத்தலைவர் ந.சிவரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கொழும்பிலுள்ள தாய்ச் சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட்ட குழுவினர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# புகைப்பட பயிற்சிநெறி

யாழ்.ராகஸ்வரம் இசை மன்றத்தின் ஏற்பாட்டில் இளைஞர் யுவதிகளுக்கான இலவச புகைப்பட பயிற்சி நெறி எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ளது.

ஒருவருட கால புகைப்படப் பயிற்சிநெறியான இப் பயிற்சி நெறி மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ளது.

மேற்படி பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்பும் புகைப்படத்துறை, கலைத்துறை, சமூகசேவைகளில் ஆர்வமுள்ள இளைஞர் யுவதிகள் எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன் 0776510375 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிப்போருக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது. (இ-3.5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முல்லையில் கடும் கடற்கொந்தளிப்பு


முல்லைத்தீவு கடலில் நிலவும் கடும் கொந்தளிப்பு காரணமாக மீனவர்கள் எவரும் கடந்த நானகு நாட்களாக மீன்பிடிக்க கடலுக்கு செல்லவில்லை என முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் அந்தோனிப்பிள்ளை மரியராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

கடல் கொந்தளிப்பை அடுத்து முல்லைத் தீவு மாவட்டத்தின் 26 கடற்றொழிலாளர் சங்கங்களைச் சேர்ந்த மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை. வட்டுவாகல் கடல்நீர் ஏரியில் இறால்பிடி தற்போது ஆரம்பித்துள்ள நிலையில் அதிகளவான மீனவர்கள் இறால் பிடிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

நாரையன் எனப்படும் வெள்ளை நிற இறால் அதிகமாக இங்கு பிடிக்கப்படுகின்றது. வட்டுவாகல் கடல்நீரேரி கடலுடன் இணைக்கும் முகத்துவாரம், இம்மாத இறுதிக்குள் மூடப்படும். கடல்நீரேரிக்குத் தேவையான உவர் நீர் வருவதற்காக தற்போது திறந்து விடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# பேசும் படம் - 18




இதுவும் மீன் தானுங்க...

குறிப்பு : அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் : valampuriijaffna@gmail.com

facebook: www.facebook.com/valam.puri.1

தபால் முகவரி :ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

அல்லது நேரில்.

அனுப்பியவர்:
உ.சாளின்
ஆறுகால்மடம்

# முன்னாள் நிதியமைச்சர் சொக்ஸி காலமானார்

(கொழும்பு)

முன்னாள் நிதியமைச்சரும் அரசியலமைப்பு தொடர்பான சட்டத்தரணியுமான கே.என். சொக்ஸி தனது 82 வயதில் நேற்று கொழும்பில் காலமானார்.

1933ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி பிறந்த கே.என்.சொக்ஸி, ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சராகவும், சட்ட வல்லுநருமாக செயற்பட்டுள்ளார்.

சொக்ஸி புனித தோமஸ் கல்லூரியின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. 93-94ஆம் ஆண்டு காலப்பகுதியில் அமைச்சரவை அமைச்சராக கடமையாற்றியுள்ளார்.

2002ஆம் ஆண்டு ரணில் பிரதமராக பதவி வகித்த காலத்தில் நாட்டின் நிதி அமைச்சராக சொக்ஸி கடமையாற்றியிருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றிற்கு தெரிவு செய்யப்பட்ட சொக்ஸி, 2010ஆம் ஆண்டு வரையில் நாடாளுமன்றில் அங்கம் வகித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# விமான நிலையத்தில் தமிழ் இளைஞன் கைது

(கொழும்பு)

**மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை கிராமத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞன் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக உறவினர்கள் தெரிவித்தனர். டுபாயில் பணிபுரிந்து விட்டு இலங்கை வந்த கொக்கட்டிச்சோலை 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தாமோதரம் பாஸ்கரன் என்ற இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.**

மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலையில் அமைந்துள்ள அவரது வீட்டுக்கு வந்த புலனாய்வுத்துறையினர் இவர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு விட்டு சென்றுள்ளனர். இவர் விடுதலைப்புலி களின் முன்னாள் உறுப்பினர் என்ற சந்தேகத்தின் பேரிலேயே குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன்,

நாட்டுக்கு அனைவரையும் திரும்பி வருமாறு புதிய அரசாங்கம் அறைகூவல் விடுத்துள்ள நிலையில் வெளிநாட்டில் தொழில் புரிந்து விட்டு வந்த இளைஞன் கைது செய்யப்பட்ட விடயமானது தமிழ் மக்கள் மத்தியில் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது இந்த நாட்டில் எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் தமிழ் மக்கள் சுதந்திரத்தினை அனுபவிக்க முடியாது என்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

இலங்கையின் 67 ஆவது சுதந்திர தினம் அனுஷ்டிக்கப்பட்டுள்ள இந்த வேளையில் சந்தேகத்தின் பேரில் தமிழ் இளைஞர்களை கைது செய்யும் பணிகள் தொடர்ந்து இடம் பெற்று வருவது வேதனைக்குரிய விடயம். சிறுபான்மை சமூகம் நிரந்தர தீர்வு ஒன்றை பெற்றுக் கொள்ளும் வரை சுதந்திர காற்றினை சுவாசிக்க முடியாது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் மேலும் தெரிவித்தார். (இ-5)

# அமைச்சர் என்பதை என்னால் உணர முடியவில்லை-கயந்த



தான் ஒரு அமைச்சரான போதிலும், அதனை தன்னால் உணர்ந்து கொள்ள முடியவில்லை என ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

அரசியல் அதிகாரத்தை மறக்கும் காலம் அளவு எதிர்க்கட்சியில் இருக்கும நிலை ஏற்பட்டிருந்தது. இன்று நான் அமைச்சராக இருந்த போதும் என்னால் உணர்ந்து கொள்ள முடியவில்லை.

காலையில் எழுந்தவுடன் எனது வீட்டின் அருகில் 50, 60 கடிதங்களை பார்த்தவுடனே எனக்கு ஞாபகம் வருகின்றது நான் ஒரு அமைச்சர் என்று.

அவ்வாறான ஒருகாலத்தில் எதிர்க்கட்சியில் இருந்தோம். எங்கள் மக்களும் அதேபோன்ற ஒரு மன நிலையிலே உள்ளார்கள்.

நாங்கள் தற்பொழுது இருப்பது அரசாங்க கட்சியில். யாருக்கும் இவ்வளவு காலம் இருந்த அரச அதிகாரத்தினால் செய்துகொள்ள முடியாமல் இருந்த காரியங்களை இப்பொழுது செய்துகொள்ள முடியும.

எப்படியிருப்பினும் கிடைக்கும் பதவி பட்டங்கள் எல்லாம் தற்காலிகமானவை என மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். அதற்கு சிறந்த உதாரணம் மகிந்த ராஜபக்ஷ என ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# அலரிமாளிகை, ஜனாதிபதி மாளிகையை மக்கள் பார்வையிட விசேட நடவடிக்கை

(கொழும்பு)

அலரி மாளிகை மற்றும் ஜனாதிபதி மாளிகை ஆகியனவற்றை மக்கள் பார்வையிடுவதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அலரி மாளிகை மற்றும் ஜனாதிபதி மாளிகை ஆகியவற்றில் தங்கியிருந்தார்.

இந்த மாளிகைகளை தூய்மைப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பணிகள் பூர்த்தியானதன் பின்னர் அடுத்த வாரமளவில் மாளிகைகளை மக்கள் பார்வையிட அனுமதியளிக்கப்படும்.

மேலும், நாடு முழுவதிலும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் பயன்படுத்தப்பட்ட மாளிகைகள் மக்கள் பார்வைக்காக விடப்படும் என அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் தெரிவித்தார். (இ-5)

## சதுர்த்தி உற்சவம்

யாழ்.வண்ணார்பண்ணை வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான சங்கடஹர சதுர்த்தி உற்சவம் நாளை சனிக்கிழமை மு.ப 9.45 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து மூல மூர்த்தி பூஜை, வசந்த மண்டபப்பூஜை என்பவற்றுடன் விநாயகப் பெருமான் திருவீதியுலா வரவுள்ளார். (இ-3)

## மெய்வல்லுநர் போட்டி

யாழ்.வட்டு. மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை 7 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி அதிபர் ந.சபாரத்தின [illegible] இடம்பெறவுள்ளது. (இ-[illegible])

# தமிழ்த்தின போட்டி குறித்த சுற்றுநிருபம் அனுப்பி வைப்பு

(மல்லாவி)

இசுறுபாய பத்திரமுல்லயிலுள்ள கல்வி அமைச்சின் தமிழ் மொழிப் பிரிவினரால் 2015 ஆம் ஆண்டுக்குரிய அகில இலங்கை தமிழ் மொழித் தினப்போட்டிகள் தொடர்பான சுற்றுநிருபம் (2013/33) ஒன்று மாகாண கல்வி அமைச்சின் செயலாளர்கள், மாகாண கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் உட்பட பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

பாடசாலை மட்டப் போட்டிகள் யாவும் இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தி முடிக்கப்படவேண்டும், வலயமட்டப்போட்டிகள் எதிர்வரும் மே மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னரும் மாகாண மட்டப்போட்டிகள் மேமாதம் 30 ஆம் திகதிக்கு முன்னரும் நடத்தி முடிக்கப்படவேண்டும்

தேசிய மட்ட போட்டிகளுக்கான விண்ணப்பங்களை மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் கல்வியமைச்சிற்கு அனுப்பிவைக்க வேண்டும்.

தேசிய மட்டப்போட்டிகள் யாவும் ஜூன் மாதம் 13,14 ஆம் திகதிகளிலும் மற்றும் செப்டெம்பர் மாதம் 19,20 ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளதாக அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்றுநிருபத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2-15)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்.பொன்னாலைச் சந்தியில் பொதுமக்களின் பங்களிப்புடன் அமைக்கப்பட்ட தாகசாந்தி நிலையம், நாராயணன் அன்னதான மண்டபம், சனசமூக நிலையம் என்பன அண்மையில் திறந்து வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானைப் பிரதேச செயலர் அ.சோதிநாதன், வலி.தெற்கு மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் திருமதி.நாகரஞ்சினி ஐங்கரன், நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

நிழல்கள்






திருநெல்வேலி சிறுவர் பூங்கா ஆங்கில பிரிவு மாணவர்களின் ஆங்கில இரவு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி ஆங்கில விரிவுரையாளர் சி.முகுந்தனின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பிரிட்டிஷ் கவுன்சில் முகாமையாளர் திருமதி அமன்டா பிறவுண் வரவேற்கப்படுவதையும் நிகழ்வில் பங்குபற்றியோரையும் படங்களில் காணலாம்.






இலங்கை மனிதவுரிமை இயக்கத்தின் சமூக ஆர்வலர்களான ரி.ஸ்ரீதரன், எஸ்.அருளானந்தம் ஆகியோரின் ஏற்பாட்டில் உடுவில் கற்பக விநாயகர் சனசமூக நிலைய இளைஞர் அணியின் அனுசரணையுடன் அண்மையில் பாடசாலை மாணவர்களுக்கான உபகரணங்கள் மற்றும் குருதி வழங்கிய குருதிக் கொடையாளிகளுக்குமான சான்றிதழ்களும் வழங்கப்பட்ட போது...





வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் 9 முதியோர் சங்கங்களும் கைதடி அரச முதியோர் இல்லத்திற்கும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை கைதடியில் நடைபெற்றது.

சமூகசேவைகள் திணைக்களப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண சுகாதார சமூக சேவைகள் அமைச்சர் ப.சத்தியலிங்கம் கலந்து கொண்ட போது...





கலாபூஷணம் வதிரி கண.எதிர் வீரசிங்கத்தின் நீதியின்றி எமக்கேது வாழ்வு நூல் வெளியீட்டு விழாவில் வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் எஸ்.சந்தியசீலன் நூலை வெளியிட்டு வைப்பதையும் யாழ்.பல்கலைக்கழக சமூகவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஆர்.இராஜேஸ்கண்ணா நூலின் அறிமுகவுரையை நிகழ்த்துவதையும் நூலாசிரியர் உரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராணுவத்தின் ஏற்பாட்டில் துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன

(மல்லாவி)

தென்னிலங்கை சீனிகம எனும் இடத்தில் உள்ள சமுதாய நல்லொழுக்க நிறுவனத்தின் நிதியனுசரணையுடனும் ஏ-9 வீதி, மாங்குளத்தில் உள்ள மூன்றாவது கஜபாகு இராணுவப்படைப் பிரிவினரின் ஏற்பாட்டிலும் மாணவர்களுக்கும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கும் 24 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு கடந்த 2 ஆம் திகதி ஏ-9 வீதியிலுள்ள பொதுநோக்கு மண்டபத்தில் பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெற்றது.

இந்தத் துவிச்சக்கரவண்டிகள் மு/ சண்முகரட்ணம் ஆரம்ப வித்தியாலயம், மு/மாங்குளம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி பயிலும் வறுமைக்கோட்டிற்குட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் மற்றும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்குமே வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2-15)

## பரப்புக்கடந்தான் பிரதேசத்தில் காடுகள் அழிப்பு

(மன்னார்)

மன்னார் மாந்தை மேற்கு பிரதேசத்தின் பரப்புக்கடந்தான் கிராமத்தை அண்டிய பிரதேசத்தில் பெரும் காடுகள் அழிக்கப்படுவதை உடன் நிறுத்துமாறும் உரியவர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கோரிக்கை விடுத்துள்ளார் வடமாகாண மீன்பிடி , போக்குவரத்து , கிராம அபிவிருத்தி வர்த்தக வாணிகம், வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன்.

பரப்புக்கடந்தானில் பெருமளவில் காடுகள் அழிக்கப்படுவதாக அப்பகுதி மக்களால் அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதை அடுத்து கடந்த செவ்வாய்க்கிழமை குறித்த வனப்பகுதிக்கு சென்ற அவர் அங்கு பெருமளவில் காட்டு மரங்கள் அழிக்கப்பட்டு மரங்கள் துண்டுகளாக ஆக்கப்பட்டுள்ளமையை பார்வையிட்டதுடன் தனது கண்டனத்தையும் தெரிவித்தார்.



அங்கு அவர் தெரிவிக்கையில்,

வனவள இலாகாவுக்குச் சொந்தமான நூற்றுக்கணக்கான ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டு பாரிய அழிவு நடந்திருக்கும் போது அத்திணைக்களம் ஏன் கண்டு கொள்ளாமல் இருக்கின்றது.

வனவள இலாகாவிற்கும் இவர்களுக்கும் ஏதும் தொடர்பிருக்குமோ எனவும் சந்தேகம் ஏற்படுகின்றது. அதுமட்டுமன்றி அப்பகுதி பிரதேச செயலாளர் உட்பட அனைத்து அதிகாரிகளும் அமைதிகாப்பது ஏன்?

பரம்பரை பரம்பரையாக அங்கு வாழ்ந்துவரும் பரப்புக்கடந்தான் மக்களிடம் கூட இல்லாத காணி தென் பகுதியை சேர்ந்தவருக்கு வந்தது எப்படி? இதில் பெரிய ஒரு மோசடிக் கும்பல் இருப்பதாக என்னால் உணர முடிகின்றது.

இவ்விடயம் தொடர்பாக பூர்வாங்க விசாரணைகளை ஆரம்பிக்கும்போது பல உண்மைகள் புலப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த காலங்களிலே வனவள இலாகா பல தவறான விடயங்களை மேற்கொள்வதாக எம்மால் அறியப்படுகின்றது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் அச்சங்குளம் பிரதேச மணல் அகழ்வு நடவடிக்கைக்கும் வன இலாகாவே காரணம் என அறிய முடிந்தது. இவ்வாறாக பல திணைக்களங்கள் மக்களுக்கு தீமை விளைவிக்கக் கூடிய பல நடவடிக்கைகளை மேற்கொள்வதால், இவ்விடயத்தை மதிப்புக்குரிய நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறேன்.

நீதிமன்றம் இவ்விடயம் தொடர்பாக தனது தற்றுணிவை பயன்படுத்தி கள விஜயம் ஒன்றினை மேற்கொள்ளுமாயின் பல்வேறு உண்மைகள் புலப்படும்.

இந்தக் காடழிப்பு தொடர்பாக உரிய அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட திணைக்களத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் பின் நிற்கமாட்டேன் என்றார். (அ-2)




## புதிய அரசு தீர்வைத்தராவிட்டால் ஜனநாயக வழியில் போராட்டம்

### வடக்கு விவசாய அமைச்சர் தெரிவிப்பு



தமிழகத்தில் தைப்பொங்கல் திருநாளுக்கு முதல்நாள் பழையவற்றை எரித்துக்கழிக்கும் போகிப் பண்டிகையை வெகுசிறப்பாகக் கொண்டாடுவார்கள். அதேபோன்றுதான் நாமும், பொங்கலுக்கு முதல் வந்த தேர்தலில் பழைய ஜனாதிபதியை எமது வாக்குகளால் எரித்துப் பொசுக்கி அதிகாரத்தில் இருந்து களைந்திருக்கிறோம்.

புதிய அரசாங்கமும் தமிழர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு இனப்பிரச்சினைக்குச் சரியானதொரு தீர்வை முன்வைக்கத் தவறினால் நாம் இன்னுமொரு போகியைக் கொண்டாட வேண்டிவரும் என்று வடமாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல், நீர்வழங்கல், நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி அக்கராயன், ஸ்கந்தபுரத்தில் கடந்த 3 ஆம் திகதி நடைபெற்ற புதிர் எடுத்தல் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தைப்பொங்கல் தமிழர்களின் திருநாள். தமிழர்களின் பிரதான தொழிலான உழவுத் தொழிலுக்கு உதவி செய்த இயற்கைக்கும் சூரியனுக்கும் நன்றி தெரிவிக்கும் முகமாகவும், உழவுத் தொழிலுக்கு முக்கியமான உயிர் இயந்திரங்களாகத் தொழிற்படும் காளைகளுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாகவும் தைப்பொங்கல் விழா கொண்டாடப்படுகிறது.

நன்றியுணர்வு மிக்க எமக்குப் புதிய அரசாங்கம் நன்றி உடையதாக இருக்க வேண்டும். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீது தமிழ் மக்கள் கொண்ட வெறுப்பே, புதிய அரசாங்கம் உருவாகக் காரணமாக அமைந்தது. புதிய அரசாங்கம் மட்டுமல்ல, மேற்குலகமும் எமக்கு நன்றியுடையவர்களாக இருக்கவேண்டும். மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அல்லாத புதிய அரசு ஒன்று இலங்கையில் தோற்றம் பெறவேண்டும் என்ற தேவை அவர்களுக்கு உள்ளது.

இலங்கை ஜனாதிபதியைத் தீர்மானிக்கும் சக்தியாக ஈழத்தமிழர்கள் உள்ளார்கள் என்பது நடந்து முடிந்த தேர்தலில் உலகுக்குத் தெரியப்படுத்தப்பட்டுவிட்டது. ஆனால், புதிய அரசாங்கம் எங்களுக்கு எல்லாம் தந்துவிடும் என்று இலவுகாத்த கிளிகளாக நாம் இருந்துவிடக்கூடாது. புதிய அரசாங்கமும், இலங்கையில் புதிய அரசாங்கம் உருவாகவேண்டும் என்று காத்திருந்த சர்வதேசமும் நன்றி மறந்தவர்களாக எமது தேசிய இனப் பிரச்சினைக்குச் சரியான தீர்வை முன்வைக்கத் தவறும் பட்சத்தில் நாம் ஜனநாயக ரீதியில் போராடுவதற்குத் தயாராக இருக்க வேண்டும். அதற்கு, ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்மக்கள் நாம் அனைவரும் ஒன்றுபட்டுப் பேணிய ஐக்கியத்தைத் தொடர்ந்தும் பேண வேண்டியது அவசியம் என்றும் தெரிவித்துள்ளார்.

இப்புதிர் எடுத்தல் விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, சிவஞானம் சிறிதரன், வடமாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் நாவை குகராசா ஆகியோருடன் அதிகளவான [illegible] விவசாயிகளும் கலந்து கொண்டிருந்தார்கள். (அ-2)

## இடையூறு ஏற்படுத்தாது வீதி புனரமைப்புக்கு உதவுக!

(திருவையாறு)

கிளிநொச்சியிலிருந்து சாந்தபுரத்திற்கு செல்லும் பிரதான வீதி நீண்ட காலமாக புனரமைப்பின்மையால் குன்றும் குழியுமாக காணப்படுவதாக போக்குவரத்தில் ஈடுபடுவோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

சாந்தபுரம் கிராமத்தில் சுமார் 750 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் இவ் வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்வீதி தொடர்பாக கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் மக்களின் கையெழுத்துக்களுடன் மகஜர் ஒன்றை வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் அண்மையில் வழங்கினர்.

இந்நிலையில் கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையினரால் வீதி புனரமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் இவ்வீதி வழியாக கனரக வாகனங்கள் இரவு, பகல் பாராது தொடர்ச்சியாக பயணித்து வருவதால் வீதி செப்பனிடும் பணியில் ஈடுபடும் ஊழியர் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

அத்துடன் செப்பனிடப்பட்டுக் கொண்டிருக்கும் வீதியும் சீர்குலைந்து காணப்படுவதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே வீதி புனரமைப்புப் பணியில் ஈடுபடும் ஊழியர்களுக்கு இடையூறு ஏற்படுத்தாது வீதிப் புனரமைப்புப் பணியை சிறந்த முறையில் முன்னெடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உதவ வேண்டுமென கோரிக்கை விடப்படுகின்றது. (அ-2-273)

## நெல் அறுவடையின் போது திடீரென பெய்தது மழை

### விவசாயிகள் திண்டாட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கையின் அறுவடை பணிகள் துரிதகதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் நேற்று முன்தினம் பெய்த கடும் மழையால் அறுவடைப் பணிகள் தாமதம் அடைந்ததாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

வயல் நிலங்களில் நெல் அறுவடை நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை திடீரென கொட்டித்தீர்த்த மழையால் வயல்களில் வெட்டி வைக்கப்பட்டிருந்த நெற்கதிர்கள் மழையில் நனைந்தன. அவற்றினை உலர்த்துவதற்கு விவசாயிகள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டனர்.

தீடிரென பெய்த மழையினை அடுத்து அறுவடைப் பணிகள், சூடு அடிக்கும் பணிகள் தாமதமாகின.


இதேவேளை உரிய காலத்தில் நெல் அறுவடையை செய்வதற்கான அறுவடை இயந்திரங்களுக்கு பற்றாக்குறை நிலவி வருவதால் விவசாயிகள் நெல்லை அறுவடை செய்வதற்கு காலதாமதம் ஏற்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

தனியாரினால் கொள்வனவு செய்யப்படும் நெல்லுக்கான உத்தரவாத விலையும் குறைவாகக் காணப்படுவதாலும் நெல்லின் விளைச்சல் இம்முறை குறைவாக காணப்படுவதாலும் விவசாயிகள் நட்டத்தை எதிர் கொள்ளவேண்டியுள்ளதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (அ-2-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மரணதண்டனை யாருக்கு?



..அவளும் ஓடிவந்து, கிளியை சோதித்துப் பார்த்து,"ஐயோ! கிளி இறந்துவிட்டதே!" என்று கூச்ச லிட்டாள்.

அதைக் கேட்டு ஃபயிஸ்கான், "ஐயோ! என் தலை உருளப்போ கிறதே!" என்று தலையில் 'படீர்' 'படீர்' என்று அடித்துக் கொண்டு அழுதான். அவன் மனைவி அவனைத் தேற்றினாள். "நான் சொல்வதைக் கேளுங்கள். பீர் பாலிடம் சென்று முழு விவரத் தையும் சொல்லுங்கள். அவர் எப்படியாவது உங்களைக் காப் பாற்றி விடுவார்" என்று யோசனை கூறினாள்.

உடனே, ஃபயிஸ்கான் கூண் டைத் தூக்கிக்கொண்டு பீர்பால் வீட்டை நோக்கி ஓடினான். அவ னைக்கண்ட பீர்பால், கூண்டைக் கையில் எடுத்து வந்திருக்கி றாயே! இந்தக் கிளியை வளர்ப் பதற்கு உன்னிடம் சக்கரவர்த்தி ஒப்படைத்திருந்தார் அல்லவா?" என்றார். "அதை நான் எப்படிச் சொல்வேன் பீர்பால்! ஜாக்கிர தையாக இதை வளர்த்தும், இன்று காலை இது திடீரென இறந்து விட்டது. இந்த செய்தியைக் கேட் டால், சக்கரவர்த்தி எனக்கு மரண தண்டனைதான் அளிப்பார்! நீதான் என்னைக் காப்பாற்ற வேண் டும்!" என்று கூறினான் ஃபயிஸ் கான்.

"கடவுளே! நீ நன்றாக ஆபத் தில் சிக்கிக் கொண்டாயே! சரி, எனக்கு ஒரு நல்ல யோசனை தோன்றி விட்டது. நீ வா என்னு டன்! சக்கரவர்த்தியை சந்திப் போம்" என்று கூறிய பீர்பால் முன்னே செல்ல, பின்னால் ஃபயிஸ் கான் நடுங்கிக்கொண்டே கூண் டைச் சுமந்து கொண்டு நடந்தான்.

அக்பர் தர்பாருக்கு வருமுன் னரே இருவரும் அங்கு வந்து விட்டனர். அக்பர் தர்பாரில் நுழை ந்து, ஆசனத்தில் அமர்ந்ததும் அக்பர் அவரை நோக்கி "என்ன விஷயம்?" என்று கேட்டார்.

உடனே, கிளிக்கூண்டை எடுத் துக் கொண்டு அவரை அணுகிய பீர்பால், கிளியைச் சுட்டிக்காட்டி, "பிரபு! உங்களுடைய கிளி யோகாசனம் கற்றுக்கொண்டு இருக்கிறது. பாருங்களேன்!" என் றார்.

உற்றுப் பார்த்த அக்பர் கோபத் துடன் "என்ன உளறுகிறாய்? கிளி இறந்துவிட்டது! எங்கே அந்த முட்டாள் ஃபயிஸ்கான்? அவனு க்கு மரண தண்டனை விதிக்கப் போகிறேன்!" என்றதும், பயந்து கொண்டே ஃபயிஸ்கான்முன்னே வந்தான். "தயவுசெய்து நான் குறுக்கிடுவதற்கு மன்னி க்கவும்" என்ற பீர்பால் தொடர்ந்து, "பிரபு! அன்று ஒருநாள் இந்தக் கிளியை வளர்க்கும் மிகப்பெரிய பொறு ப்பை ஃபயிஸ்கானிடம் ஒப்படை த்தபோது நீங்கள் சொன்னது நினைவு இருக்கிறதா? "இந்தக் கிளி இறந்துவிட்டது என்ற தகவ லைச் சொல்பவனுக்கு மரண தண்டனை" என்றீர்கள். அவ்வாறு சொன்னது நீங்கள்தானே!" என் றார்.

"ஆம்! அப்படித்தான் சொன் னேன்! இன்றும் அதையே சொல் கிறேன். என்னுடைய கிளி இற ந்து விட்டது.

அதனால்..." என்ற அக்பரை இடை மறித்தார் பீர்பால்.

"கிளி இறந்து விட்டது என்று சொன்னது நீங்கள்தான்! அதை ஃபயிஸ்கான் சொல்லவில்லை. அதனால் இப்போது யாருக்கு மரண தண்டனை தரவேண் டும்?" என்றார் பீர்பால். இதைக் கேட்டு அக்பர் உரக்கச் சிரித்தார்.

"பீர்பால்! நல்ல சமயத்தில் என் கண்களைத் திறந்துவிட் டாய். ஒரு கிளிக்காக என் நல்ல அதிகாரிகளில் ஒருவனுக்கு மரண தண்டனை அளிப்பது சரியல்ல!" என்றார்.

ஃபயிஸ்கானுக்குப் போன உயிர் திரும்பிவர, பீர்பாலுக்கு நன்றி கூறினான். முற்றும்

## இரண்டாம் எலிசபெத்



இரண்டாம் எலிசபெத் 1926 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி பிறந்தார். இவர் இலண்டனில் பிறந்து வீட்டிலேயே கல்வி கற்றார.

இவர் ஐக்கிய இராச்சியம் உட்பட 16 இறைமையுள்ள நாடுகளின் அரசியல் சட்டப் படியான அரசியாக உள்ளார். அனை த்து நாடுகளுக்கும் இவர் தனித்தனியே வெவ் வேறு பெயர்களில் ஆட்சிப் பெயர்களைக் கொண்டிருந்தாலும், ஐக்கிய இராச்சியத்தி லேயே, லண்டனில் உள்ள பக்கிங்ஹாம் அரண்மனையில் இவர் வாழ்கிறார். 54 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட பொதுநலவாயத் தின் தலைவரும் இவராவார். இங்கிலாந்து திருச்சபையின் மிக உயரிய ஆளுநர் ஆவார். பெப்ரவரி 6, 1952 ஆம் ஆண்டில் இவரது தந்தை ஆறாம் ஜோர்ஜ் இறந்தவுடன் ஐக்கிய இராச்சியம், கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, பாக்கித்தான் மேலாட்சி, இலங்கை ஆகிய ஏழு பொது நலவாய நாடுகளுக்கு அரசியாக இவர் முடிசூடினார். இவ ற்றைத் தவிர, ஜெமெய்க்கா, பார்படோஸ், பகாமாஸ், கிரெனாடா, பப்புவா நியூகினி, சொலமன் தீவுகள், துவாலு, சென்லூசியா, சென் வின்செண்ட் மற்றும் கிரெனாடின்ஸ், பெலீஸ், அண்டிகுவா பார்புடா, சென்கிட்ஸ் மற்றும் நெவிஸ் ஆகிய நாடுகளுக்கு அரசியாக உள்ளார். இந்நாடுகளில் இவரது அதிகாரம் மிகவும் பரந்துபட்டவை ஆயினும், பொதுவாக இவர் உள்ளூர் அரசியலில் தலையிடுவதில்லை. 61 ஆண்டு களாக அரசாட்சி புரியும் இவர் பிரித்தானிய அரசர்களிலேயே இரண்டாவது மிக நெடுங்காலம் ஆட்சி புரிந்தவராக விளங்கு கிறார் 1947 இல் எலிசபெத் எடின்பரோ கோமகன் பிலிப்பை மணந்தார். இவர் களுக்கு நான்கு பிள்ளைகள். இவரது முடி சூட்டும் விழா 1953ஆம் ஆண்டு நிகழ்ந்தபோது அதுவே உலகில் முதன்முதலாக தொலைக்காட்சியில் காட்டப்பட்ட பெருமை பெற்றது. அரசியின் பல வரலாற்றுச் சிறப்பு மிக்க வருகைகளிலும் சந்திப்பு களிலும் அயர்லாந்து குடியரசுக்கான அரசுப் பயணமும reciprocal visits to and from the திருத்தந்தையுடனான சந்திப்புக்களும் முதன்மையானவை. தனது ஆளுமைக்கு ட்பட்ட நாடுகளில் பல அரசியல்சட்ட மாற்றங்களை கண்டுள் ளார். ஐக்கிய இராச்சியத்தில் அதிகாரப் பகிர்வு மற்றும் கனடிய அரசியல் சட்டத்தின் திரும்பப் பெறல் போன்றவை. தனிப்பட்ட வாழ்க்கையில் பிள்ளைகளின் பிறப்பும் திருமணமும், பேரக் குழந்தைகளின் பிறப்பு, வேல்சு இளவரசரின் முடிசூடல் மற்றும் ஆட்சியின் மைல்கற்களாக அமைந்த வெள்ளி (1977), தங்க (2002), வைரவிழா (2012)க் கொண்டாட்டங்கள் முதன்மை யான நிகழ்சி களாகும். அரசியின் ஆட்சியில் முக்கிய நிகழ்வுகளாக வட அயர்லாந்து போராட்டங்கள், பாக்லாந்து போர், ஈராக் போர் மற்றும் ஆப்கானித்தான் போர்கள் விளங்குகி ன்றன. அவரது தந்தையின் மறைவு, இளவரசர் பிலிப்பின் மாமா மவுண்ட்பேட்டன் பிரபுவின் கொலை, 1992இல் பிள்ளை களின் மணமுறிவுகள், 1997இல் அவரது மகனின் முன்னாள் மனைவி டயானாவின் மறைவு, தாய் எலிசபெத்தின் மறைவு மற் றும் தங்கை இளவரசி மார்கரெட்டின் மறைவு ஆகியன அவருக்கு ஏற்பட்ட தனிப்பட்ட வருத்தமாக அமைந்தன. அரச குடும்பம் மற்றும் குடியரசு கொள்கை களுக்காக ஊடகங்களில் அவ்வப்போது விமர்சிக்கப்பட்டாலும் இவரது ஆட்சிக்கு மக்களின் முழுமையான ஆதரவு உள்ளதுடன் தனிப்பட்ட முறை யிலும் பெரும் புகழ் பெற்றுள்ளார்.




- 1658 - சுவீடன் மன்னன் பத்தாம் குஸ்டாவின் படைகள் உறைந்த கடலைத் தாண்டி டென்மார்க்கை அடைந்தனர்.
- 1819 - ஸ்டாம்ஃபோர்ட் ராஃபில்ஸ் என்பவரால் சிங்கப்பூர் அமைக்கப்பட்டது.
- 1840 - நியூசிலாந்தில் வைதாங்கி ஒப்பந்தம் பிரித் தானிய அரச பிரதிநிதியாலும், மவோரி தலைவர்களா லும் எட்டப்பட்டது.
- 1863 - சிலோன் பேட்ரியட் (The Ceylon Patriot) இதழ் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டது.
- **1952 - இரண்டாம் ஜோர்ஜின் இறப்பை அடுத்து இரண்டாம் எலிசபெத் ஐக்கிய இராச்சியம் உட்பட 7 நாடுகளுக்கு அரசியானார்.**
- 1959 - டெக்சாஸ் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் நிறுவனத் தைச் சேர்ந்த ஜாக் கில்பி integrated circuit க்கான முதலாவது காப்புரிமத்தைப் பெற்றார்.
- 1959 - கண்டம் விட்டுக் கண்டம் பாயும் முதலாவது டைட்டான் ஏவுகணை புளோரிடாவில் வெற்றி கரமாகப் பரிசோதிக்கப்பட்டது.
- 2000 - டார்ஜா ஹலோனென் பின்லாந்தின் முதல் பெண் ஜனதிபதியானார்.

### பிறப்புகள்

- 1465 - டெல் ஃபெர்ரோ, இத்தாலியக் கணிதவியலாளர் (இ. 1526)·
- 1892 - வில்லியம் மேர்ஃபி, நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ. 1987)
- 1911 - ரோனால்டு ரேகன், ஐக்கிய அமெரிக்காவின் 40ஆவது குடியரசுத் தலைவர் (இ. 2004)
- 1912 - இவா பிரான், கிட்லரின் மனைவி (இ. 1945)
- 1983 - ஸ்ரீசாந்த், இந்திய கிரிக்கெட் வீரர்

### இறப்புகள்

- 1827 - சியாமா சாஸ்திரிகள், கர்நாடக இசை மும்மூர்த்திகளில் ஒருவர் (பி. 1762)
- 1931 - மோதிலால் நேரு, இந்திய அரசியற் தலைவர் (பி. 1861)
- 1952 - ஆறாம் ஜார்ஜ், இங்கிலாந்தின் மன்னன் (பி. 1895)
- 1985 - ஜேம்ஸ் சேஸ், ஆங்கில எழுத்தாளர் (பி. 1906)
- 1991 - சல்வடோர் லூரியா, நோபல் பரிசு பெற்றவர் (பி. 1912)
- 2002 - மாக்ஸ் புருட்ஸ், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1914)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு...

...சுவர் இருந்தால்தானே சித்திரம் தீட்ட முடியும்! இதை கவனிக்கும் பொறுப்பு, இனி என்னை விட என் லதாவுக்கு அதிகம் உண்டு.

இவ்வாறு ரஜினிகாந்த் கூறினார்.

**போட்டோ**

செய்தி சேகரிப்பதற்காக திருமணத்துக்கு நிருபர்கள், புகைப்படக்காரர்கள் வரலாமா? என்று ஒரு நிருபர் கேட்டார். அப்போது, லதாவுடன் கழுத்தில் மாலையுடன் இருக்கும் புகைப்படத்தை நிருபர்களிடம் ரஜினி கொடுத்தார். திருமணத்துக்குப் பிறகு இந்தப் படத்தை போட்டுக் கொள்ளுங்கள். வரவேற்பு நிகழ்ச்சியை பின்னர் சென்னையில் நடத்தப் போகிறேன். திகதி முடிவாகவில்லை. முடிவானபிறகு, என்னை ஆளாக்கிய கலை உலக, பத்திரிகை உலக நண்பர்கள் ஒவ்வொருவரையும் நேரில் அழைப்பேன். திருப்பதி கோவிலில் மாலை மாற்றி தாலி கட்ட விசேஷ அனுமதி பெற்று இருக்கிறேன். அங்கே பத்திரிகையாளர்களும், ரசிகர்களும் வந்து கூட்டம் கூடினால் பிரச்சினை ஏற்படும். எனவே, திருமணத்துக்கு யாரும் வரவேண்டாம் என்றார், ரஜினி.

வந்தா...? என்று ஒரு நிருபர் கேட்க, ரஜினி "டென்ஷன்" ஆகி, உதைப்பேன் என்றார்.

இந்த பதில், நிருபர்கள் மத்தியில் பெரும் பரபரப்பை உண்டாக்கியது.

ரஜினி! இந்த மாதிரி வார்த்தைகளை எல்லாம் பயன்படுத்தாதீர்கள். இதை அப்படியே பிரசுரித்தால் நன்றாக இருக்குமா? என்று, மூத்த நிருபர் ஒருவர் கூறினார். அமைதி அடைந்த ரஜினி, நீங்கள் நேருக்கு நேராக இப்படி கூறியதைப் பாராட்டுகிறேன். அப்படிச் சொன்னதற்கு வருந்துகிறேன்... சாரி! ஆனாலும், திருப்பதிக்கு யாரும் வரவேண்டாம். கமெராவோட யாரையாவது பார்த்துட்டா உதைக்கிறதைத் தவிர வேறு வழி தோணாது! என்றார், ரஜினி!



மணக்கோலத்தில் ரஜினி-லதா

## ரஜினி- லதா திருமணம் திருப்பதியில் நடந்தது

ரஜினிகாந்த் - லதா திருமணம், 26-2-1981 அன்று அதிகாலை திருப்பதியில் நடந்தது. திருமணம் முடிந்ததும், ரஜினி உடனடியாக சென்னைக்குத் திரும்பி, படப்பிடிப்பில் கலந்து கொண்டார்.

திருமணத்துக்கு முதல் நாள் இரவு, ரஜினிகாந்த் கார் மூலம் திருப்பதி சென்றார். ரஜினியின் அண்ணனும், ஒரு சில நெருங்கிய உறவினர்கள் மட்டும் உடன் சென்றனர். மணமகள் லதா, அவரது பெற்றோர், அக்கா சுதா, ஒய்.ஜி. மகேந்திரன் ஆகியோர் வேறொரு காரில் சென்றனர். திருப்பதியில், பயணிகள் விடுதியில் (காட்டேஜ்) தங்கினார்கள்.

**சுப்ரபாதம் முழங்க தாலி கட்டினார்**

அதிகாலை 3.30 மணிக்கு திருப்பதியில் சுப்ரபாதம் நிகழ்ச்சி நடந்தது. திருப்பதி ஏழுமலையான் சந்நிதியில் அதிகாலையில் பாடப்படும் துதிப்பாடல் "சுப்ரபாதம்."

அப்போது ரஜினி - லதா திருமணம நடந்தது. லதா கழுத்தில் ரஜினி தாலி கட்டினார்.

ரஜினி காலில் விழுந்து வணங்கினார், லதா.

பிறகு இரு குடும்பங்களையும் சேர்ந்த பெரியவர்கள் காலில் விழுந்து வணங்கி, மணமக்கள் ஆசி பெற்றார்கள்.

திருமணம் முடிந்து, சாமி சந்நிதியை விட்டு ரஜினியும், லதாவும் வெளிவந்தபோது, இரண்டொரு பத்திரிகையாளர்களும், போட்டோ கிராபர்களும் எப்படியோ அங்கு வந்து போட்டோ எடுக்க முயன்றனர். எவ்வளவோ சொல்லியும் அதைக் கேட்காமல் இங்கு வந்து விட்டார்களே என்று "டென்ஷன்" ஆனார், ரஜினி. உறவினர்கள் அவரை சமாதானப்படுத்தி, வேறு வழியாக அழைத்துச் சென்றுவிட்டனர்.

**படப்பிடிப்பு**

திருப்பதியிலிருந்து அருகில் உள்ள திருச்சானூர் சென்று, பத்மாவதியை தரிசனம் செய்துவிட்டு, ரஜினிகாந்தும் மற்றவர்களும் உடனடியாக சென்னைக்குத் திரும்பினார்கள். அன்று காலை 10 மணிக்கு, ஏவி.எம்.ஸ்டுடியோவில் கே.பாலசந்தரின் **"நெற்றிக் கண்"** படப்பிடிப்பு நடந்தது. அதில் ரஜினிகாந்த் கலந்து கொண்டார். 7 மாதங்களுக்கு முன், பாலசந்தரின் **"தில்லுமுல்லு"** படப்பிடிப்பின்போது அரும்பிய ரஜினி - லதா காதல், அதே பாலசந்தரின் **"நெற்றிக்கண்"** படப்பிடிப்பின்போது திருமணத்தில் முடிந்தது குறிப்பிடத்தக்கது.

**திருமண வரவேற்பு**

திருமணத்துக்கு யாரும் வரவேண்டாம். ஆனால், திருமண வரவேற்புக்கு எல்லோரும் வாருங்கள். நானே உங்களுக்கு அழைப்பு கொடுப்பேன் என்று ஏற்கனவே ரஜினி அறிவித்திருந்தார். அதைப் போலவே, திருமணத்துக்கு 2 வாரம் கழித்து (மார்ச் 14ஆந்திகதி) சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள தாஜ் கோரமண்டல் ஓட்டலில் வரவேற்பு நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தினார். பிரமுகர்களும், திரை உலகத்தினரும் பெருந்திரளாக வந்து மணமக்களை வாழ்த்தினார்கள்.

*(தொடரும்)*



# கருவாச்சி காவியம்



**வைரமுத்து- 69**

....கட்ன மூங்கி மரத்துல பச்சைத் தெனங்கிடுக வச்சான்.

அதுமேல பச பசபசன்னு வைக்கோலப் பரப்புனான்.

தலை மாட்டுல ஒரு கயிறு விட்டான்.

போற பொணம் போறேன் போறேன்னு தலையாட்டிட்டே போகாமக் கழுத்துல சேத்துக் கட்டுறதுக்கு.

சலவைக் கார வீட்ல ஒரு பழைய சீலய வாங்கி வைக்கோல் மேல போட்டுப் பொத்திப் பஞ்சு மெத்தையாக் கிட்டான் பாடைய.

பாடை கட்டி முடிக்க......

தெரு முனையிலிருந்து அழுகையில கூடி மொது மொதுன்னு வந்து சேந்துட்டாக மொதலக்கம்பட்டி ஆளுக.

பிறந்த வீட்டு ஆசாரப்படி பச்ச கொண்டு வந்து பொணத்துக்குப் பக்கத்துல நட்டிருந்த கொடிக் கள்ளி மேல கோடி சாத்தி அழுதாக.

வந்தவுக கட்டிப் புடிச்சு அழுதும் கருவாச்சி அழுகல.

நீர்மால முடிஞ்சிருச்சு; நேரம் நெருங்கிருச்சு.

இப்பவோ பெறகோன்னு மேகம் வேற நெறமாசக்காரி மாதிரி நிக்கிது.

எடுங்கப்பா எடுங்கப்பான்னு வெளியே ஒரு சத்தம் கேக்கவும் தோட்டி உள்ள ஓடிவந்து ஆத்தா மேல போத்திக் கொண்டு போக ஒரு சீல இருக்கான்னு கேட்டான்.

அதுவரைக்கும் கல்லு மாதிரி உக்காந்திருந்த கருவாச்சி தீ விழுந்த பட்டாசு மாதிரி திடீர்ன்னு வெடிச்சு எந்திரிச்சா.

நேத்து மாரடிக்கப் போயிக் கூலியா வாங்கிட்டு வந்த சீலைய ஆத்தா மேல போட்டு எம் மொதச் சம்பாத்தியமே உன் கடைசிச் சீலயாப் போச்சே ஆத்தான்னு அழுதா பாருங்க...



வந்திருந்த சனத்துக் கெல்லாம் நெஞ்சுக்கறி வெந்து போச்சு.

பொணந்தூக்க வந்த இரண்டு எளந்தாரிப் பயல்களத் தூக்கித் துண்டா எறிஞ்சுட்டு ஆத்தா காலடியில மண்டி போட்டு உக்காந்து அவ திரேகத்தையே வச்ச கண்ணு வாங்காமப் பாக்குறா கருவாச்சி.

நரம்புதெரியப் பிரம்பு மாதிரி சுருங்கிக் கெடக்கு எனக்கு கைகால் புடிச்சு விட்ட கையி.....

நட்டுவச்ச குச்சியா வெறைச்சுப் போய் நிக்கிது காடுவெளியயெல்லாம் கல்லுக்குத்தி முள்ளுத்தச்ச காலு.....

ஈ உக்காந்து ஊக்காந்து ஈரப் பசையில்லாமக் கெடக்கு எனக்கு முத்தங்கொடுத்த வாயி புழிஞ்சு காயப் போட்ட தோல் மாதிரி தொங்கிக் கெடக்கு நான் முட்டி முட்டிப் பால் குடிச்ச மொல ஆனா எங்கடியாத்தா ஓடி ஒளிஞ்சு போச்சு கருவாச்சின்னு என்னிய வாய் நெறையக் கூப்பிட்ட சொல்லு?

ரெண்டு கையாலயும் தன் மூஞ்சியில தானே சப்புச் சப்புன்னு அறஞ்சு அறஞ்சு அழுகிறா கருமாயப்பட்ட கருவாச்சி.

அவ அழுது ஓயட்டும்ன்னு கொஞ்சம் ஒதுங்கி நிக்கிறாக பொணம் தூக்க வந்த ஆளுக.

போகாத ஆத்தா போகாத.

புத்தில்லாதவ நானு; பொழைக்கத் தெரியாத சிறுக்கி.

ஒன் சுண்டுவெரலைப் புடிச்சே சுத்தி வந்தவ.

இப்பப்பொழச்சுப் பாருடின்னு சொல்லி என்னிய ஒத்தையில விட்டுட்டுப் போறியே.. ஒனக்கே இது நல்லாருக்கா?

அப்பன் இல்லாமப் பொழைக்கிறது எப்படின்னு சொல்லிக் குடுத்தியே... ஆத்தா இல்லாமப் பொழைக்கிறது எப்படின்னு சொல்லிக் குடுத்தியா?


நீ போயிட்டா எனக்கு நாதியிருக்கா? ஒன்னியத் தூக்க விடமாட்டேன்; தூக்க விடமாட்டேன்.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# எமது கண்டல் வளத்தை காப்போம்...




**(சென்ற வாரத் தொடர்ச்சி)**

**கண்டல் சூழலின் முக்கியத்துவம்**

ஆதிகாலம்தொட்டே மனிதன் கண்டல் சூழல் தொகுதியில் இருந்து நிறைய நன்மைகளை பெற்று வந்துள்ளான். ஆனால் அதன் முக்கியத்துவத்தினை அவன் நன்கு அறிந் திருக்கவில்லை. அவ்வாறாக இச்சூழல் தொகுதியில் இருந்து பெறும் பயன்களாவன,

இக்கண்டல் சூழல் தொகுதியானது மீன்களுக்கு உணவு(Food), உறைவிடம்(Habitat), பாதுகாப்பு(Protection) மற்றும் இனப்பெருக்கம் (Reproduction) போன்றவற்றுக்கு பொருத்


*Rhizophora* sp


*Avicennia* sp


*Bruguiera* sp


*Lumnitzera* sp

தமான சூழலை வழங்குகின்றது. இதனுடன் நண்டு, இறால், ஆளி (Oyster) போன்ற உயிரினங்கள் அதிகளவில் வளர்வதற்குரிய சாதகமான சூழல் தொகுதியும் இதுவாகும். இதனால் இச்சூழல்தொகுதி உயிர்ப் பல்வகைமையை பாதுகாப்பதுடன் மீன், நண்டு இறால் இனங்களின் வளம் அதிகரிக்கின்றதன் காரணமாக மனிதனுக்கு மீன்பிடித்தொழிலில் பாரிய பங்களிப்பை வழங்குகின்றது.

ஆராய்ச்சிகளின் முடிவாக கண்டல் இல்லாத இடங்களில் பிடிபடும் இறால், மீன்களின் அளவு குறைவாக காணப்படுவது அறியப்பட்டுள்ளது. இக்காடுகள் இல்லையெனில் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த உணவு மீன், ஒட்டுமீன், மொலாஸ்கா இனங்கள் அழிந்துவிடும் அபாயம் உள்ளது.

எரிசக்தி திறன் அதிகமாக உள்ளதால் இம்மரங்கள் (Avicennia, Rhizophora) விறகிற்காகவும், கரிக்கட்டைகள் (Charcoal) உருவாக்கவும் பயன்படுகின்றன. Rhizophora இல் இருந்து பெறப்படும் காபன் கரியானது மிக உயர்ந்த வினைத்திறன் உடையதாகும்.

கண்டல் மரங்கள் உயர் தனின் அளவை கொண்டிருப்பதனால் இயற்கையாகவே இவை பூச்சி, புழு அரிப்பிலிருந்து பாதுகாக்கப்படுகின்றது. அதன் காரணமாக நீண்ட நாட்களுக்கு சேதம் எதுவுமின்றி காணப்படுகின்றன. எனவே கட்டட வேலைக்காகவும், Rhizophora, Bruguiera, Avicennia போன்றவற்றிலிருந்து பெறப்படும் வெட்டு மரங்கள் படகுகள், கட்டடம், மீன்பிடி உபகரணங்கள் செய்யவும் சில தீக்குச்சி தயாரிப்பதற்காகவும் பயன்படுத்தப்படுகின்றன.

இதனால் கண்டல் தாவரங்கள் வீட்டு பாவனைப் பொருட்களான தளபாடங்கள் செய்யவும், மேலும் சுவாச வேர்கள் (Pne umatophores) மூடி (தக்கை) செய்யவும் மற்றும் மீன்பிடி வலைகளுக்கு மிதவையாகவும் (Floats) உபயோகிக்க பயன்படுத்தப்படுகின்றன. Nypa இனத்தின் ஓலைகள் வீட்டுக் கூரைகள் வேய பயன்படுத்தப்படுகின்றன.

தொப்பிகள் கூடைகள் இம்மர ஓலைகளில் இருந்து தயாரிக்கப்படுகின்றன. இம்மரத்தின் இளம் பூவிலிருந்து சர்க்கரை, சாராயம், மற்றும் வினிகர் போன்றன உற்பத்தி செய்யப்படுகின்றன.

இம்மரங்களும், மரப்பட்டைகளும் ஆலைகளில் காகிதம் தயாரிக்கவும், செயற்கைப்பட்டு தயாரிக்கவும் பயன்படுத்தப்படுகின்றன.

Rhizophora, Ceriops இலிருந்து பெறப்படும் தனின் வலையை சாயமிட உதவுகின்றது. இது அதன் பாவனைத்தன்மையின் காலத்தை கூட்டுகின்றது. இம்மரங்களின் இலை, பட்டைகளில் காணப்படும் தனின் (Tannin) தோல் பதனிடும் சாலைகளிலும் பயன்படுத்தப்படுகின்றன.

இக்கண்டல் மரங்கள் கடலோரங்களில் அமைந்துள்ளதால் கடல் கொந்தளிப்பு, புயல் மற்றும் வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்களிலிருந்து மக்களை பாதுகாக்கின்றன. 2004 December 26 ஆம் திகதி ஆழிப் பேரலையால் (Tsunami) கடும் உயிர் சேதங்கள் ஏற்பட்டன. ஆனால் இக் காடுகள் இருந்த இடங்களில் அதிகளவில் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை. உதாரணமாக அந்தமான் தீவுகளை குறிப்பிடலாம்.

கண்டல் மரங்களும் அதன் வேர்களும் உறுதியாக காணப்படுவதால் மண்ணரிப்பை கட்டுப்படுத்துவதில் பெரும் பங்கினை வகிப்பதுடன் தரையில் உள்ள கழிவுப் பொருட்கள் கடல் நீரேரியில் நேரடியாக கலப்பதை தடுக்கும் வடிகட்டியாக (Filters) செயற்படுவதுடன் கரையோரம் அரிக்கப்படுவதையும், கடல் நீரேரி தூர்ந்து போவதையும் தடுக்கின்றது.

கண்டல் காடுகள், ஆற்று முகங்கள், கழிமுகங்கள், வாவிகளின் கரையை பாதுகாப்பதுடன் அடையல்களை வேர்கள் பிடித்து வைத்திருப்பதனால் வாவிகளையும், முருகைக் கற்பாறை, கடலின் புற்படுக்கை என்பவற்றையும் அடையல்கள் சேராமல் பாதுகாக்கின்றது. இயற்கையாக நிலம் வளர்கும் செயற்பாட்டில் ஈடுபடும் இரண்டு சூழற்றொகுதிகளில் கண்டலும் ஒன்றாகும்.

இம்மரங்களில் இருந்து உதிரும் சருகுகள், வடிகட்டும் உக்கல் பொருட்கள் என்பன பக்றீரியா (Bacteria), பங்கசு(Fungus) போன்றன நுண்ணங்கிகளால் பிரித்தழிக்கப்பட்டு உருவாக்கப்படும் அழுகல்கள் (Detritus) பல உயிரினங்களுக்கு உணவாக அமைகின்றன.

அமைதியான சுற்றுச் சூழலாக இக்காடுகள் இருப்பதால் எண்ணற்ற உயிரினங்களுக்கு உறைவிடமாகவும் அதிக உணவுப்பொருட்கள் காணப்படுவதால் உணவிடமாகவும் அமைந்துள்ளது. இதனால் plankton அதிகளவில் உற்பத்தியாகி ஏனைய உயிரினங்களுக்கு (மீன், இறால்) உணவளிக்கின்றன.

உதாரணமாக மரமாமரம் (Sonneratia) கண்டல்(Avicennia) மரங்களின் கனிகள் ஒருசிலரால் உணவாக உட்கொள்ளப்படுகின்றதுடன் மருந்தாகவும் உபயோகிக்கப்படுகின்றது.

இதன் மருத்துவ பயன்பாட்டை எடுத்து நோக்கும் போது Bruguiera தாவர இலைச்சாறு இரத்த அழுத்தத்தை குறைக்கவும், Exoecaria மரச்சாறு தொழுநோயை குறைக்கவும், Xylocarpus மரச்சாறு வயிற்று போக்கினை தடுக்கவும் பயன்படுத்தப்படுகின்றது. Rhizophora வகை மரச்சாறு எயிட்ஸை கட்டுப்படுத்தும் வல்லமை கொண்டது என கடல் வாழ் உயிரியல் மையம் (அண்ணா பல்கலைக்கழகம்) மேற்கொண்ட ஆராய்ச்சியின் போது தெரிய வந்துள்ளது.

இக்காடுகளின் இலைகள் கால்நடை தீவனமாகவும் பயன்படுத்தப்படுகின்றன. அதிகளவில் புரதச்சத்துள்ள கண்டல் மர இலைகளை கால்நடைகள் விரும்பி உண்ணுகின்றன. கண்டல்மர இலைகளில் Tannin குறைவாகவும் சத்துப் பொருட்கள் அதிகமாகவும் காணப்படுவதாலும் புரதம் கொழுப்பு மிக்க பால் அதிகளவில் இக் கால்நடைகள் உற்பத்தி செய்வதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

இக்காடுகள் பறவைகள் மற்றும் காட்டு விலங்குகளுக்கு மிகச்சிறந்த சரணாலயமாக விளங்குகின்றன.

இயற்கை எழில் கொஞ்சும் இக் காடுகள் மிகச்சிறந்த சுற்றுலாத்தளங்களாக அமைந்துள்ளன. அதற்கு காரணம் இக்காட்டு மரங்களின் தகவமைப்பும் எண்ணற்ற பறவையினங்கள் பல்வேறு நாடுகளிலிருந்து வந்து செல்வதும் மற்றும் பலதரப்பட்ட விலங்கினங்கள் இருப்பதும் தான்.

**இலங்கையின் கண்டல் காடுகள்...**

இந்து சமுத்திரத்தின் முத்து என அழைக்கப்படும் இலங்கைத் தீவானது $65610km^2$ பரப்பளவை உடையது.

இது 1700km நீளமான கடற்கரை ஓரத்தினால் சூழப்பட்டுள்ளது. இலங்கைத் தீவானது உயர் உற்பத்தி திறனைக் கொண்ட கரையோர சூழல் தொகுதிகளான பொங்குமுகங்கள், வாவிகள், முருகைக்கற்பாறைகள், கண்டல்காடுகள், உப்பளங்கள், மணதிட்டுக்கள் என்பவற்றை கொண்டுள்ளது.

ஏறத்தாழ 40% உலக கண்டல் காடுகள் ஆசியாவிலேயே செறிவடைந்துள்ளது. இலங்கையில் கண்டல் காடுகள் மொத்த நிலப்பரப்பின் 0.1-0.2% ஆக காணப்படுகின்றது.

1986 ஆம் ஆண்டளவில் இதன் பரப்பின் 12,570ha ஐ இக் காடுகள் மூடியிருந்தன. 1994 இல் 11,500ha ஆகவும் 2003 ஆம் ஆண்டளவில் அண்ணளவாக 6,083 ha ஆகவும் மிகவிரைவாக மனித செயற்பாடுகளினால் இக் காடுகள் அழிவடைந்து அதன் பரப்பளவு குறைவடைந்துள்ளதை புள்ளிவிபரத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இக் கண்டல் காடுகள் 15 மாவட்டங்களில் பரம்பல் அடைந்து காணப்படுகிறது.

1992ஆம் ஆண்டு இருந்த இலங்கையின் கண்டல் காடுகளின் பரப்புக்கள் மட்டக்களப்பு-1421ha, யாழ்ப்பாணம்-260ha, புத்தளம்-2264ha ஏனைய மாவட்டங்கள் உள்ளடங்கலாக 8687 ஹெக்டேயர்களாகும்.

(தொடரும்)

சி.பிரதீபா
விரிவுரையாளர்,
விலங்கியற்றுறை,
யாழ்.பல்கலைக்கழகம்

## வாரத்திற்கு ஒரு புதிர்! 129

பூமி அதிர்வை அளக்கும் உபகரணத்தின் பெயர் என்ன?

**புதிர் 129 இற்கான விடைகளை 16.02.2015 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:** **திரு.க.கஜபதி**

ஆசிரியர் பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
விரிவுரையாளர், விலங்கியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.
P.D.BOX 57, திருநெல்வேலி.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக தாவரவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.A.C.தவரஞ்சித்திடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ். பல்கலைக்கழகம்.

**புதிர் 128 க்கான 250/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

தனுஜா தசரதன்
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

**புதிர் 128 க்கான கேள்வியும் விடையும்:**

இலங்கையின் தேசிய மரத்தின் தாவரவியல் பெயர் என்ன?

Mesua Ferrea

### யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 129

சரியான விடை:-.............................................

முழுப்பெயர்:-.............................................

முகவரி:-.............................................

தொ.பே. இல:.............................................


கையொப்பம்:.............................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு கட்சிகள் வேட்பு மனு வழங்கக் கூடாது

## மல்வத்து பீடாதிபதி கோரிக்கை

**ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு அரசியல் கட்சிகள் வேட்பு மனு தாக்கல் செய்ய அனுமதிக்க க்கூடாது என கண்டி மல்வத்து பீடாதிபதி ஸ்ரீ சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார். இதேவேளை பாராளுமன்ற தேர்தல் விரைவில் நடைபெறவுள்ளது. தேர்தலில் போட்டியிட அனைவருக் கும் சந்தர்ப்பம் வழங்கப்படக்கூடாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.**



ஊழல் மோசடிகள், கொள்ளைகள், சண்டித்தனங்களில் ஈடுபட்டவர்களுக்கு அரசியல் கட்சிகள் வேட்பு மனுத் தாக்கல் செய்ய சந்தர்ப்பம் அளிக்கக் கூடாது.

முன்னுதாரணமான தலைவர் ஒருவர் நாட்டை ஆட்சி செய்வதனால் இனிவரும் காலங்களில் ஊழல் மோசடிகள் இடம்பெறாது என மக்கள் கருதுகின்றனர்.

பெற்றோலிய வள அமைச்சு மிகவும் முக்கியமான அமைச்சு இந்த அமைச்சின் ஊழல் மோசடிகள் தொடர்பில், அமைச்சர் சம்பிக்க ரணவக்க அம்பலப்படுத்தியிருந்தார்.

கடந்த அரசாங்கம் இதன் காரணமாக அவரது அமைச்சுப் பதவியை மாற்றியது.

இந்த அமைச்சின் பணிகள் மதிநுட்பத்துடன் சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட வேண்டுமென மல்வத்து பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

பெற்றோலிய வள இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார நேற்று முன்தினம் மல்வத்து பீடாதிபதியை சந்தித்து ஆசி பெற்றுக் கொண்ட போது, இந்தக் கருத்துக்கள அவரால் வெளியிடப்பட்டன. என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## சைவபரிபாலனசபை போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் நடத்தப்படும் பண்ணிசை, திருக்குறள் மனனப்போட்டிகள் நாளை மறுதினம் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளதாக சைவபரிபாலன சபைச் செயலாளர் அறிவித்துள்ளார். (இ-3)

## வெலே சுதா ஆஜர்படுத்தவில்லை

ஹெரோயின் போதைப் பொருள் தொடர்பில் வெலே சுதா என்றழைக்கப்படும் சமந்த குமாராவுக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கு நேற்று உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதிலும் சந்தேக நபரை இரகசிய பொலிஸார் நீதிமன்றில் ஆஜர்படுத்தவில்லை.

பாதுகாப்பு காரணங்கள் காரணமாக சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த முடியாதுள்ளதாக இரகசிய பொலிஸார் நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

இதேவேளை போதைப்பொ ருள் கடத்தல் மன்னனான வெலே சுதாவுக்கும் மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் அங்கம் வகித்த இளம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதாகவும் அவர்கள் தொடர்பான தகவல்களை வெலேசுதாவெளியிட்டுள்ளதாகவும் இரகசிய பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதனை பொலிஸ்மா அதிபரும் உறுதிப்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50-80 | 80 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 300 | 400 | 280 | 350 |
| தக்காளி | 220 | 260 | 180 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 50 |
| கோவா | 100 | 100 | 80 | 120 |
| கரட் | 180 | 140 | 180 | 200 |
| பூசணி | 100 | 100 | 80 | 100 |
| புடோல் | 40 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 100 | 100 | 90 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 70 | 80 |
| பாகற்காய் | 120 | 120 | 100 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 150 | 120 | 160 | 150 |
| லீக்ஸ் | 250 | 250 | 240 | 350 |
| பீற்றூட் | 20 | 160 | — | 140 |
| கறிமிளகாய் | — | 300 | 240 | 240 |
| முருங்கைக்காய் | — | 650 | — | — |
| போஞ்சி | 160 | 140 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | — | 60 | 60 | — |
| கீரை - 1 பிடி | 20 | 25 | 20 | 20 |
| தேசிக்காய் | 20 | 40 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 50-60 | 30-40 |
| இராசவள்ளி | 110 | 120 | 120 | 100 |
| வெங்காயப்பூ | .100 | 140 | 150 | 140 |

## facebook (f) :.பேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 275

பிருந்தன்





கண்ணன் பிருந்தா




தமிழ் பசங்க எழில்வேந்தன்




டொறின் மன்மதநாயகம்




ஐங்கரன் சிவசாந்தன்



பெண் : வாழ்த்து அட்டை இருக்கா?
கடைக்காரர் : இருக்கு
பெண் : நான் உன்னை மட்டும் காதலிக்கிறேன் என்று எழுதிய அட்டை உள்ளதா?
கடைக்காரர் : இருக்கு
பெண் : அப்படியானால் 12 வாழ்த்து அட்டை தாருங்கள்.
கடைக்காரர் : ???????

சால்ஸ் நியூமன்




நீங்கள் பார்த்த :.பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி நினைத்தால் அதுதான் சட்டம்!



…ஷிராணிபண்டார நாயக்கவின் கதை அதை விட வித்தியாசமானதாகும். அவரும் இதற்கு முன்னர் இருந்த பல பிரதம நீதியரசர்களைப் போலவே சாதாரரண பிரதம நீதியரசர் தான்.

இந் நாட்டு ஜனநாயகத்திற்கு பேரடியாக அமைந்த 18 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் ஷிராணியின் காலத்திலேயே உயர் நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

கடந்த அரசாங்கம் அவர் மூலம் அந்த திருத்தத்துக்கு சட்ட அங்கி காரத்தைை பெற்றுக் கொண்டு அவரை பதவியிலிருந்து நீக்கியது.

இந்த அரசாங்கம் அவரது பதவியை மீண்டும் அவருக்கு வழங்கி அந்த திருத்தத்தையும் இரத்துச் செய்யப் போகிறது. ஜனநாயகத்தின் பார்வையில் கடந்த அரசாங்கம் செய்தது தவறே. இந்த அரசாங்கம் செய்தது சரியானதாகும்.

ஆனால் இரண்டு அரசாங்கங்களும் ஷிராணி பண்டாரநாயக்க சம்பந்தமாக நடவடிக்கை எடுத்த முறை பல கேள்விகளை எழுப்புகின்றன.

தனிப்பட்ட பிரச்சினையாகவே மகிந்த ராஜபக்ஷ் ராஜபக்ஷ குடும்பத்துக்கும் ஷிராணிக்குமிடையே பிரச்சினை உருவாகியது. அந்தப் பணிப்போர் 2012 ஆம் ஆண்டு இறுதியில் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் அறிமுகப்படுத்திய திவிநெகும சட்டமூலத்தின் காரணமாக வெளிப்படையான போராக மாறியது.

அந்த சட்ட மூலத்துக்கு சகல மாகாண சபைகளினதும் அங்கிகார்த்தை பெற வேண்டும் என பிரதம நீதியரசர் ஷிராணி தீர்ப்பு வழங்கினார்.

அப்போது வட மாகாண சபை தெரிவு செய்யப்படாதிருந்த தினால் இது தமது சட்ட மூலத்தை முடங்கச் செய்ய வழங்கிய தீர்ப்பாகவே அரசாங்கம் கருதியது. அதுவும் சரியாக இருக்கலாம்.

ஏனெனில் ஷிராணி 18 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தையும் அங்கீகரித்தவர்.

ஷிராணியின் அந்தத் தீர்ப்புக்கு பலமான ஆதாரங்கள் இருக்கவும் இல்லை. அதேபோல் திவநெகும சட்டத்துக்காக அர சாங்கம் பிரதம நீதியரசருடன் மோதுமளவுக்கு அதில் எந்த முக்கியதத்துவமும் இருக்கவில்லை. இது கௌரவப் பிரச்சி னையே.

இறுதியில் ஷிராணியின் பதவி பறிக்கப்பட்டது.

அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் நாடாளுமன்ற தெரிவுக் குழுவொன்றின் மூலமே விசாரிக்கப்பட்டன. அத்தெரிவுக் குழுவின் பெரும்பான்மையினர் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு உறுப்பினர்களாக இருந்தனர்.

அவர்களில் சிலர் ஷிராணி பண்டாரநாயக்கவின் தீர்ப்புக்களால் பாதிக்கப்பட்டவர்களாகவும் இருந்தனர்.

எனவே, இந்த விசாரணை ஷிராணியை குற்றவாளியாக்க வேண்டும் என்பதற்காகவே நியமிக்கப்பட்டது என்பது மிகவும் தெளிவாக இருந்தது.

இங்கே மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தின் நோக்கமும் உத்திகளும் நாகரிகமற்றதாக இருந்த போதிலும் அந் நடவடிக்கை சட்ட விரோத மாகவில்லை.

ஷிராணிக்கு எதிரான குற்றப் பிரேரணையில் அவர் சில குற்றங்களை இழைத்தார் என்று இருந் ததே தவிர அவரை பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டு இருக்க வில்லை.

அந்தப் பிரேரணைதான் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. ஜனாதிபதிக்கும் அனுப்பப்பட்டது. எனவே, அவர் முறைப்படி பதவி நீக்கம் செய்யப்படவில்லை என்று தற்போதைய அரசாங்கத்தின் தலைவர்கள் கூறுவது சரியே.

அந்த அடிப்படையில் தான் அவர் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டார்.

ஆனால், நிறைவேற்றப்பட்ட குற்றப் பிரேரணையில் சிராணியை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்படவில்லை என தற்போதைய அரசாங்கத்தின் தலைவர்கள் கூறிய போதிலும் அப்பிரேரணை தெரிவுக் குழுவால் நிறை வேற்றப்பட்டுள்ளது என்றும் தெரிவுக் குழுவின் முடிவை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அவர்களும் ஏற்றுக் கொள்கிறார்கள் என்பது தெளிவாகிறது.

அதாவது, அவர் தெரிவுக் குழுவால் குற்றவாளியாக காணப்பட்டுள்ளார்.

தெரிவுக்குழு நாகரிகமற்றதாயினும் அது சட்டபூர்வமான தாகும்.

அவ்வாறிருக்க சட்டபூர்வமாக குற்றவாளியாக காணப்பட்ட ஒருவரை நீதியரசராக மீண்டும் பதவியில் எவ்வாறு அமர்த்த முடியும் என்ற கேள்வி எழுகிறது.

இது ஜனாதிபதித் தேர்தல் தினத்தில் முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ், ஜனாதிபதி மாளிகையில் இருந்தமை அம்பலமானதன் பின்னரும் தொடர்ந்தும் பதவியில் இருந்ததற்கு சமமாகும்.

மொஹான் பீரிஸ் அன்றிரவு ஜனாதிபதி மாளிகையில் இருந்தமை தற்போது நிரூபிக்கப்பட்டுள்ளது. அவரும் ஒருபோதும் அதனை நிராகரிக்கவில்லை.

அது மிகவும் மோசமான நாக ரிகமற்ற செயலாகும். அது அம் பலமானதன் பின்னராவது அவர் பதவியிலிருந்து விலகியிருக்க வேண்டும்.

அவர் அவ்வாறு செய்யாததால் அவர் பதவியில் இருக்கும் போதே பழைய குற்றப் பிரேரணையின் குறைப்பாட்டை பாவித்து தற்போதைய அரசாங்கம் ஷிராணியை பிரதம நீதியரசராக வருமாறு மீண்டும் அழைத்து பீரிஸை தாமாக வீட்டுக்குச் செல்ல வைத்தது.

பதவிக்கு நியமிப்பதற்கு முன்னரும் பீரிஸின் நடத்தை சர்ச்சைக்குறியதாக இருந்தது. சட்டமா அதிபராக இருக்கும் போது அவர் காணாமற்போன ஊடகவி யலாளர் பிரதீப் எக்னெலிகொட, பிரான்ஸில் இருப்பதாக கூறியமை உதாரண மாகும்.

சிராணியும் பீரிஸும் ஒரே விதமாகவே பதவி நீக்கம் செய்யப்பட்டனர். இரண்டு சந்தர்ப்பங்களிலும் நிறைவேற்று ஜனாதிபதி முறையே நிர்ணயகரமான காரணியாக இயங்கியது. இரு வரும் நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரத்தினாலேயே நீக்கப்பட்டனர்.

குற்றப் பிரேரணை நிறைவேற்றப்பட்டதன் பின்னரும் தாமே பிரதம நீதியரசர் எனக் கூறிக் கொண்டு ஷிராணி பதவியில் இருக்க முயற்சி செய்தார். அதற்காக பொலிஸாரின் பாது காப்பையும் கோரினார்.

ஆனால் குற்றப் பிரேரணையின் மூலம் அவர் பதவி நீக்கம் செய்யப்படாத நிலையிலும் குற்றப்ப பிரேரணையின் அடிப்படையில் என்று கூறி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது அதி காரத்தை பாவித்து பீரிஸை பிரதம நீதியரசராக நியமித்து நீதிமன்றத்திற்கு அனுப்பினார். வேறு வழியின்றி ஷிராணி வீட்டில் தங்கி விட்டார்.

அதேபோல் பீரிஸ், தொழில் நாகரிகத்தை மீறினார் என்று கூறி தற்போதைய அரசாங்கம் பீரிஸை பதவி விலகுமாறு உத்தியோகபற்றற்ற முறையில் கோரியது. அவர் கேட்க வில்லை. அப்போது பழைய குற்றப் பிரேரணையிலிருந்த குறைப் பாட்டை பாவித்து அரசாங்கம்,

ஷிராணியை நீதிமன்றத்துக்கு அனுப்பியது. வேறு வழியின்றி பீரிஸும் வீட்டிலேயே தங்கிவிட்டார்.

ஷிராணி மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்ட முறையி பிரச்சினைகள் இருந்த போதிலும் அரசியல் பழிவாங்கலாகவே அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார் என்பதை எவரும் மறுக்க முடியாது.

எனவே அவருக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும் என்பதையும் எவரும் நிராகரிக்க முடியாது.

வரலாறு வேடிக்கையாகவும் இருக்கிறது. அன்று, ஷிராணியின் பதவியை பறித்த அரசாங்கத்தின் பிரதான கட்சியின் பொதுச் செயலாள ராக இருந்தவர் அதே கட்சியின் தலைவராகவும் ஜனாதிபதியாகவும் வந்து அவருக்கு மீண்டும் அந்தப் பதவியை வழங்குகிறார்.

அன்று அவரை பதவி நீக்கம் செய்ய பாவிக்கப்பட்ட நாடாளு மன்ற தெரிவுக்குழுவின் முக்கிய உறுப்பினரும் தமது மனைவியின் பதவி உயர்வு விடயத்தில் ஷிராணி வழங்கிய தீர்ப்பொன்றினால் அவரை பழி வாங்க காத்துக் கொண்டிருந் தவருமான ராஜித்த சேனாரத்ன இன்று அரசாங்கத்தின் பேச்சாளராக அவருக்கு மீண்டும் பதவி வழங்குவதை நியாயப்படுத்துகிறார்.

சட்டம் என்பது சட்டபூர்வமாக்கப்பட்ட ஆளும் வர்க்கத்தின் விருப்பமே என கார்ல் மார்க்ஸ் ஒரு முறை கூறினார்.

ஆளும் வர்க்கத்தின் என்பதற்கு பதிலாக ஆளும் குழுவின் அல்லது ஆட்சியாளரின் என்று குறிப்பிட்டால் அந்தக் கூற்று இன்றைய நிலைமைக்கும் பொருத்தமாக இருக்கிறது.

(முற்றும்)

-தமிழ்மீரர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதிக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் எதிர்க்கட்சி உறுப்பினரின் செயற்பாடுகள் அமையும்

## தலைவர் நிமால் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் செயற்பட உள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான மைத்திரிபால சிறிசே னவிற்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் எதிர்கால நடவடிக் கைகள் அமையும்.

ஐக்கிய தேசியக்கட்சியினரால், நாடு முழுவதிலும் உள்ள சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் மீது பிரயோ கிக்கப்படும் அழுத்தங்களுக்கு எதிராக நாடாளுமன்றிற்கு உள்ளேயும் வெளியேயும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். அந்த செயற்பாடுகளை நானே வழி நடத்துவேன்.

அரசாங்கத்தின் 100 நாட்கள் திட்டத்தில் காணப்படும் குறைகளை விமர்சனம் செய்து, அவற்றை நிவர்த்தி செய்து அமுல்படுத்த ஒத்துழைப்பு வழங்கப்படும்.

100 நாட்கள் திட்டத்தை குழப்பும் எண்ணம் எமக்குக் கிடையாது.

ஐக்கிய தேசியக் கட்சியினர் இப்போது சுதந்திரக் கட்சியின் பல உறுப்பினர்களுக்கு எதிராக பொய்க் குற்றச்சாட்டு சுமத்தி சிறையில் அடைத்துள்ளனர்.

இவ்வாறான நடவடிக்கைகளின் ஊடாக கட்சி உறுப்பினர்களை அச்சுறுத்த நினைத்தால் அதற்கு இடமளிக்கப்பட மாட்டாது என அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியின் நடவடிக்கைகள் குறித்து பௌத்த மாநாயக்க தேரர்களுக்கு விளக்கமளிக்கும் நோக்கில் மாநாயக்க தேரர்களை நேற்று முன்தினம் சந்தித்த போது அவர் இதனைத் தெரிவித்தார். (இ-5)

# புதிய கட்சியை உருவாக்கும் நோக்கமில்லை கூட்டணி ஒன்றையே உருவாக்க உள்ளோம்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான முறையில் புதிய கட்சியொன்றை உருவாக்கவுள்ளதாக வெளிவந்துள்ள தகவல்களை மறுத்துள்ள நாடாளுமன்ற உறுப்பினரும் மக்கள் ஐக்கிய முன்னணியின் (மஹஜன எக்சத் பெரமுனவின்) தலைவருமான தினேஷ் குணவர்த்தன இது தொடர்பில் கொழும்பு நியூஸ் ருடே செய்திச் சேவைக்கு செவ்வியொன்றை வழங்கியுள்ளார்.

தற்போதைய நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைத் தவிர்த்து விட்டு முறையான எதிர்க்கட்சியொன்றை உருவாக்குவது எங்கள் நோக்கம். அதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கத்துவம் கொண்டுள்ள ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடியுள்ளோம்.

இதன்மூலம் தற்போது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் நீடிக்கும் கட்சிகள் மத்தியில் புதியதொரு கூட்டணியை உருவாக்குவதே எங்கள் நோக்கம். மற்றபடி புதியதாக இன்னொரு கட்சியை உருவாக்கும் முயற்சியில் நாங்கள் ஈடுபடவில்லை என்றும் தினேஷ் குணவர்த்தன தனது செவ்வியில் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே இவ்வாறு உருவாக்கப்படப் போகும் புதிய கூட்டணிக்குத் தலைமை தாங்க முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மறுப்புத் தெரிவித்துள்ள நிலையில், தற்போதைக்குத் தற்காலிக தலைவராக தினேஷ் குணவர்த்தன செயற்படவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-5)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் பணம் தேர்தல் பிரசாரத்திற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது

## அமைச்சர் அத்துகோரள குற்றச்சாட்டு

வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சின் பணம் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டுள்ளதாக புதிய அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

மக்கள் நலன்புரிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த 362 மில்லியன் ரூபா பணம் இவ்வாறு செலவிடப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சின் நடவடிக்கைகள் அமைச்சு அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படவில்லை. முன்னாள் அமைச்சர் டிலான் பெரேராவின் பிரத்தியேக பணியாளர்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாரியளவில் வருமானத்தை ஈட்டித் தரும் வெளிநாட்டு வேலைகளில் ஈடுபட்டு வரும் குடும்பங்களின் நலன்களுக்கு எவ்வித சேவையும் ஆற்றப்படவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அண்மையில் இரத்தினபுரியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது முன்னாள் அமைச்சர் டிலான் மீது, புதிய அமைச்சர் தலதா இந்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார். (இ-5)

# இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளராக விக்ரமசிங்க நியமனம்!

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாக மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல், ஜனாதிபதி சட்டத்தரணி டில்ருக்ஷி விக்ரமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். அவரை, நியமிப்பதற்கான அமைச்சரவை அந்தஸ்து கிடைக்கப்பெற்றுள்ளதாக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதேவேளை, இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் நாயகம், நீதியமைச்சுக்கு இடமாற்றப்பட்டுள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். ஆணைக்குழுவின் செயற்பாட்டில் ஏற்பட்டுள்ள திருப்தியற்ற முறையையடுத்தே இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

சுதந்திரதின நிகழ்ச்சி நிரலில்

# தவறு

நாட்டின் 67ஆவது சுதந்திர தினத்தின் பிரதான வைபவம் முப்படைகளின் தளபதியும் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நாடாளுமன்ற விளையாட்டுத்திடலில் நடைபெற்றது. செழுமையான தாய்நாடு! வளமான எதிர்காலம் எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற இந்த வைபவத்துக்கான நிகழ்ச்சி நிரலை உள்நாட்டலுவல்கள் மற்றும் கடற்றொழில் அமைச்சு தயாரித்திருந்தது. அத்துடன் கையேட்டையும் அச்சடித்திருந்தது.

தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் அச்சடிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் அழைக்கப்பட்ட பிரதம விருந்தினர்களில் காலை 8.39 இற்கு பிரதம நீதியரசரின் வருகை இடம்பெற்றது. இதில் 44ஆவது பிரதம நீதியரசரான கே.ஸ்ரீபவன் வருகை தந்தார். எனினும், நிகழச்சி நிரலில் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸும் அவரது பாரியாரும் வருகை தருவர் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட குற்றப் பிரேரணை மூலம் பதவியில் இருந்து நீக்கப்பட்ட கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க, கடந்த புதன் கிழமை பிரதம நீதியரசராக பதவியேற்றுக்கொண்ட நிலையில், பிரதம நீதியரசராக இருந்த மொஹான் பீரிஸின் பதவி அன்றிலிருந்து வலுவற்றதாகியமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (இ-5)

# சட்டநடவடிக்கை எடுக்கப்படுமாம்



எனக்கு சேறுபூசும் நோக்கில் பொலிஸாருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. இரண்டு டிபென்டர் ரக வாகனங்கள் தொடர்பில் என்னிடம் ஆவணங்கள் இருக்கின்றன என்பதனால் பொலிஸாருக்கு எதிராக நான் சட்ட நடவடிக்கை எடுப்பேன் என கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

என்னுடைய செயலாளருக்கு சொந்தமான மாவில்மடையில் உள்ள வீட்டிலிருந்து டிபென்டர் ரக வாகனங்கள் இரண்டை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அதுமட்டுமன்றி கண்டி, புஷ்பதான மாவத்தையிலுள்ள என்னுடைய வீட்டிலிருந்து ஒருதொகை பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இவையாவும் சட்ட ரீதியானதாகும். எனக்கு சேறுபூசும் நோக்கிலேயே பொலிஸாருக்கு இந்த தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவிடமிருந்து மூன்று மாதங்களுக்கு முன்னர் இந்த இரண்டு டிபென்டர் ரக வாகனங்களையும் 180 இலட்சம் ரூபாவுக்கு நான் கொள்வனவு செய்தேன். உரிமையை மாற்றுவதற்கான ஆவணங்களில் மட்டுமே கையெழுத்து இடப்படவில்லை. எனினும், என்னிடம் அதற்கான ஆவணங்கள் இருக்கின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## வேதாந்த விளக்கம்

ஒரு பெரியவர் ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார். அவரிடம் ஒரு பை இருந்தது. அதில் பணம் நிறைய வைத்திருந்தார்.

அவர் களைப்பினால் கண்ணை மூடும் நேரம் பார்த்து, ஒருவன் மெதுவாக அவரருகே வந்தான். வந்து நைசாக அந்தக் கைப்பையை பிடுங்கிக் கொண்டு ஓடப் பார்த்தான். அதற்குள் பக்கத்திலிருந்தவர்கள் சத்தம் போட பெரியவர் முழித்து விட்டார்.

உடனே எழும்பி அவன் மீது பாய்ந்து பையை மீட்டுக் கொண்டு வந்தார். அதன் பின்னர்தான் அவருக்கு நிம்மதி!

இதுதான் இயல்பு!

இதைவிட்டு விட்டு, "பணப்பையைத் தானே எடுத்துக் கொண்டு போகிறான்... போனால்போகட்டும்! அவனும்மனுஷன்தானே!" என்று வேதாந்தம் பேச மாட்டார்.

அப்படிப் பேசினால் அவர் வேதாந்தத்தை சரியாக புரிந்து கொள்ளவில்லை என்று அர்த்தம்.

இதை ஸ்ரீராம கிருஷ்ணர் ஒரு கதை சொல்லியிருக்கிறார்.

ஒரு காட்டில் ஒரு சாது இருந்தாராம். அவருக்குப் பல சீடர்கள். ஒரு நாள் அவர்களையெல்லாம் கூப்பிட்டு வைத்து உபதேசம் பண்ணினார்.

"இந்த உலகத்தில் இருப்பது எல்லாமே கடவுளுடைய வடிவங்கள். அதை நீங்கள் எல்லோரும் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும்! அதை புரிந்து கொண்டு எல்லோரையும் வணங்க வேண்டும்!" என்றார்.

எல்லா சீடர்களும் அக்கறையாக அதை மனதில் வாங்கிக் கொண்டார்கள். ஒரு நாள் ஒரு சீடன் விறகு பொறுக்குவதற்காக காட்டுக்குப் போனான்.

அப்பொழுது சிலர் "மதம் பிடித்த யானை ஒன்று வருகிறது. எல்லோரும் ஓடிப்போய்விடுங்கள்" என்று கத்திக் கொண்டு ஓடி ஒளித்தார்கள்.

சில பேர் மரத்தில் ஏறிக் கொண்டார்கள்.

ஆனால் அந்த சீடன் மட்டும் நகரவேயில்லை!

"நான் எதற்காக ஓட வேண்டும்? நானும் கடவுள். இந்த யானையும் கடவுள்!" என்று நினைத்துக் கொண்டு அசையாமல் அந்த இடத்திலேயே நின்று விட்டான்.

யானை அருகில் வந்ததும் கையிரண்டையும் மேலே தூக்கி துதிப்பாடல் ஒன்றை பாட ஆரம்பித்தான்.

யானைப் பாகனும் "ஓடிப் போய் விடு" என்று கத்தினான். அந்த சீடனுக்கு அதெல்லாம் பெரிதாகப்படவேயில்லை! எதையோ முணுமுணுத்துக்கொண்டே நின்றான்.

இவன் கையிரண்டையும் மேலே தூக்கிக்கொண்டு நின்றது யானைக்கு வசதியாகப் போய்விட்டது. அப்படியே வேகமாக துதிக்கையில் சுருட்டி வளைத்து ஒரு பக்கமாக எறிந்து விட்டுப் போய் விட்டது.

"அம்மாடி!" என்று கத்திக் கொண்டே போய் விழுந்தான். ஆச்சிரமத்தில் இருந்தவர்கள் இதைக் கேள்விப்பட்டு ஓடி வந்து ஆச்சிரமத்துக்கு தூக்கி கொண்டு போனார்கள்.

இவன் மெதுவாக கண்ணைத் திறந்து பார்த்தான். அப்பொழுது சீடனில் ஒருவன் "யானை வந்தது தான் உனக்குத் தெரியுமே! நீ ஏன் அங்கிருந்து ஓடவில்லை?" என்றான்.

அதற்கு இவன், "உலகத்தில் உள்ள எல்லாமே கடவுளின் வடிவங்கள் என்று தானே நம் குருநாதர் நமக்கு சொல்லிக் கொடுத்தார். அது தான் யானையைப் பார்த்ததும் கடவுள் தான் வருகிறார் என்று நினைத்துவிட்டேன்" என்றான்.

இதைக் கேட்ட குருநாதர்,

"அது சரி... நீயும் கடவுள் தான்! யானையும் கடவுள் தானே! ஆனால் அந்த யானை மீது உட்கார்ந்திருந்த பாகனும் கடவுள் தானே! அந்த கடவுள் ஓடிப்போ என்று எச்சரிக்கை கொடுத்ததே! அந்த வார்த்தையில் உனக்கு ஏன் நம்பிக்கை வரவில்லை?" என்று கேட்டார்.

அப்பொழுது தான் சீடனுக்கு தான் செய்த தவறு விளங்கியது. வேதாந்தத்தை சரியாக புரிந்து கொள்ளாததால் வந்த விளைவு தான் இது!

வேதாந்தி ஒருவர் ரயிலில் பிரயாணம் செய்தார். அவர் கையில் ஒரு சூட்கேஸ் இருந்தது.

அந்த சமயம் பார்த்து ஒரு திருடன் அதை பறித்துக் கொண்டு ஓடினான். எல்லோரும் சத்தம் போட்டார்கள். இவர் கொஞ்சம் கூட அலட்டிக் கொள்ளவேயில்லை "போனால் போகட்டும் விடுங்கள்! பாவம் பிழைத்துக் கொள்ளட்டும்!" என்றார்.

இவர் தான் உண்மையான வேதாந்தி என்று நினைத்து எல்லோரும் காலில் விழுந்து வணங்கினார்கள். ஆனால் அவர்கள் அத்தனை பேருக்கும் ஒரு உண்மை தெரியாது! அதாவது அந்த சூட்கேஸில் இருந்தது முழுக்க கள்ள நோட்டு என்று!.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெ.சொத்துக் குவிப்பு இறுகும் முடிச்சுக்கள்

என் தீர்ப்புகூட இறுதியானது என்று சொல்ல முடியாது. இந்த வழக்கில் 150 முடிச்சுகள் இருக்கின்றன. அதில் ஒன்றைக்கூட இதுநாள் வரை அவிழ்க்கவில்லை. அரசு சாட்சியங்கள் அளித்த வாக்குமூலத்தைப் படியுங்கள். விசாரணை அதிகாரி நல்லம நாயுடுவை வரச் சொல்லுங்கள். கம்பனி சொத்துகளை ஏன் பறிமுதல் செய்யவில்லை? இப்படி பரபரப்பான கேள்விகளை எழுப்பியுள்ளார் கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதி குமாரசாமி. ஜெயலலிதா சொத்துக் குவிப்பு மேல்முறையீட்டு விசாரணை விறுவிறுப்பாகவும், காரசாரமாகவும் நகர்கிறது.

**என் தீர்ப்பும் இறுதியானது அல்ல!"**

ஜெயலலிதா தரப்பு வாதங்கள முடிந்து சசிகலா தரப்பு வாதங்கள் தொடங்கி 'உள்ளன.

**சசிகலா வழக்கறிஞர் பசந்த்:** ஜெயலலிதா 1.7.91 முதல் 30.4.96 வரை தமிழக முதல்வராக இருந்தார். இதுதான் வழக்கின் காலகட்டமாகக் கருதப்படுகிறது. இந்த காலகட்டத்தில் ஜெயலலிதா தன் வருமானத்துக்கு அதிகமாக சம்பாதித்த ரூ.66.65 கோடி சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோருக்கு பரிமாற்றங்கள் செய்ததாகவும், அதன் மூலம் சசிகலா, சுதாகரன், இளவரசி கூட்டாகவும், தனித்தனியாகவும் 32 கம்பனிகளை தொடங்கி இந்த பணத்தை அதில் முதலீடு செய்துள்ளதாகவும் தமிழக ஊழல் தடுப்பு பொலிஸார் குற்றம் சாட்டுகிறார்கள்.

ஆனால், இந்த வழக்கு காலகட்டத்துக்கு முன்பே ஜெயலலிதாவும், சசிகலாவும் நண்பர்களாக இருந்தார்கள். இருவரும் சேர்ந்து வழக்கு காலகட்டத்துக்கு முன்பு 1988-89இல் ஜெயா பப்ளிகேஷன், சசி என்டர்பிரைசஸ் என்ற இரண்டு நிறுவனங்கள் தொடங்கினர். அவற்றில் மட்டும் ஜெயலலிதா பார்ட்னராக இருந்தார். அதற்கு முறையாக வருமான வரியும் கட்டியிருக்கிறார். மற்ற எந்த ஒரு கம்பனியிலும் ஜெயலலிதா பார்ட்னராக இல்லை. அவருடைய வங்கிக் கணக்கில் இருந்து சசிகலா, சுதாகரன், இளவரசி மற்றும் 32 கம்பனிகளுக்கு எந்த ஒரு பணப் பரிமாற்றமும் நடைபெறவில்லை. இந்திய தண்டனைச் சட்டம் 109 மற்றும் 120 (பி) ஆகிய பிரிவுகளில் கூட்டுச் சதி செய்து வருமானம் ஈட்டினார்கள் என்பதும் தவறு.

தமிழக ஊழல் தடுப்பு பொலிஸாரும் ஜெயலலிதாவிடம் இருந்து பணப் பரிமாற்றம் நடைபெற்றதற்கான எந்த ஓர் ஆதாரத்தையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. நான்கு பேரும் ஒரே வீட்டில் தங்கி இருந்தார்கள் என்பதைத் தவிர எந்த ஓர் ஆதார ங்களும் கிடையாது. 32 கம்பனி களின் உரிமையாளர்கள் குறித்தும் தமிழக ஊழல் தடுப்பு பொலிஸார் விசா ரக்கவில்லை. இதையெல் லாம் சிறப்பு நீதிமன்றத்தில் சொன் னோம். ஆனால், இதையெல்லாம் கவனத்தில் கொள்ளாமல் தீர்ப்பு வழங்கப்பட்டது. அதனால் உங்களுக்கு பணிச் சுமை அதிகமாகியுள்ளது.

**நீதிபதி குமாரசாமி:** ஆவணங்களையும், ஆதாரங்களையும், சாட்சியங்களையும் பார்க்காமல் எப்படி தீர்ப்பு சொல்ல முடியும்? யார் மீதும் குற்றம் சுமத்த வேண்டாம். என்னுடைய தீர்ப்புகூட இறுதியானது இல்லை. அதன்மீது உச்ச நீதிமன்றத்துக்கு மேல் முறையீட்டுக்குப் போகலாம்.

**பசந்த்:** வழக்கு காலகட்டத்துக்கு ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி என நான்கு பேரின் சொத்து மதிப்பை தனித்தனியாகப் பதிவு செய்யப்படாத குளறுபடியால் ஜெயலலிதாவின் சொத்து மதிப்பு மிகைப்படுத்தி காட்டப்பட்டுள்ளது.

**நீதிபதி:** அப்படியென்றால் வழக்கு காலகட்டத்தில் ஒவ்வொரு வருக்கும் தனித்தனியாக வந்த வருமானத்தின் ஆதாரங்களைக் காட்டுங்கள்.

**பசந்த்:** இதைக் கேட்பீர்கள் என்று நினைக்கவில்லை. அதனால் எடுத்து வரவில்லை.

**"அவிழ்க்காத முடிச்சுகள்!'**

**பசந்த்:** 32 கம்பனிகளுக்கும் ஜெயலலிதாவுக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது. இது வழக்கு காலகட்டத்துக்கு முன்பு தொடங்கப்பட்டது. அந்த கம்பனிகளுக்கு தனித்தனியாக உரிமையாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வங்கிகளில் கடன் வாங்கியும், சில கம்பனிகள்கிடைத்த இலாபத்தின்மூலமே கம்பனிகளை நடத்தி வந்தார்கள். ஜெயலலிதாவும், சசிகலாவும் ஜெயா பப்ளிகேஷன், சசி என்டர்பிரைசஸ் நிறுவனத்தை நிர்வகித்து வந் தார்கள்.

**நீதிபதி:** அவை எப்போது தொடங்கப்பட்டன?

**பசந்த்:** 1988-89ஆம் வருடங்களில் தொடங்கப்பட்டன.

**நீதிபதி:** நிறுவனம் தொடங்கப்பட்டதற்கான ஆதாரங்களின் ஆவணங்களைக் கொடுங்கள்.

**பசந்த்:** (அது பற்றி தேடிக் கொண்டு இருந்தார்.)

**நீதிபதி:** (பவானி சிங்கைப் பார்த்து) 32 கம்பனிகள் பணப் பரிமாற்றம் செய்துள்ளதற்கான ஆதாரம் உள்ளதா?

**பவானி சிங்:** (பதில் சொல்ல வில்லை.)

**நீதிபதி:** இந்த வழக்கின் விசாரணை அதிகாரி யார்?

**பவானி சிங்:** (இலஞ்ச ஒழிப்புத துறை அதிகாரி சம்பந்தத்தைக் கூப்பிடுகிறார்.)


**சம்பந்தம்:** நான்தான்.

**நீதிபதி:** குற்றவாளிகள் தரப்பு சொல்லுவது உண்மையா?

**சம்பந்தம்:** உண்மையில்லை. அதற்கான ஆதாரங்கள் உள்ளன.

**அரசு வழக்கறிஞர் மராடி:** குற்றவாளிகள் பங்குதாரர்களாக உள்ள 32 கம்பனிகள் வழக்கு காலகட்டத்துக்கு முன்பு 1988-89 களில் தொடங்கப்பட்டாலும் அதில் பணப்பரிமாற்றம் எதுவும் நடை பெறவில்லை. ஜெயலலிதா முதல்வராக இருந்த 91 முதல் 96 கால கட்டத்தில்தான் இந்த 32 கம்பனிகளில் ஆயிரத்திற் கும் மேற்பட்ட பணப்பரிமாற்றங்கள் நடைபெற்றுள் ளன. அதற்கு அரசு சாட்சியங்கள் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்கள்.

**நீதிபதி:** (பசந்தை பார்த்து...) நீங்கள் ஒரு வாதத்தை வைப்பதற்கு முன் அதற்குத் தேவையான முழு விபரங்களையும் தயார் செய்து கொண்டு தான் வாதிட வேண்டும். நீங்கள் சொல்லும் குற்றச்சாட்டில் உண்மையில்லை. அரசு சாட்சியங்கள் 182, 201 படியுங்கள். அதை முழுமையாகப் படியுங்கள். அப்போது தான் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பது உங்களுக்குப் புரியும். இந்த வழக்கின் தீர்ப்பில் கீழ் நீதிமன்ற நீதிபதி 150 முடிச்சுகள் போட்டுள்ளார். அதில் இதுநாள் வரை ஒன்றைக்கூட நீங்கள் அவிழ்க்கவில்லை.




**பசந்த்:** அந்த முடிச்சுகளைச் சொல்லுங்கள்.

**நீதிபதி:** அதை நீங்கள்தான் தெரிந்து கொள்ள வேண்டும். கீழ் நீதிமன்ற நீதிபதி தன் தீர்ப்பில் உங்கள் மீது சுமத்தி இருக்கின்ற குற்றச்சாட்டுகளை ஆதாரங்களோடு மறுப்பதோடு, அவர் தீர்ப்பில் உங்கள் சொத்துக் குவிப்பு ரூ.55 கோடியாக எழுதியிருக்கிறார். அதற்கு சரியான ஆதாரத்தோடு சரியான கணக்குகளை காட்டுங்கள்.

(நீதிபதி இப்படி உத்தர விட்டதைத் தொடர்ந்து அரசு சாட்சியங்களைத் தேடி எடுத்தார்கள்.)

சாட்சிஎண்182 என்பது சென்னை அபிராமபுரம் இந்தியன் வங்கி மேலாளர் அருணாசலம். சாட்சி எண் 201 என்பது சென்னை மயிலாப்பூர் கனரா வங்கி மேலாளர் வித்யாசாகர். இவர்கள் இருவரும் கொடுத்த வாக்கு மூலத்தை இரண்டு நாள் முழுவதும் சசிகலாவின் வழக்கறிஞர்கள் பசந்த்தும், மணிசங்கரும் நீதிமன்றத்துக்கு வாசித்துக் காட்டினார்கள்.

**நீதிமன்றத்தை அரசியல் மேடையாக்கத் தயாரா?**

**பசந்த்:** ஜெயலலிதாவிடமிருந்தும், என் மனுதாரர் சசிகலாவிடமிருந்தும் 32 கம்பனிகளுக்கு பணப் பரிமாற்றம் நடைபெறவில்லை.

**நீதிபதி:** (பவானி சிங்கிடம்) என்ன சொல்கிறீர்கள்?

**பவானி சிங்:** அது உண்மையில்லை.

**நீதிபதி:** அதை மறுப்பதற்கு உங்களிடம் ஆதாரங்கள் இருக்கிறதா? ஆதாரத்தைக் கொடுங்கள்?

**பவானி சிங்:** தற்போது இல்லை.

**நீதிபதி:** அவர்கள் சொல்லும் புகாருக்கு நுனி விரலில் பதில் கொடுக்க வேண்டும். இப்படி அலட்சியமாக இருக்கக் கூடாது. எப்படி கீழ் நீதிமன்றத்தில் நீங்கள் வாதாடினீர்கள்?

**பவானி சிங்:** ஆதாரங் களை நாளைக்குக் கொடுக்கிறேன்.

**நீதிபதி:** (தி.மு.க வழக்கறிஞர் சரவணனைப் பார்த்து) நீங்கள் என்ன சொல்கிறீர்கள்.

**சரவணன்:** நமது எம்.ஜி.ஆர். நாளிதழுக்கு ரூ.18 ஆயிரம், ரூ.15 ஆயிரம் என டெபாசிட் தொகை வசூலித்தார்கள். அதில் ரூ.14 கோடி வசூலானது. அந்தப் பணம் 32 கம்பனிகளுக்கும் பரிமாற்றம் செய்யப் பட்டிருக்கிறது. ஜெயலலிதாவின் 44ஆவது பிறந்த நாளுக்கு டிடியாக வந்த ரூ.2.15 கோடி பணமும் கம்பனிகளுக்குப் பரிமாற்றம் செய்யப்பட்டது. அதை கீழ் நீதிமன்றத்தில் எழுத்துபூர்வமாக கொடுத்திருக்கிறோம்.

**நீதிபதி:** (சரவணனைப் பார்த்து) உங்கள் கட்சி பத்திரிகைக்கு இதுபோன்ற டெபாசிட் வசூ லிக்கப்படுகிறதா? உங்கள் தலைவர் பிறந்த நாளுக்கு கிப்ட் வாங்குவதில்லையா?

**சரவணன்:** எங்கள் தலை வர் கிப்ட் வாங்க மாட்டார்.

**நவநீதகிருஷ்ணன்:** கருணாநிதி பிறந்தநாளின்போது உண்டியல் வைத்து பணம் வசூல் செய்வார். கருணாநிதி அறிவியல் பூர்வ குற்றவாளி என சர்க்காரியா கமிஷன் கூறியுள்ளது.

**சரவணன்:** கனம் பொருந்திய நீதிபதி அவர்களே! இந்த நீதிமன்றத்தை அரசியல் மேடையாக்க அவர்கள் தயார் என்றால் நாங்களும் தயார்.

**"நல்லம நாயுடுவை வரச் சொல்லுங்கள்..."**

**நீதிபதி:** (பவானி சிங்கைப் பார்த்து) சி.டி., ஃபைல், கேஸ் டைரி எங்கே? (சி.டி., ஃபைல் என்பது எஃப்.ஐ.ஆர்., பதிவு செய்யும்போது சாட்சியங்கள் சொல்லும் வாக்குமூலங்களையும் அதை பொலிஸார் பதிவு செய்வதையும் வீடியோவில் பதிவு செய்வார்கள்.

இதுதான் சி.டி., பைல் என்பார்கள். எஃப்.ஐ.ஆர் போட்டதில் இருந்து அந்த வழக்கின் ஒவ்வொரு நிகழ்வுகளையும் பதிவு செய்வது கேஸ்டைரி என்பார்கள்.)

**பவானி சிங்:** (ஊழல் தடுப்பு அதிகாரி சம்பந்தத்தைக் கூப்பிட்டார்)

**நீதிபதி:** இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி யார்?

**சம்பந்தம்:** நல்லம நாயுடு.

**பவானி சிங்:** அவர் ஓய்வு பெற்றுவிட்டார்.

**நீதிபதி:** அவர் ஓய்வு பெற்றாலும் நீதிமன்றத்துக்கு பதில் சொல்ல வேண்டியது அவருடைய கடமை. அதனால் அவரை கட்டாயம் வரச் சொல்லுங்கள்.

**பசந்த்:** சாட்சி: 182, சாட்சி: 201 ஆகிய இரண்டு வங்கி அதிகாரிகள் சொன்ன சாட்சியங்களின் படி ஏ1 ஜெயலலிதாவிடம் இருந்து யாருக்கும் பணப் பரிமாற்றம் நடைபெறவில்லை என்பது நிரூபணமாகிறது. நமது எம்.ஜி.ஆர் நாளிதழ் மூலம் வசூலிக்கப்பட்ட டெபாசிட் பணங்கள் அவர்களுக்கே திருப்பி கொடுத்திருக்கிறோம். அதனால் வருமானமாக எடுத்துக்கொள்ளக் கூடாது.

**நீதிபதி:** அப்படியென்றால் மைனஸ் 13(1)ஈ போட்டு விடலாமா? (13(1)ஈ என்பது ஊழல் தடுப்புச் சட்டம்.)

**பசந்த்:** சிரிப்பு

**நீதிபதி:** (பவானி சிங்கைப் பார்த்து) இதற்கு என்ன சொல்கிறீர்கள்?

**பவானி சிங்:** நமது எம்.ஜி. ஆர் நாளிதழுக்கு வசூலிக்கப்பட்ட தொகை சட்டத்துக்குப் புறமானது. அரசு தரப்பு சாட்சியங்கள் ஜெயலலிதா வீட்டில் வேலை பார்த்த ஜெயராமனின் வாக்குமூலத்தையும், கம்பனிகளின் பதிவாளரின் வாக்குமூலத்தையும் நானும் படித்துக்காட்டிக் குற்றங்களை நிரூபிக்கத் தயார்.

**குமார்:** அந்த வாக்குமூலங்களில் ஒன்றும் இல்லை. ஜெயலலிதா வீட்டுச் செலவுகளும், கார்டனில் வளர்க்கப்பட்ட நாய்களுக்கு வாங்கிய கறியை பற்றித் தான் சொல்லியிருப்பார்.

(விவாதம் தொடர்கிறது)

**ஜூனியர் விகடன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமான விபத்தில் 31பேர் உயிரிழப்பு



தாய்வான் நாட்டில் விமானம் ஒன்று ஆற்றில் விழுந்து விபத்துக்குள்ளானதில் பலியானோர் எண்ணிக்கை 31 ஆக உயர்ந்துள்ளது. மாயமான 12 பேரை தேடும்பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

தாய்வான் நாட்டின் தலைநகரான தைபேயில் உள்ள ஷங்ஷான் விமான நிலையத்தில் இருந்து, கின்மென் தீவு நோக்கி நேற்று முன்தினம் காலை உள்ளூர் நேரப்படி 10.53 மணிக்கு டிரான்ஸ் ஏசியா ஏர்வேஸ் விமானம் ஒன்று (ஏடிஆர் 72 ரகம்) புறப்பட்டு சென்றது. இந்த விமானத்தில் 58 பயணிகளும், சிப்பந்திகளும் பயணம் செய்தனர். அவர்களில் 31 பயணிகள் சீன நாட்டினர்.

விமானம் புறப்பட்டுச் சென்ற 3 நிமிடங்களில் கட்டுப்பாட்டு நிலையத்துடனான தொடர்பை இழந்தது.

இந்த விமானம், தாய்வானின் தேசிய இலவச பாதை எண்.1இற்கு மேலே பறந்து கொண்டிருந்தபோது, கீழே விழுந்தது. அப்போது பாலத்தில் சென்று கொண்டிருந்த ஒரு கார் மீது மோதி, பின்னர் பாலத்தில் மோதி, 'கீலங்' என்ற ஆற்றில் விழுந்து விபத்துக்குள்ளானது. விமானம், ஆற்றில் பாதி மூழ்கிய நிலையில் கிடந்தது.

விபத்து குறித்த தகவல் அறிந்ததும், மீட்பு படையினர் உடனடியாக அந்த ஆற்றுக்கு ரப்பர் படகுகளில் விரைந்தனர். ஆற்றில் பாதி மூழ்கிய நிலையில் கிடந்த விமானத்தின் உடல் பகுதியை வெட்டி எடுத்து பயணிகளை மீட்டனர். சில பயணிகள் நீந்தி உயிர் தப்பியதாகவும் தகவல்கள் கூறுகின்றன. எனினும் இந்த விபத்தில் 23 பயணிகள் உயிரிழந்தனர். 15 பயணிகள் காயங்களுடன் மீட்கப்பட்டனர். 20 பேரை காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து மீட்பு பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், சிலரது சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. விமான விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 31 ஆக உயர்ந்துள்ளது. இன்னும் 12 பேரை காணவில்லை. அவர்களை தேடும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. விபத்துக்கு காரணம் என்ன? என்று தெரியவில்லை. விமானத்தின் கறுப்பு பெட்டி மீட்கப்பட்டு விட்டதாக உள்ளூர் ஊடக தகவல்கள் வெளியாகியது. தொடர்ந்து விசாரணையும் நடைபெற்று வருகிறது.

உலகளாவிய ரீதியில் விமான விபத்துக்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# 200 போகோஹராம் தீவிரவாதிகள் இராணுவத் தாக்குதலில் உயிரிழப்பு

(அபுஜா)

**தீவிரவாதிகளின் தாக்குதலில் நைஜீரியாவில் நாளுக்கு நாள் பலர் உயிரிழந்து வரும் நிலையில் தீவிரவாதிகளுக்கு எதிராக அந்நாட்டு இராணுவமும் போரிட்டு வருகின்றது. இந்நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்ற கடும் மோதலில் 200 போகோஹராம் தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு இராணுவம் அறிவித்துள்ளது.**

இந்தத்தாக்குதல்தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

நைஜீரியா நாட்டில்போகோஹராம் தீவிரவாதிகள் அட்டூழியம் செய்து வருகிறார்கள். அண்டை நாடுகளை சேர்ந்த இராணுவம் நைஜீரியாவுடன் இணைந்து போகோஹராம் தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றன. நைஜீரியா நாட்டின் எல்லைப் பகுதியில் உள்ள சாட் மற்றும் கேமரூன் நாடுகளில் போகோஹராம் தீவிரவாதிகள் அடிக்கடி புகுந்து அதிரடி தாக்குதல் நடத்தி வருகிறார்கள். இதனால் அந்த பகுதியில் சாட் இராணுவம் 2ஆயிரத்து 500 இராணுவ வீரர்களை குவித்து பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. கடந்த ஆண்டு மட்டும் இந்த தீவிரவாதிகள் தாக்குதலில் ஆயிரம் பேர் பலியாகி உள்ளனர்.



இதற்கிடையே கேமரூன் நாட்டின் எல்லையில் உள்ள வடகிழக்கு நைஜீரியாவின் நகரங்களான காம்பரு மற்றும் நாகலா நகரங்களில் போகோஹராம் தீவிரவாதிகள் மீது சாட் இராணுவம் நேற்று முன்தினம் நள்ளிரவு அதிரடி தாக்குதல் நடத்தியது. இதில் 200 தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளனர். (இ-5)

## எண்ணெய் வயல்களில் குண்டுவீசித் தாக்குதல் 12 பேர் பலி

லிபியா நாட்டில் அரசுக்கு எதிராக போராட்டம் நடத்தி வரும் கிளர்ச்சியாளர்கள் தலைநகர் டிரிபோலியில் இருந்து, தொலைதூரத்தில் உள்ள எண்ணெய் வயல்களில் குண்டு வீசி நேற்று தாக்கியுள்ளனர். இதில் 12 பேர் பலியானார்கள். பெரும்பாலனவர்கள் தலை துண்டித் தும், துப்பாக்கி சண்டையிலும் பலியானதாக அரசு பாதுகாப்பு படை கொமாண்டர் தெரிவித்தார்.

இதில் 2 பேர் பிலிப்பைன்ஸ் நாட்டினர். இவர்கள் அங்குள்ள இத்தாலி எணணெய் நிறுவனத்தில் பணியாற்றி வந்தனர். இதே போல பல எண்ணெய் நிறுவனங்களில் தாக்குதல் நடப்பதால் அவை மூடப்பட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-5)

## அமெரிக்காவின் கடைசி வரலாற்றுப் பக்கங்களை நாங்களே எழுதுவோம்-வடகொரியா எச்சரிக்கை

"எங்கள் நாட்டை வீழ்த்திவிட நினைத்து தாதாவாக செயற்படும் அமெரிக்காவின் வரலாற்றின் கடைசி பக்கங்களை எழுதப்போவது நாங்கள்தான்" என்று வட கொரியா கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தென்கொரியா - அமெரிக்க படைகள் வரும் மார்ச் மாதம வழக்கமான தங்களது இராணுவ கூட்டுப் பயிற்சியை தொடங்கவுள்ளன. இந்த முறை இராணுவ கூட்டுப் பயிற்சி நடத்தப்பட்டால் அதற்கு எதிராக அணு ஆயுத சோதனை நடத்தப்படும் என்றும் வட கொரியா எச்சரித்துள்ளது.

இந்த நிலையில், வட கொரிய ஜனாதிபதி வசம் இருக்கும் தேசிய பாதுகாப்பு ஆணையம் சார்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "போர்ச் சூழலை கொளுத்திவிட்டு தீவிரப்படுத்தும் வேலைகளைதான் அமெரிக்கா செய்கிறது. தொடர்ந்து வட கொரியாவின் பலத்தை வீழ்த்த அனைத்து வேலைகளையும் அமெரிக்கா பார்த்து வருகிறது.

ஏகாதிபத்தியவாதிகளாக இருக்க விரும்பும் அமெரிக்காவுடன் உடன்பட வேண்டிய அவசியம் ஏதும் இல்லை. தாதாவாக வலம் வரும் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தி முடிவை ஏற்படுத்த எப்போதும் வடகொரிய மக்களும் இராணுவமும் விரும்பவில்லை.

அமெரிக்க வரலாற்றின் கடைசிப் பக்கங்களை எழுதப் போவது வடகொரியாதான். இதற்கு எந்த வகையான தாக்குதலிலும் நாங்கள் இறங்குவோம். தரைவழி, வான் வழி, கடல்வழி, கடலுக்குகீழ் அல்லது சைபர் மோதல் என எந்தவகையிலான தாக்குதல்களையும் நாங்கள் அமெரிக்கா மீது நடத்துவோம்" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட கொரியா மேற்கொண்டு வரும் அணு ஆராய்ச்சித் திட்டங்கள் தொடர்பாக அந்நாட்டு அதிகாரிகளுடன் அமெரிக்க அதிகாரிகள் சிங்கப்பூரில் சந்தித்துப் பேச்சு நடத்தினர். ஆனால் இந்த சந்திப்பின்போது அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தை நடத்த உடன்பாடு இல்லை என்று வட கொரியா தெரிவித்தது.

இதனை அடுத்து கடந்த ஜனவரி 22ஆம் திகதி சைபர் தாக்குதல் குறித்து பேசியிருந்த அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வடகொரியாவைக் குறிப்பிட்டு, "உங்களது ராஜ்ஜியம் வீழ்வதை கண்கூடாக பார்க்கும் நேரம் வரும்" என்று காட்டமாக பேசியிருந்தார்.

ஒபாமாவின் பேச்சுக்கான பதிலாக அமெரிக்காவைக் குறிவைத்து வடகொரியா இந்த அறிக்கை வெளியிட்டுளளது குறிப்பிடத்தக்கது. (இ-5)




## விடாதே பழிவாங்கு விமானியின் தந்தை

இஸ்லாமிய அரசு எனும் அமைப்பின் தீவிரவாதிகளால் உயிருடன் எரித்து கொலை செய்யப்பட்ட ஜோர்தான் நாட்டின் விமானியின் தந்தை, தமது நாடு மேலும் கூடுதலான வகையில் பழி வாங்கும் நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

முதாஃஹ் அல் கசாபெஹ் எனும் அந்த விமானி நேற்று முன்தினம் கொலை செய்யப்பட்டதை அடுத்து, சிறை வைக்கப்பட்டிருந்த இரண்டு ஜிகாதிகளுக்கான மரண தண்டனையை ஜோர்தான் நிறைவேற்றியது.

அதில்ஒருவரான சஜிதா அல் ரிஷாவி எனும் பெண்ணை விடுவித்தால், தங்கள் பிடியில் இருக்கும் பிணைக் கைதி ஒருவரை விடுப்பதாக முன்னர் இஸ்லாமிய அரசின் தீவிரவாதிகள் தெரிவித்திருந்தனர்.

தமது நாட்டின் விமான ஓட்டுநர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்கிற செய்தி வெளியானவுடன், இதற்கு அதிரும்படியான பதிலடி கொடுக்கப்படும் என்று ஜோர்தான் சூளுரைத்துள்ளது.

ஆனால் அந்த விமானி தந்தையோ, இருவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது மட்டுமே போதாது என்று கூறுகிறார்.

இச்செய்தியை கேள்விபட்ட நிலையில் மன்னர் அப்துல்லா தனது அமெரிக்கப் பயணத்தை குறைத்துக் கொண்டு ஜோர்தான்திரும்பியுள்ளார்என பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# வடமேற்கு பாகிஸ்தானில் தலிபான்களின் வெடிகுண்டுத்தாக்குதலில் 6பேர் மரணம்

வடமேற்கு பாகிஸ்தானில் தலிபான்கள் தொலைக் கட்டுப்பாட்டு கருவி (ரிமோட் கொண்ட்ரோல்) மூலம் நேற்று முன்தினம் 2 இடங்களில் வெடிகுண்டு தாக்குதல் நடத்தினார்கள். இத தாக்குதலில் 6 பொலிஸார் பலியானார்கள்.

மேலும் பொதுமக்களில் 18 பேர் படுகாயம் அடைந்தனர். பாகிஸ்தானின் வடமேற்கே ஆப்கான் எல்லை அருகே மன் சேரா மாவட்டம் உள்ளது. இங்கு ஏராளமான பழங்குடி மக்கள் வசித்து வருகின்றனர்.

அத்துடன், ஆப்கான் எல்லையில் உள்ள 3 பிராந்தியங்களிலும் அவர்கள் வசிக்கின்றனர்.

இங்கு நேற்று முன்தினம் காலை பாகிஸ்தான் எல்லை பாதுகாப்பு படை பொலிஸார் ஒரு வாகனத்தில் ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

அப்போது தொலைக்கட்டுப்பாட்டு கருவி மூலம் வெடிகுண்டு தாக்குதல் நடைபெற்றது. இத்தாக்குதலில் 2 பாதுகாப்பு படைபொலிஸார் பலியானார்கள். இத்தாக்குதல் நடைபெற்ற ஒரு மணி நேரத்தில், வடக்கு வசிரிஸ்தான் பிராந்தியம் அருகே மத்திய குர்ரம் பகுதியில் ரோந்து படை பொலிஸார் மீது மற்றொரு வெடிகுண்டு தாக்குதல் நடை பெற்றது.

இத்தாக்குதலில் 4 பொலிஸார் பலியானார்கள். மேலும் பொதுமக்களில் 18 பேர் படு காயம் அடைந்தனர். இந்த 2 இடங்களிலும் தொலைக் கட்டுப்பாட்டு கருவி மூலம் நடைபெற்ற வெடிகுண்டு தாக்குதலுக்கு தலிபான் தீவிரவாத இயக்கம் பொறுப்பேற்று உள்ளது என்று பாகிஸ்தான் எல்லை பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழ் அகதிகள் விவகாரம் குறித்து தமிழக முதல்வருக்கு கருணாநிதி பதில்!

இந்தியாவின் தமிழகத்திலுள்ள அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள ஈழ தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்புவது குறித்து மத்திய அரசு தீவிர நடவடிக்கைகளை எடுத்து வரும் நிலையில் தமிழகத்தில் அ.தி.மு.க., தி.மு.க. இடையே பனிப்போர் மூண்டுள்ளது. இந்நிலையில் இலங்கை அகதிகள் பிரச்சினை குறித்து தமிழக முதலமைச்சருக்கு கலைஞர் கருணாநிதி பதிலளிக்கும் வகையில் அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில்,


இலங்கை அகதிகளைத் திருப்பி அனுப்புவது பற்றி விவாதிப்பதற்காக மத்திய அரசு கடந்த 30ஆம் திகதியன்று டில்லியில் ஒரு கூட்டத்தைக் கூட்டி,அதிலே கலந்து கொள்ள தமிழக அரசின் உயரதிகாரி ஒருவரை அனுப்பி வைக்க வேண்டுமென்று கடிதம் எழுதி, அதற்கு தமிழக அரசின் சார்பில் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் எழுதிய பதிலில் அகதிகள் இலங்கைக்குத் திரும்புவதற்கான சூழ்நிலை இன்னமும் ஏற்படவில்லை என்பதால் அந்தக் கூட்டத்தைத் தள்ளி வைக்க வேண்டுமென்று கடந்த 28ஆம் திகதியன்று தெரிவித்திருந்தார்.

அது பற்றித்தான் நான் விடுத்த அறிக்கையில், "அகதிகள் அங்கே சென்றால், அமைதியான வாழ்வுக்குரிய வழி ஏற்படுமா அல்லது முன்பு போலவே கொடுமை தொடருமா என்றே தெரியாத நிலையில் இலங்கைக்குத் திரும்பினால் என்ன நடக்கும் என்பதும் தெரியாத நிலையில், மத்திய அரசு முக்கியமான தொரு கூட்டத்தை அதற்காகக் கூட்டியுள்ள போது, அதிலே தமிழக மூத்த அதிகாரி ஒருவர் கலந்து கொண்டு, அவதிப்படுகின்ற இலங்கைத் தமிழர்களின் நிலைமைகள் பற்றியும், இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள இன்றைய காலக் கட்டத்தில் ஈழத் தமிழர் நல்வாழ்வுக்கு ஆற்றப்பட வேண்டிய பணிகள் பற்றியும் எடுத்துரைக்கக் கிடைத்த அருமையான வாய்ப்பினை இழக்கின்ற அளவுக்கு முதலமைச்சரின் கடிதம் உள்ளது.

அந்தக் கூட்டத்திலே கலந்து கொண்டு தமிழ் அகதிகளை நல்ல முறையில் வாழ வைக்க வேண்டும், அதற்கான உறுதியைத் தர வேண்டுமென்ற செய்தியை அங்கே தெரிவிக்க வேண்டியது தமிழக அரசின் கடமை அல்லவா?" என்றெல்லாம் நான் கேட்டிருந்தேன்.

இதற்குத்தான் நான்கு நாட்கள் பொறுத்திருந்து பன்னீர்செல்வம் விடுத்துள்ள பதிலில் "இலங்கை அகதிகளை திருப்பி அனுப்பத் துடிக்கிறார் கருணாநிதி" என்று அப்பட்டமான பொய்யைச் சொல்லியிருக்கிறார்.

முதல் அமைச்சர் அறை என்று தனது அறையிலே "போர்டு" மாட்டிக் கொள்ளவோ, அரசாங்க கலண்டரில் ஆண்டுதோறும் வெளியிடுவதைப் போல இன்றைய முதல் அமைச்சரின் புகைப்படத்தைப் போட்டுக் கொள்ளவோ, குடியரசு தின அணி வகுப்பில் வந்த வாகனங்களில் ஒன்றில் கூட தனது புகைப்படத்தை வைத்துக் கொள்ளவோ துணிச்சல் இல்லாமல், முதலமைச்சரே இல்லாத மாநிலம் தமிழகம் எனும் அவப் பெயரை உருவாக்கி வரும் பன்னீர்செல்வத்துக்கு எனக்குப் பதில் சொல்லி அறிக்கை விடவும், மத்திய அரசுக்குக் கடிதம் எழுதவும் மட்டும் தான் அனுமதி உண்டு போலும்! என்னைத் தாக்கி அறிக்கை விட்டால்தான் அம்மையார் மனம் குளிரும், தன்னுடைய பதவி நிலையைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்பதற்காக அவர் அறிக்கை விடுவாரானால், அவருடைய ஆசை நிறைவேறிப் பிழைத்துப் போகட்டும்! நான் அதைத் தடுக்க விரும்பவில்லை. ஆனால் பதில் அறிக்கை என்ற பெயரால் இல்லாததையும், பொல்லாததையும் எழுத்தாக்கி,அரசியல் பிழைப்பு நடத்த முயன்றால் வாங்கிக் கட்டிக் கொள்ளத்தான் வேண்டும் என கருணாநிதி தமிழக முதலமைச்சருக்கு பதிலடி கொடுத்துள்ளார். (இ-5)




பாரதச் செய்தி

# தமிழக மீனவர்களின் 81 படகுகளை விரைந்து திருப்பி அனுப்ப வேண்டும்

## இலங்கையிலுள்ள இந்திய தூதருக்கு தமிழக அரசு கடிதம்

(சென்னை)

**இலங்கை வசமுள்ள தமிழக மீனவர்களின் 81 படகுகளை விரைந்து தமிழகத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு, இலங்கையிலுள்ள**

இதுகுறித்து இலங்கையிலுள்ள இந்தியத் தூதர் ஒய்.கே. சின்ஹாவுக்கு, தமிழக கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வ ளத் துறை செயலர் டாக்டர் எஸ். விஜயக்குமார் எழுதியுள்ள கடிதத்தில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்திய வெளியுறவுத்துறை இணைச் செயலர் தமிழக அரசுக்கு எழுதியுள்ள கடிதத்தில், இலங்கை அரசின் வசம் இருக்கும் தமிழக மீனவர்களுக்கு சொந்தமான 81 படகுகளை மீட்பது குறித்து, இலங்கையிலுள்ள இந்தியத் தூதரை அணுகுமாறு தெரிவித்துள்ளார். படகுகளை மீட்பது குறித்து அதன் உரிமையாளர்கள் இலங்கை அரசு அதிகாரிகளுக்கு முறைப்படி விணணப்பம் அளிக்க வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

இதுகுறித்து இந்தியத் தூதர் தெளிவாக விளக்க வேண்டும். கடந்த காலங்களில் மீனவர்கள் விடுதலை செய்யப்படும்போதே அவர்களது படகுகளும் விடுவிக்கப்பட்டன. விடுதலையாகும் மீனவரின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் இந்த முறை மீனவர்கள் விடுதலையான பிறகும் படகுகள் இலங்கை அரசின் வசமே உள்ளன. படகுகளுக்காக தனியாக விண்ணப்பிக்கும் முறை இதுவரை இல்லை.

### படகுகள் பாதிப்பு

தமிழக அரசு இந்தப் பிரச்சினைகளில் பலமுறை கடிதம் மூலமாக படகுகளை விடுவிக்க வலியுறுத்தி வந்தது. தமிழக மீனவர்களின் படகுகள் இலங்கையில் பாதுகாப்பற்ற முறையில் நீரில் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதால், அவ்வை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.



எனவே, அந்த படகுகளை விரைந்து தமிழகத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும்.

இதுகுறித்து இரு நாட்டு தூதர்கள் மற்றும் அதிகாரிகள் மத்தியில் பேச்சு நடத்தி, தமிழக மீனவர்க்ளின் படகுகளை விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)



சென்னையிலுள்ள இலங்கை பிரதி தூதுவராலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 67 ஆவது சுதந்திர தின வைபவத்தில் பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் கே.வேலாயுதம் இலங்கை தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். இதன்போது பிரதித் தூதுவர் சபறுல்லா கான் தூதரக அதிகாரிகளான எம்.கே.பத்மநாதன், ஓ.எல்.அமீர் அஜ்வாட், அனுஷா சிவராஜா,பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சரின் இணைப்பு செயலாளர் எச்.எச்.விக்ரமசிங்க, தினகரன் வார வெளியீட்டின் ஆசிரியர் தெ.செந்தில்வேலவர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவரை உயிரோடு புதைத்த ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகள்

**ஐ.நா.கண்காணிப்புக்குழு தகவல்**

(ஜெனீவா)

அல்கொய்தா தீவிரவாத இயக்கத்தில் இருந்து பிரிந்த ஒரு தீவிரவாத குழு, இஸ்லாமிய நாட்டை உருவாக்கி இருப்பதாக கூறி ஈராக் மற்றும் சிரியா நாடுகளின் ஒரு பகுதியை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளது.

ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகள் என்றழைக்கப்படும் இந்த தீவிரவாத குழு ஈவு, இரக்கமற்ற அட்டூழிய செயல்களைத் தொடர்ந்து செய்து வருகிறது. அண்மையில் பிணைக கைதியாக பிடித்து வைத்திருந்த ஜோர்தான் நாட்டு விமானியை கூண்டுக்குள் அடைத்து உயிரோடு தவைத்து எரித்து கொன்று நெஞ்சை பதற வைக்கும் கொடூரத்தை ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகள் செய்தனர்.

இந்த நிலையில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவா திகளின் மற்றொரு வெறிச் செயலை ஐ.நா. சபையின் கண்காணிப்புக்குழு வெளியிட்டுள்ளது. ஈராக் மற்றும் சிரியாவின் ஒரு பகுதியை ஆக்கிரமித்த போது ஏராளமான சிறுவர், சிறுமிகளை ஐ.எஸ். ஐ.எஸ். தீவிர வாதிகள் பிணைக் கைதிகளாகப் பிடித்துச் சென்றனர்.

அவர்களில் சிறுவர்களை அவர்கள் அடித்து துன்புறுத்தி சித்ரவதை செய்தனர். அதில் பல சிறுவர்கள் உயிரிழந்தனர். ஏனைய சிறுவர்களை பெரிய குழி தோண்டி ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் உயிரோடு, புதைத்து கொன்று விட்டதாக ஐ.நா. கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

பிணைக் கைதியாக பிடித்த இளம பெண்கள் மற்றும் சிறுமிகளை ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகள் இன்னமும் தங்கள் பகுதிகளில் அடிமைகள போல வைத்துள்ளார்களாம். அவரகளை தீவிரவாதிகள் தினம், தினம் பாலியல் ரீதியாக துன்புறுத்தி வருவதாக ஐ.நா.சபை கண்டனம் வெளியிட்டுள்ளது.

இஸ்லாமியர்களில் உள்ள ஒரு சிறுபான்மைப் பிரிவைச் சேர்ந்தவர்கள ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் இத்தகைய வெறிச் செயல்களால் கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பிணைக் கைதியாக பிடிபட்ட பல இளைஞரகளை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் மிரட்டி அச்சுறுத்தி தற்கொலை தாக்குதல்நடத்த பயன்படுத்தி வருவதாகவும் தெரிய வந்துள்ளது.

இது தவிர தங்களுக்கு எதிராக போரிடும் இராணுவத்தை சமாளிக்க பிணைக்கைதிகளாக உள்ள அப்பாவி சிறுவர்களை மனித கேடயமாகவும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் பயன படுத்தி வரும் தகவலை ஐ.நா.சபை கண்காணிப்புக்குழு வெளியிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# மகிந்தவை பிரதமர் வேட்பாளராக நிறுத்த அழுத்தம் கொடுக்கப்படும்

## உதய கம்மன்பில தெரிவிப்பு



(கொழும்பு)

**ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதமர் வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தெரிவு செய்யுமாறு அழுத்தம் கொடுக்கும் அணியாக தாம் உட்பட சிலர் செயற்பட போவதாக பிவித்துரு ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரான மேல் மாகாண சபை உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

மகிந்தவை பிரதமர் வேட்பாளராக நிறுத்த அழுத்தம் கொடுக்கப்படுமே அன்றி, புதிய அரசியல் கூட்டணியை உருவாக்க முயற்சிக்கவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

எனினும் இந்த வேலைத் திட்டத்தை குழப்ப சில குழுக்கள் பொய் பிரசாரங்களை முன்னெடுத்துள்ளதுடன், புதிய அரசியல் கூட்டணியை உருவாக்க போவதாக கதைகளை பரப்பி வருகின்றன.

புதிய அரசியல் கூட்டணியை உருவாக்கி தலைவர் பதவியை முன்னாள் ஜனாதிபதிக்கும், தேசிய அமைப்பாளர் பதவியை கோத்தபாய ராஜபக்ஷவுக்கும், செயலாளர் பதவியை நானும், பிரசார செயலாளர் பதவியை விமல் வீர வன்சவுக்கும் வழங்க போவதாக பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதனை தவிர எங்களுடன் இருக்கும் தினேஷ் குணவர்தனவுக்கு எந்த பதவிகளும் வழங்கப்பட மாட்டாது என கூறி, எமக்கும் அவருக்கும் இடையில் பிரச்சினைகளை ஏற்படுத்த முயற்சித்து வருகின்றன.

பொதுத் தேர்தலில் பிரதமர் வேடபாளராக மகிந்த ராஜபக்ஷவை நிறுத்த வேண்டும் என விமல் வீரவன்ச, தினேஷ் குணவர்தன, வாசுதேவ நாணயக்கார ஆகியோருடன் ஒரு அணியாக நாங்கள் அழுத்தங்களை கொடுப்போம்.

எனினும் பிரதமர் வேட்பாளராக போட்டியிடுவதை மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டாரா என்பது பற்றி இதுவரை தெரியவரவில்லை.

முன்னாள் ஜனாதிபதியை பிரதமர் வேட்பாளராக நிறுத்துவதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் பெரும்பாலான தலைவர்களை இணங்க வைக்க தீவிர முயற்சிகளை மேற்கொள்வோம் எனவும் உதய கம்மன்பில மேலும் தெரிவித்தார். (இ-5)

# கிழக்கு முதலமைச்சர் பதவியை பகிர்வதே பிரச்சினைக்குத் தீர்வு

**பசீர் பரிந்துரை**

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் விவகாரம் தொடர்பில் மாகாண சபையில் எஞ்சியுள்ள இரண்டரை வருட ஆட்சிக் காலப் பகுதியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் ஒரு வருடம், ஒன்றரை வருடமென்று இரண்டாக வகுத்து தீர்வு காண்பது இரு சமூகங்களுக்கிடையிலும் சுமுக நிலையை ஏற்படுத்துமென்று ஸ்ரீலங்கா முஸலிம் காங்கிரஸின் தவிசாளர் பசீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கும நேற்று முன்தினம் புதன்கிழமை எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "மத்திய அரசில் மாற்றம் வேண்டி புதிய அரசாங்கம் உருவான பின்னர், கிழக்கு மாகாணசபையிலும் ஆட்சி மாற்றம் வேண்டுமென்று தமிழ், முஸ்லிம் கட்சிகள் விரும்புவதை காணமுடிகிறது.

இந்த விருப்பத்தின் பிரதான பாதமாக தமிழ் முதலமைச்சர் வேண்டுமென்று பிரதான தமிழ் கட்சியும் முஸ்லிம் முதலமைச்சர் வேண்டுமென்று பிரதான முஸ்லிம் கட்சியும் கோருகின்றனர். தமிழ், முஸ்லிம் மக்களுடைய அரசியல் அபிலாஷைகள் இன்னும் நிறைவேறவில்லை. இந்தச் சூழ்நிலையில் தமிழ் தேசிய போராட்டங்களும் முஸ்லிம் தேசிய அரசியலும் யதார்த்தமாகவே தமது இறுதி குறிக்கோளை அடைந்து கொள்வதற்கு இரண்டு சிறுபான்மை இனங்களுக்குமிடையில் ஒற்றுமையும் உடன்பாடும் அவசியமாகும். கடந்த காலத்தில் இவ்விரு சமூகங்களுக்கிடையிலும் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்ட முரண்பாடுகளும் கலவரங்களும் இனப்பிரச்சினை தீர்விலும் உரிமைகளை வென்றெடுப்பதிலும் எத்துணை தடைக்கற்களாக இருந்தனவென்பதை வரலாறு நிரூபித்துள்ளது. கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவி தொடர்பில் தமிழ் - முஸ்லிம் ஆகிய இரு தரப்புகளும் பல நாட்களாக அதிக பரப்புரைகளை செய்து வருவது துரதிர்ஷ்டவசமானது. யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் ஆரோக்கியமாக வளர்க்கப்பட்டு வந்த தமிழ் - முஸ்லிம் உறவுக்கு இந்த பரப்புரைகளினால் பாதகம் ஏற்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியை அடையும் ஒரு தரப்பின் இனத்துக்கு இப்பதவி மூலம் கிடைக்கும் அனுகூலங்களை விட, இப்பதவிப் பிரச்சினையால் தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு ஏற்படக் கூடிய பிரதிகூலங்களே அதிகமாக இருக்குமென்பதுடன், இது தொடர்ந்தும் மோசமான பிரிவினையையும் முரண்பாடுகளையும் இரு இனங்களுக்கிடையிலும் ஏற்படுத்தக்கூடுமென்றும் நான் அஞ்சுகிறேன்.

இரு தரப்பும் கோரும் கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவி குறித்த பரப்புரைகள் தத்தமது மக்களின் உரிமையும் அவர்களின் அபிலாஷையுமே என்பதாக கட்டமைக்கப்படுகிறது. ஆனால், இக்கோரிக்கையின் உள்ளுண்மை யாதெனில், கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிகளுக்கே தேவைப்படுகிறது என்பதாகும் என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

# பிரிவுத்துயர் பகிர்வு

### திரு.யோசப் பஸ்ரியாம்பிள்ளை சின்னத்துரை



யாழ். ஒட்டகப்புலத்தை பிறப்பிடமாகவும் கனடா Montreal ஐ வதிவிடமாகவும் கொண்ட யோசப் பஸ்ரியாம்பிள்ளை சின்னத்துரை கடந்த 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் திருவுடல் நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் Rideau Memorial Gardens & Funeral Home, 4239 Sourced Boulevard, Dollard- des-Ormeaux, QC H9B 2A6, Canada எனும் முகவரியில் நடைபெற்று பின்னர் நல்லடக்கம் செய்யப்படும்.

### திருமதி சின்னம்மா இரத்தினம்



யாழ். கரவெட்டி தச்சன் தோப்பை பிறப்பிடமாகவும் கனடா Brampton ஐ தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னம்மா இரத்தினம் கடந்த 31 ஆம் திகதி சனிக்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம் நண்பகல் 12 மணியளவில் St.John's Norway Cemetery, 256, Kingston Road, Toronto, On M4L 1S7, Canada எனும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### திருமதி கமலாதேவி மனோகரன்



யாழ்.ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும் லண்டன் Perivale ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கமலாதேவி மனோகரன் கடந்த முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை சனிக்கிழமை 01.30மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் Hendon Cemetery & Crematorium, Holders Hill Road,London, NW7 1NB, United Kingdom எனும் முகவரியில் தகனம் செய்யப்படும்.

### திரு.கார்த்திகேசு செல்லத்துரை



யாழ். உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கு, கோப்பாய் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு செல்லத்துரை கடந்த 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார். அன்னாரின் பூதவுடல் நாளை சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு Ferest Lawn Crematorium, 4570 Yong Street, Toronto,Ontario, ON M2N 5L6, Canada எனும் முகவரியில் தகனம் செய்யப்படும்.

### திரு.ஜோசெப் செபராஜா சரவணமுத்து



யாழ்.சுன்னாகம் சூராவத்தையைப் பிறப்பிடமாகவும் லண்டன் Eastham ஐ வதிவிடமாகவும் கொண்ட ஜோசெப் செபராஜா சரவணமுத்து கடந்த 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11மணிக்கு Manor park Cemetery and Crematorium, Debert Road, London E7 ONP United Kingdom எனும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

### திரு.பாலசிங்கம் சுந்தரலிங்கம்



யாழ்.கச்சேரி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் லண்டன் Coventry ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் சுந்தர லிங்கம் கடந்த 27 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 09 ஆம் திகதி திங்கட்கிழமை 346-345 Foleshill Road,Conventry, West Midlands CV6 5AJ,UK எனும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தையன்கட்டு நீர்ப்பாசனத்தின் கீழ் நான்கு ஏக்கரில் சிறுபோக செய்கை

(மல்லாவி)

**முத்தையன்கட்டு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள முத்தையன்கட்டு குளத்தின் கீழ் எதிர்வரும் மார்ச் மாதம் விவசாயிகளின் நலன்கருதி 4 ஏக்கர் வயல் நிலங்களில் சிறுபோக நெற் செய்கை மற்றும் உப உணவு செய்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக முத்தையன்கட்டுநீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியலாளர் கு.செந்தூரன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

முத்தையன்கட்டு நீர்ப்பாசனக் குளத்திற்கு புனரமைப்பு வேலை களை மேற்கொள்வதற்கு நடப்பாண்டில் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது குளத்தில் தேக்கி வைக்கப்பட்டுள்ள 20 அடி கொள்ளளவு நீரில் விவசாயிகளின் நலன் கருதி 3 ஆயிரம் ஏக்கர்களில் நெற் செய்கை மேற்கொள்வதற்கும் ஆயிரம் ஏக்கர் களில் உப உணவுப் பயிர்கள் பயிரிடுவதற்கும் அண்மையில் நடைபெற்ற கலந் துரையாடலின்போது முடிவெடுக்கப் பட்டுள்ளது.

இதற்கமைய நடப்பாண்டில் சிறுபோக செய்கையாக மார்ச் மாதத்தில் நெல் மற்றும் உப உணவுப் பயிர்களை பயிரிட்டு ஜூன் மாதத்திற்குள் அறுவடை செய்யக்கூடிய மூன்று மாத கால பயிர்களை பயிரிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே விவசாயிகள் அனைவரும் உரியகாலத்திற்குள் பயிர்களைப் பயிரிடவேண்டுமெனவும் அதற்கு பின்னரான காலப்பகுதியில் பயிரிடுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதால் இதனை கவனத்தில் எடுத்து சிறுபோக செய்கையை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.(அ-2-15)

# பொலிஸ் உத்தியோகத்தர் மீது துப்பாக்கிப் பிரயோகம்

(குருமன்காடு)

ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது இனந் தெரியாதோர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதில் பொலிஸ் அதிகாரி ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா பெரிய உலுக்குளம் பகுதியில் நேற்று அதிகாலை 2 மணியளவில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

இச்சம்பவத்தில் எஸ்.பிரியந்த என்ற கொஸ்தாபிளே காயமடைந்தவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

இப்பகுதியில் சட்டவிரோதமான மிருக வேட்டை, மரக்கடத்தல் என்பன இடம்பெற்று வருகின்றன. இவற்றைத் தடுப்பதற்காக ரோந்து சென்ற வேளையிலேயே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றது.

இதில் காயமடைந்த பிரஸ்தாப பொலிஸ் அதிகாரி உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இத்தாக்குதலுக்கு இடியன் துப்பாக்கி பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதனையடுத்து அப்பகுதியில் செட்டிகுளம் பொலிஸார் தேடுதலை நடத்தி வருவதுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.* (அ-2-250)




# ஓமந்தையில் அனைத்து வாகனங்களும் பதிவுக்குட்படுத்தப்பட்டன

(மல்லாவி)

ஓமந்தை சோதனைச் சாவடியில் கடந்த ஒரு சில நாட்களாக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்கள் உட்பட பயணிகள் போக்குவரத்து ஊர்திகள் மற்றும் ஏனைய ஊர்திகளின் பதிவுகள் நேற்று அதிகாலையிலிருந்து ஆரம்பிக்கப்பட்டதை காணக்கூடியதாகவுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

கடந்த முதலாம் திகதி தொடக்கம் அரசாங்கத்தின் அறிவித்தலுக்கு அமைய ஓமந்தையில் இராணுவம் மற்றும் பொலிஸ் இணைந்த சோதனைச் சாவடியில் மோட்டார் சைக்கிள்கள், பயணிகள் பேருந்துகள், ஏனைய பயணப்போக்குவரத்து வாகன ஊர்திகளின் இராணுவப் பொலிஸ் பதிவுகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன் ஏ-9 பிரதான வீதியில் அமைக்கப்பட்ட தடையும் அகற்றப்பட்டிருந்தது.

இந்த நிலையில் பொருட்களை ஏற்றிச் சென்ற வாகனங்கள் சோதனையிடப்பட்டதுடன் வாகனங்களின் பதிவுகளும் நடைபெற்றன.

இந்நிலையில் நேற்று அதிகாலை தொடக்கம் ஓமந்தைச் சாவடியிலுள்ள ஏ-9 வீதி தடை மீண்டும் ஏற்படுத்தப்பட்டதுடன்அனைத்து வாகனங்களும் சோதனைக்குட் படுத்தப்பட்டு பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதில் பயணிகள் பேருந்தில் பயணித்தவர்களுடைய ஆள் அடையாள அட்டை சோதனையிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கடந்த திங்கட்கிழமை அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்க செயலர் நிசா பிஸ்வால் இலங்கைக்கு வருகை தந்து ஒரு சில மணி நேரத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஓமந்தை சோதனை நடவடிக்கைகள் மீண்டும் நேற்று அதிகாலை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2-15-250)

## அம்பலப்பெருமாள் குளம்

# முழுமையாக புனரமைக்கப்படின் சுமார் 900 ஏக்கருக்கு நீர்ப்பாசனம்



முல்லைத்தீவு அம்பலப் பெருமாள் குளம் புனரமைக்கப்படும் பட்சத்தில் 900 ஏக்கர் வரையான நிலப்பரப்பிற்கு நீர்ப்பாசனம் வழங்கப்படுமென வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பெறியியலாளர் பா.விகர்ணன் தெரிவித்துள்ளார்.

அம்பலப்பெருமாள் குளத்தின் மிகுதி புனரமைப்பு பணிகளின் மிகுதி வேலைகளை மேற்கொள்வதற்கு 25 மில்லியன் ரூபாய் தேவையெனக் கோரி முல்லைத்தீவு மாவட்ட நீர்ப்பாசனப் பணிப்பாளர் ஊடாக வடமாகாண விவசாய அமைச்சுக்கு கடிதம் அனுப்பியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

என்.டி.எப்.திட்டத்தின் கீழ் 50 மில்லியன் ரூபாய் செலவில் இந்தக் குளத்தின் கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

ஒப்பந்தகாரர்களின் இழுத்தடிப்புக் காரணமாக 25 மில்லியன் ரூபாய் பெறுமதியான வேலைகள் பூர்த்தியடைந்த நிலையில் புனரமைப்பு பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

குளத்தில் அலைகற்கள் அடுக்கப்பட்டுள்ளன. குளத்தின் அணைக்கட்டுக்கு குவிக்கப்பட்ட மண் மழைக்கு கரைந்து குளத்தின் உட்பகுதியினை அடைந்துள்ளன.

அத்துடன் குளத்தின் வான்பகுதி மற்றும் வாய்க்கால்கள் என்பன புனரமைக்கப்பட வேண்டியுள்ளன.

இதுவரை புனரமைத்த குளத்தின் நீரைக் கொண்டு 600 ஏக்கர் நிலப்பரப்புக்கு மாத்திரம் விவசாயம் மேற்கொள்ள முடியும்.

நிதியுதவி கிடைத்தவுடன் அம்பலப்பெருமாள் குளம் முழுமையாக புனரமைக்கப்படும். இந்தக் குளம் புனரமைக்கப்படும் போது 900 ஏக்கர் வரையான நிலப்பரப்புக்கு நீர்ப்பாசனம் செய்யப்படும்.

தற்போது இக்கிராமத்தில் சுமார் 110 குடும்பங்கள் இக்குளத்தை நம்பி விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# அலெக்ஸ் பரந்தாமனின் நூல்கள் வெளியீடு

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு பிரதேச பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் புதுக்குடியிருப்பு பிரதேச எழுத்தாளர் அலெக்ஸ் பரந்தாமனின் "அழுகைகள் நிரந்தரமில்லை" எனும் சிறுகதை தொகுப்பும், "மரண வலிகள்" எனும் கவிதைத் தொகுப்பு ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை அதிபர் இ.செல்வநாயகம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் இ.பிரதாபன், சிறப்பு விருந்தினராக புதுக்குடியிருப்பு கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.சேய்சோதிகாந்தன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இதன்போது சிறுகதைக்கான நூல் ஆய்வை முல்லைத்தீவு கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்த்துறை) சி.பீதாம்பரம் நிகழ்த்த கவிதை நூல் ஆய்வை கலா பூசணம் ந.இராமநாதன் நிகழ்த்துவார்.

எனவே ஆர்வலர்கள், இலக்கியத் துறை சார்ந்தோர் ஆகியோரை இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (அ-2)

# விலைக்குறைப்பு செய்யப்படாமல் பொருட்கள் விற்கப்படுகின்றன

## கட்டுப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை

(மல்லாவி)

துணுக்காய், மாந்தைகிழக்கு, ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்குட்பட்ட வர்த்தக நிலையங்களில் அரசினால் அறிவிக்கப்பட்ட இடைக்கால வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் விலைக்குறைப்புசெய்யப்பட்ட உணவுப்பொருட்கள் உட்பட அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்படாது பழைய விலையில் விற்கப்படுவதுடன் விலைப்பட்டியலும் காட்சிப்படுத்தப்படவில்லையென மேற்படி பிரதேசங்களைச் சேர்ந்த பொதுமக்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

இதுதொடர்பில்தெரியவருவதாவது,

அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட 13 வகையான உணவுப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் இதுவரை விற்பனை நிலையங்களில் விலைக் குறைப்பு செய்யப்படவில்லை.

இது தொடர்பில் பொதுமக்கள் வர்த்தக நிலைய உரிமையாளர்களிடம் வினவியபோது நிறுவனங்கள் மற்றும் கம்பனிகள் தங்களுக்கு புதிய விலையில் பொருட்களை இதுவரை வழங்கவில்லையெனவும் பழைய விலையில் உள்ள பொருட்களை புதிய விலையில் விற்பதற்கு அனுமதிக்காததன் காரணத்தினால் இவ்வாறு விற்பதாகவும் விரும்பினால் பொருட்களைக் கொள்வனவு செய்யுமாறு கூறுகின்றனர். அத்தோடு பால்மா வகைகளுக்கும் சீமெந்திற்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

அத்துடன் வெதுப்பக உற்பத்தி பொருட்களுக்கும் விலைக்குறைப்பு செய்யப்படாது உள்ளதுடன் நிறை குறைவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது.

எனவே நுகர்வோர் பாவனையாளர் அதிகார சபை, பிரதேச சபை உட்பட துறைசார்ந்த அதிகாரிகள் துரிதமாக செயற்பட்டு நியாயமான விலையில் தரமான பொருட்களை தட்டுப்பாடின்றி கொள்வனவு செய்வதற்கு வழி ஏற்படுத்தித்தர வேண்டுமென பாதிக்கப்பட்டுள்ள மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதேபோன்று கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் பழைய விலைகளில் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதுடன் பொருட்களை பதுக்கி வைத்து வியாபாரம் செய்யும் நிலை காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (அ-2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுநெருப்பை பாக்கி வைத்தாலும்
பகையை பாக்கி வைக்கக் கூடாது
- பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# சுதந்திர தின வைபவத்தில் ஒரு வித்தியாசமான உரை

நாட்டின் 67-வது சுதந்திர தின நிகழ்வு நேற்று முன்தினம் 4-ந் திகதி நடைபெற்றது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுதந்திரதின உரையை ஆற்றியிருந்தார்.

மகிந்த ராஜபக்ச ஆற்றவேண்டிய உரையாக இது இருந்த போதிலும் ஆண்டவனின் கட்டளை மைத்திரியை உரையாற்ற வைத்தது.

கடந்த காலங்களில் நாட்டின் சுதந்திரதின நிகழ்வுகளில் தலைவர்கள் ஆற்றி உரைகள் எப்படி அமைந்திருந்தன என்பதற்குச் சான்றாதாரங்கள் உண்டு. சிங்கள மக்கள் விருட்சம் எனில் சிறுபான்மை மக்கள் அதில் படரும் கொடிகள் என்றார் ஜே.ஆர். இந்த நாடு பௌத்த சிங்களவர்களுக்கு உரியது என்பார் மகிந்த. சுடவே நெஞ்சை நிமிர்த்தி சர்வதேசத்தை - ஐ.நா சபையை அதட்டுவது போலவும் அவரின் பேச்சு இருக்கும்.

உண்மைகள் ஒருபுறமாக இருக்க, மகிந்தவின் சுதந்திரதின உரை சர்வாதிகாரம் கொண்ட கர்வத்தைக் காட்டுவதாக அமையும். ஆனால் 67-வது சுதந்திரதின நிகழ்வு மிகவும் எளிமையாக நடந்தது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாற்றினார். அவரின் உரை உள்ளார்ந்தமான கவலையை வெளிப்படுத்தி நின்றது.

அதாவது வடக்கு கிழக்கு மக்களையும் தெற்கு மக்களளையும் ஒன்றிணைக் முடியவில்லை என்பதே அவர் வெளியிட்ட கவலை.

66 ஆண்டுகளாக உணரப்படாத அல்லது வெளியில் சொல்லாமல் ஆட்சித் தலைவர்கள் மறைப்புச் செய்த ஒரு பெரும் உண்மையை 67-வது வருடத்தில் ஜனாதிபதி மைத்திரி வெளிப்படுத்தியது சுதந்திரதின நிகழ்வை அர்த்தமுள்ளதாக்கியது எனலாம்.

உண்மையான சுதந்திரம் என்ன என்பதைப் புரிந்து கொள்ளாமல் ஆட்சியாளர்கள் சுதந்திரதின நிகழ்வுகளை அனுஸ்டித்து வந்துள்ளனர். எனினும் இலங்கைத் திருநாட்டின் சுதந்திரதினம் என்பது சிங்கள மக்களுக்கு சொந்தமானதாகவே கருதப்பட்டது.

நாட்டின் சுதந்திரதினத்தை அனைத்து மக்களும் உணர்வுபூர்வமாகக் கொண்டாட வேண்டும் என்று எவரும் நினைத்திலர். ஆனால் அந்த நினைப்பு ஜனாதிபதி மைத்திரியிடம் இருந்ததென்பதை ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

ஏனெனில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா சுதந்திரதின நிகழ்வில் ஆற்றிய உரை வித்தியாசமானது. ஒரு சுதந்திரதின நிகழ்வில் வடக்கு கிழக்கு மக்களையும் தென்பகுதி மக்களையும் இணைக்க முடியவில்லை என்று கூறியதற்குள் சிறுபான்மை இனங்களின் அடிப்படைப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை என்ற உண்மை உறுதிசெய்யப்படுகின்றது.

அதேநேரம் நாட்டின் சுதந்திரதின நிகழ்வென்பது இனத்துவ ஒற்றுமையோடு நடக்கவில்லை என்பதையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒட்டு மொத்தத்தில் 67-வது சுதந்திரதின நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரி ஆற்றிய உரையின் அடிப்படை நாடு சுதந்திரம் அடைந்து 67 ஆண்டுகள் கடந்த போதிலும் இன ஒற்றுமையை ஏற்படுத்த முடியவில்லை. எனவே மூவின மக்களும் ஒற்றுமைப்பட வேண்டுமென்பதாகும்.

ஆக, கடந்த காலங்களில் இடம்பெற்ற சுதந்திர தின நிகழ்வுகளில் ஆட்சித் தலைவர்கள் பேரினவாத சிந்தனையை தூண்டுவதாக தமது உரைகளை அமைத்துக் கொண்டனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா மட்டும் இன ஒற்றுமை ஏற்படுத்தப்படவில்லை என்ற உண்மையை முதல் தடவையாக சிங்கள மக்களுக்கும் சர்வதேசத்திற்கும் சாட்சியப்படுத்தியுள்ளார்.

அந்த வகையில் ஜனாதிபதி மைத்திரியின் ஆட்சிப்புலம் திருப்தியாக அமையும் என்பதுடன், மைத்திரி ஆற்றிய உரை தென்பகுதி மக்களின் மனப்பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும் நம்பலாம்.

நாட்டில் பாரிய அபிவிருத்தி ஏற்படாவிட்டாலும் மக்களின் மனங்களில் இனக் குரோதம் ஏற்படாமல் இருப்பது அவசியம்.

# சம்பந்தனுக்கு எதிராக பிரி.யில் ஆர்ப்பாட்டம்!

## உருவப் பொம்மைகளும் எரிப்பு

(லண்டன்)

இலங்கையின் சுதந்திரதின நிகழ்ச்சியில் கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன மற்றும் சுமந்திரன் ஆகியோரின் உருவப்படங்களும் போராட்டத்தில் கலந்து கொண்ட இளைஞர்களால் கொளுத்தி எரிக்கப்பட்டது.

1972ஆம் ஆண்டிற்குப் பின்னர் தமிழர்கள் கறுப்புப்பட்டி அணிந்து துக்க நாளாகக் கடைப்பிடிக்கும் சிங்கள அரசின சுதந்திரநாள் நிகழ்ச்சியிலே தமிழ் அரசியல் தலைவர்கள் சம்பந்தனும் சுமந்திரனும் கலந்து கொண்டமையானது துரோகச் செயல் என போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் தெரிவித்தனர்.

சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர் மீது மட்டுமன்றி ஏனைய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதும் மக்கள் தமது கடும் எதிர்ப்பைத தெரிவித்தனர்.

மாலை 6.00 மணியளவில் பிரித்தானியத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பொறுப்பாளர் கந்தையா இராஜமனோகரன் அவர்களின் உரையைத் தொடர்ந்து, வடமேற்கு லண்டன் மாவீரர் செயலகப் பொறுப்பாளரும் மாவீரர் 2ஆம் லெப்டினன்ட் பெரியதம்பியின் மகனுமாகிய பிறேம் விடுதலைச்சுடரை ஏற்றி வைக்க, பிரித்தானியத் தமிழர் ஒருங் கிணைப்புக் குழுவின் தென்மேற்கு லண்டன் செயற்பாட்டாளர் சிவானந்தம் செல்வக்குமரன் விடுதலைச் சுடரேந்தி போராட்டத்தை மேற்கொண்டுள்ளார். (எ-11)

# ஜனாதிபதிக்கு எதிராக மேன்முறையீட்டு மனு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மக்களின் அடிப்படை உரிமைகளை மீறி தொடர்ந்தும் இராணுவ ஆட்சியை முன்னெடுக்க முயற்சித்து வருவதாக ஜனாதிபதி மீது முன்னணி சோசலிச கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

கடந்த அரசாங்கம் செய்த தவறையே புதிய அரசாங்கமும் மேற்கொண்டு வருகின்றது என கட்சியின் பிரசார செயலாளர் புபுது ஜாகொட குற்றம் சுமத்தியுள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு விசேட ஒழுங்கு விதிகளின் கீழ் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் மூலம் பொலிஸ் அதிகாரங்களை முப்படையினருக்கும் வழங்கும் நடைமுறை தொடர்ந்தும் அமுலில் இருப்பதாகக் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த வர்த்தமானி அறிவித்தலின் மூலம் நாட்டில் சிறப்பான ஆட்சிக்கு பதிலாக இராணுவ ஆட்சியே தொடர்கின்றது என அவர தெரிவித்துள்ளார். (எ-11)

# சட்டமாணி தெரிவுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் சட்டமாணி (LLB) கற்கைநெறிக்கான தெரிவுப்பரீட்சை நாளை காலை 10.00 மணி தொடக்கம் 12.00 மணிவரை ஏற்கெனவே திட்டமிட்டவாறு இலங்கைத்திறந்த பல்கலைக் கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்திலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சார்ந்த பரீட்சை மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

எனவே இப்பரீட்சைக்காக விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் தங்களுக்குரிய பரீட்சை மண்டபங்கள் தொடர்பான விபரங்களை மேற்குறித்த தினத்தில் யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய விளம்பரப் பலகையில் பார்வையிட முடியும் என யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் கே.கந்தவேள் தெரிவித்துள்ளார். (ஏ)

# மணவாளக்கோல விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான மணவாளக்கோல உற்சவம் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 1008 சங்காபிசேகத்துடன், விசேட பூசையும் மகேஸ்வர பூசையும் நடைபெறும்.

மாலை 5 மணிக்கு முருகப் பெருமானுக்கு விசேட பூசை நடைபெற்று திருவீதியுலா நடைபெறும். (எ-277)

# துமிந்த சில்வாவுடன் சேர மறுத்த அமைச்சர்கள்

(கொழும்பு)

சுதந்திர தினத்தை முன்னிட்டு கொழும்பு ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விருந்துபசாரம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

விருந்தில் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா அவரது தங்கையான திலினி சில்வாவுடன் கலந்து கொண்டதுடன் இவர்கள் ஜனாதிபதி மைதிரிபால சிறிசேனவுடன் இணைந்து புகைப்படம் ஒன்றை எடுக்க கடும் முயற்சியை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் அந்த முயற்சி வெற்றி பெறவில்லை. இதனை தவிர துமிந்த சில்வா, அமைச்சர்களுடன் கலந்துரையாட முயற்சித்த போதிலும் அதுவும் நடக்கவில்லை எனவும் கூறப்படுகிறது.

அதேவேளை இந்த விருந்துபசாரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின வாஸ் குணவர்தனவும் கலந்து கொண்டதுடன் அவருடன் எவரும் உரையாடவில்லை.

இந்த விருந்துபசாரம் ஜனாதிபதி மற்றும் அவரது பாரியாரின் அழைப்பின பேரில் நடந்தது.

துமிந்த மற்றும் சஜின்வாஸ் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஹெரோயின் மற்றும் கடும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)



# சத்திய தரிசனம்


## இனிமை பொங்கட்டும்

❖ கண் கண்ட தெய்வமான சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக பொங்கல் விழாவைக் கொண்டாடுகிறோம்.

❖ மகரசங்கராந்தி என்னும் இந்நாளில் சூரியன் தன் பாதையை மாற்றுவது போல, வாழ்வில் நல்ல மாறுதலை உருவாக்க முயல வேண்டும்.

❖ அரிசியும், வெல்லமும் இணைந்து பொங்கலாக இனிப்பது போல அன்பும், நட்புணர்வும் நம்முள் இணைந்தால் வாழ்வு இனிக்கும்.

❖ உழைப்பின் அருமையை உணர்த்தும் இந்த நன்னாளில் கடமையைச் செய்ய உறுதி கொள்வோம்.



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## பைரவரை வழிபடுவது ஏன்?

தீயோர்களுக்கு பயத்தை ஏற்படுத்தவும், அத்தீயோரால் பயம் கண்டோரின் பயத்தைப் போக்கவும் வெளிப்பட்டது பைரவர் அவதாரம். சிவபெருமானின் தத்புருஷ முகத்திலிருந்து தோன்றியவரும், சிவகணங்களுக்கு தலைவருமானவர் பைரவர். பிரமனின் அகந்தையை அழிக்க சிவபெருமானின் ஆணைப்படி உருத்திரர் உருக்கொண்டு பிரமனின் ஐந்தாவது தலையை துண்டித்தவர். அறுபத்து நான்கு திருவடிவங்களாகக் கூறப்பட்டுள்ள பைரவரின் தலை மீது தீ ஜுவாலை, திருவடிகளில் சிலம்பு, மார்பில் கபால மாலை துலங்குவதைக் காணலாம். இவர் முக்கண் கொண்டவர். திரிசூலம், கபாலம், நாகபாசம், உடுக்கை, டமருகம் போன்றவற்றை கரங்களில் ஏந்தி நாகத்தையே பூணூலாகத் தரித்தவர். ஆடை அணியா அழகராகக் காட்சி தருபவர். சிவன்கோயில்களில் வடகிழக்கு மூலையில் அருள்பாலிப்பவர்.

காலையில் வழிபாடு தொடங்கும் முன்னரும், இரவில் அர்த்தஜாம வழிபாடு நிறைவு பெற்ற பின்னரும் பூட்டிய திருச்சந்நிதிகளின் அனைத்து சாவிகளையும் பைரவரின் திருவடிகளில் சமர்ப்பித்த பின்னரே கோயிலைச் சாத்துவது மரபு. கோயிலில் காவலராக இருந்து எந்த இடையூறோ,இழப்போ ஏற்படாமல் பாதுகாப்பதால் இவரை க்ஷேத்ரபாலகர் என்று பக்தர்கள் வணங்குகின்றனர்.

பைரவரை செவ்வரளி மலர்களால் அர்ச்சனை செய்து, தேன், அவல் பாயாசம், தயிர்சாதம், செவ்வாழை ஆகியவற்றை நைவேத்தியம் செய்து வழிபட, மனதில் ஏற்படும் பயம், கடன் தொல்லை நீங்கும், திருமணம், வீடு கட்டுதல், வேலை வாய்ப்பு, வியாபார முன்னேற்றமும் ஏற்படும். எண்ணிய எண்ணங்கள் அனைத்தும் ஈடேறும்.


பைரவருக்கு உகந்தது வெள்ளை வஸ்திரம். தயிர் அன்னம், தேங்காய் போன்ற வெண்ணிற உணவுகள்.

எதிரிகளின் தொல்லைகளிலிருந்து விடுபட பைரவர் வழிபாடு சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ணம் ஒரு பார்வை . . .





முதல்மூன்றுஉலககோப்பை போட்டி இங்கிலாந்தில் நடைபெற்ற நிலையில், 1987ல் 4வது உலக கோப்பை போட்டியை இணைந்து நடத்தும் வாய்ப்பு இந்தியா, பாகிஸ்தானுக்கு கிடைத்தது. உலக கோப்பை போட்டியை இங்கிலாந்தில் இருந்து மாற்ற அவ்வளவு எளிதாக அனுமதி கிடைத்துவிடவில்லை. சர்வதேச கிரிக்கெட் சபையில் இங்கிலாந்து, அவுஸ்திரேலிய ஆதிக்கம் கொடி கட்டிப் பறந்த நிலையில், பல வேறு மட்டத்தில் பல சுற்று பேச்சுவார்த்தைக்கு, இழுபறிக்கு பிறகே போட்டி நடத்தும் வாய்ப்பு இந்தியாவுக்கு கிடைத்தது. 60 ஓவருக்கு பதிலாக, தலா 50 ஓவர் கொண்ட போட்டியாக நடத்தப்பட்டது.

கபில்தேவ் தலைமையிலான இந்திய அணியில், புதுமுகங்களாக அசாருதீன், சித்து, மனோஜ் பிரபாகர், மணிந்தர சிங், கிரண் மோரே, எல்.சிவராம கிருஷ்ணன், சேதன் ஷர்மா இடம் பெற்றார்கள். ஏ பிரிவில் இடம்பெற்ற இந்தியா, சேப்பாக்கம் மைதானத்தில் நடந்த முதல் லீக் ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவிடம் ஒரு ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றியை கோட்டை விட்டது.

பெங்களூரில் நியூசிலாந்துக்கு எதிராக நடந்த லீக் ஆட்டத்தில் இந்தியா 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றியை வசப்படுத்தியது.

மும்பையில் சிம்பாவே க்கு எதிராக 8 விக்கெட் வித்தியாசத்திலும், டில்லியில் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக 56 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் வென்று இந்தியா உற்சாக நடைபோட்டது. சித்து, அசார், கவாஸ்கர், வெங்சர்க்கார் நல்ல பார்மில் இருந்தனர். மீண்டும் சிம்பாவே, நியூசிலாந்து அணிகளுடன் நடந்த லீக் ஆட்டங்களிலும் அபாரமாக வென்ற நடப்பு சம்பியன் இந்தியா அரை இறுதிக்கு தகுதி பெற்றது. லாகூரில் நடந்த முதலாவது அரை இறுதியில் அவுஸ்திரேலியா 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வீழ்த்தி இறுதி தேர்வுக்கு முன்னேற மும் பையில் நடந்த 2 ஆவது அரை இறுதியில் இந்தியா-இங்கிலாநது அணிகள் மோதின. இங்கிலாந்து 50 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 254 ஓட்டங்கள் குவித்த்து. இந்தியா 45.3 ஓவரில் 219 ஓட்டங்களுக்கு சுருண்டு 35 ஓட்டங்கள வித்தியாசத்தில் இறுதி சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை வீணடித்தது.




கொல்கத்தா ஈடன் கார்டனில் நடந்த விறுவிறுப்பான இறுதிப் போட்டிக்கு அவுஸ்திரேலியா 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வழ்த்தி முதல் முறையாக உலக சம்பியன் ஆனது. ஒரு கட்டத்தில் 2 விக்கெட் இழப்புக்கு 135 ஓட்டங்கள் எடுத்து வலுவாக சென்று கொண்டிருந்த இங்கி லாந்து அணி தலைவர் மைக்கேட்டிங்தேவை யில்லாமல் ரிவர்ஸ் ஸ்வீப் ஆடி விக்கெட்டை தானம் செய்ததால் தடுமாறி தோல்வியைத் தழுவியது அந்நாட்டு ரசிகர்களை சோகத்தில் ஆழ்த்தியது. இந்த உலக கோப்பையை இந்தியா வெற்றிகரமாக நடத்திய பிறகு கிரிக்கெட் உலகில் நமது ஆதிக்கம் அதிகரிக்கத் தொடங்கியது.

- இங்கிலாந்தின் கிரகாம் கூச் 8 போட்டியில் 471 ஓட்டங்கள் விளாசி (அதிகம 115. சராசரி 58.87) ஓட்டங்கள் குவிப்பில் முதலிடம் பிடித்தார்.
- அவுஸ்திரேலிய வேகம் மெக்டர்மாட் 8 போட்டியில் 18விக்கெட்டை கைப்பற்றி முதலிடமும் (சிறப்பு: 5/44), பாகிஸ்தானின் இம்ரான்கான் 7 போட்டியில் 17 விக்கெட்டு வீழ்த்தி (சிறப்பு: 4/37) 2வது இடமும் பிடித்தனர். இந்தியாவின் மணிந்தர் சிங் 7 போட்டியில் 14 விக்கெட்டுடன் (சிறப்பு: 3/21) 4 ஆவது இடம் பிடித்தார்.
- கராச்சியில் இலங்கை அணிக்கு எதிராக நடந்த லீக் ஆட்டத்தில் மேற்கிந்தியதீவின் அதிரடி வீரர் வவியன் ரிச்சர்ட்ஸ் 181 ஓட்டங்கள் விளாசி உலக சாதனை படைத்தது, தனிநபர் அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையாக அமைந்தது.
- அதே போட்டியில் மேற்கிந்தியதீவு 50 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 360ஓட்டங்கள் குவித்தது. அணியின் அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையாகும்.

## கோல் மழை பொழிந்த சென்.மேரிஸ் இறுதிப் போட்டிக்கு தெரிவானது

அரையிறுதியாட்டத்தில் 11 கோல்களை அபாரமாக அடித்து கோல் மழை பொழிந்த சாதனையை நாவாந்துறை சென்.மேரிஸ் அணி உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நிகழ்த்தியது.

சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் அணிக்கு 7 பேர் கொண்ட காற்பந்தாட்ட சுற்றுப்போட்டி உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

30 அணிகள் பங்குபற்றுகின்ற இச்சுற்றுப்போட்டியின் முதலாவது அரையிறுதியாட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நாவாந்துறை சென். மேரிஸ் அணிக்கும் நவிண்டில் கலைமதி அணிக்கும் இடையில் இடம்பெற்றது. போட்டி ஆரம்பித்த அடுத்த நிமடத்திலேயே சென்.மேரிஸ் அணி, அதிரடியான கலக்கல் ஆட்டம் ஆடியது. அவ்வணி அடுத்தடுத்து 4 கோல்களைப் போட்டது. பதிலுக்கு கலைமதி அணி 1 கோலைப் போட்டது. முதல் பாதியாட்டத்தில் சென்.மேரிஸ் அணி 4:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியாட்டம முழுமையாக சென்மேரிஸ் அணியின் பக்கம் வீழ்ந்தது. வீரர்கள் ஒருவர் மாறி ஒருவர் கோல் மழை பொழிந்து அடுத்தடுத்து 7 கோல்களைப் போட்டனர். சென்மேரிஸஅணி 11:01 என்ற கோல் கணக்கில் வென்று இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது.

சென்.மேரிஸ் அணி சார்பாக அருள்ராசா யூட் 4, கிறிஸ்தோபர் ஜக்ஸன் 3, மரியதாஸ்நிதர்சன் 2, அன்ரனி அன்ரன் சாள்ஸ் 1, பிரேமானந்தன்ஜெனட் 1 கோல்களைப் பெற்றுக்கொடுத்தனர். (க)

## தெல்லிப்பழை மகாஜனாவை வென்றது யாழ்ப்பாண இந்துக் கல்லூரி அணி

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியை 4 விக்கெட்டுகளால் யாழ். இந்துக் கல்லூரி வெற்றி பெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் 19வயதுப்பிரிவு பிரிவு-3 அணிகளுக்கிடையிலான மட்டுப்படுத்தப்படாத ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியின் ஆட்டமொன்று தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் கடந்த 3,4 ஆம் திகதிகளில் நடைபெற்றது. இதில் யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மோதியது.

நாணய சுழற்சியல்வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணி,159 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் நிவாஷ் 37,கபிலன் 28 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ். இந்துக் கல்லூரி சார்பாக, வைகரன் 39/3,சிவலக்ஷன் 33/2, கிரிஷாந் 22/2 விக்கெட்டுகளை கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸ்ிக்காக துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யாழ். இந்துக் கல்லூரி தமது முதல் இன்னிங்சில் 304 ஓட்டங்களை குவித்தது.

துடுப்பாட்டத்தில் கஜானந் 50,ஜனவத்ஷன் 50, சிவலக்ஷன் 46, ஜோய்நிஷான் 40 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி சார்பாக கபிலன் 100/6, ஜசிந்தன் 14/2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள்.

மீண்டும் தமது இரண்டாவது இனிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து 242 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஜசிந்தன் 67, ரசிகரன் 46, சாரங்கன் 40 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ். இந்துக கல்லூரி சார்பாக பிரணவன் 21/2, கிரிஷாந் 36/2, துவாரகன் 30/3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்கள்.

100 என்னும் வெற்றி இலக்கோடு 2 ஆம் இன்னிங்சில் துடுப்பாடிய யாழ். இந்துக் கல்லூரி 6 விக்கெட்டுகளை இழந்து 101 ஓட்டங்களைப் பெற்று 4விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி சார்பில் வைகரன் 27, சிவலக்ஷன் 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி சார்பில் கபிலன் 46/3, ஜசிந்தன் 46/2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

இதன் மூலம் யாழ்.இந்துக் கல்லூரி 4 விக்கெட்டுகளால் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணியை வெற்றி கொண்டது. (க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைக்கல் கிளார்க் விளையாடுவது உறுதி

காயம் காரணமாக சர்வதேசப் போட்டிகளில் அண்மைக்காலமாக விளையாடாமல் ஓய்விலிருந்த அவுஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க், உலகக் கிண்ணத் தொடரில் விளையாடுவது உறுதியாகியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பங்களாதேஷ் அணியுடனான பயிற்சிப் போட்டியில் அவுஸ்திரேலிய அழைப்பு அணியின் சார்பில் விளையாடிய மைக்கேல் கிளார்க், களத்தடுப்பு, பந்துவீச்சு, துடுப்பாட்டம் ஆகியவற்றில் சிறப்பாகச் செயற்பட்டுள்ளார். இந்தப் போட்டியின்போது முன்னைய காயங்கள், உடல் உபாதைகள் காரணமான சிரமங்கள் எதுவும் அவருக்கு ஏற்பட்டிருக்கவில்லை. எனவே, அவர் உலகக் கிண்ணத் தொடருக்கு சிறப்பாகத் தயாராகிவிடுவார் என்ற எதிர்பார்ப்பு வலுப்பெற்றுள்ளது.

அதேநேரம், கிளார்க் அணிக்குத் திரும்பினாலும் உலகக் கிண்ணத் தொடருக்கான அணித் தலைவராக அவர் செயற்படுவாரா என்கிற கேள்வி தற்போது பரவலாக முன்வைக்கப்பட்டு வருகிறது. ஏனெனில், தொடரின் நடுவில் மறுபடியும் கிளார்க் உபாதைக்கு உள்ளானால் அணித் தலைமையில் மாற்றம் செய்ய நேரிடும். எனவே, தற்போதுள்ளதைப்போன்றே ஜோர்ஜ் பெய்லி அல்லது ஸ்ரீபன் ஸ்மித் இருவரில் ஒருவரை அணித் தலைவராக நியமிப்பது அணிக்கு நல்லது என்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுவருகின்றன.

இது குறித்து அவுஸ்திரேலிய அணி வீரர் ஆரோன் பின்ச் கருத்துத் தெரிவிக்கும்போது, இது ஒரு பிரச்சினையே அல்ல. மூவருடைய தலைமையின் கீழும் எமது அணி மிகச்சிறப்பாக செயற்பட்டிருக்கிறது. எனவே, யார் தலைவராக இருந்தாலும் நாம் உலகக் கிண்ணத் தொடரில் எமது முழுத் திறமையை வெளிப்படுத்தி விளையாடுவோம். அணியில் கிளார்க் இருப்பது மேலதிகப் பலத்தை தரும். அவரது அனுபவம், கிண்ணத்தை வெல்ல எமக்கு உதவிடும் என்று குறிப்பிட்டிருக்கிறார். (க)

# உரும்பிராய் சென்.மைக்கல் வி.க உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

## ஊரெழு றோயல் இறுதிப் போட்டிக்குத் தகுதி

குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகத்துக்கும் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற பரபரப்பான 2ஆவது அரையிறுதி ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் சமனிலை தவிர்ப்பு உதைமூலம் (பெனால்டி ஷூட் அவுட்) வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றது.

உரும்பிராய் சென் மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் 2ஆவது அரையிறுதிப் போட்டி நேற்று நடைபெற்றது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியின் ஆட்டநேர முடிவில் இரு அணிகளும் தலா 3 கோல்கள் அடித்து சமனிலையில் இருந்தன.

இதனையடுத்து வெற்றியாளரை தீர்மானிக்க சமனிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது.

இதில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம், குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது.

இச்சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (க)

# நிலத்தடி நீர் மாசடைவு ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நிலத்தடி நீர்மாசடைவு தொடர்பில் மத்திய,மாகாண அரச தரப்பினர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தி இலங்கை ஆசிரியர் சங்கம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளது.

சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோவின் முன்பாக நேற்று பிற்பகல் 2.30 மணியளவில நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பல நூற்றுக்கணக்கான ஆசிரியர்களும் பொது மக்களும் கலந்து கொண்டு கழிவு எண்ணெய் பிரச்சினைக்கு உரிய தீர்வை குறுகிய காலத்திற்குள் பெற்றுக் கொடுக்க வேண்டுமென்றும் கோஷம் எழுப்பியிருந்தனர்.

சுன்னாகத்தில் அமைந்துள்ள நொதேர்ன் பவர் மின் உற்பத்தி நிறுவனத்திலிருந்து வெளியேறும் கழிவு ஓயில் நிலத்தடி நீருடன் கலந்து நிலத்தடி நீரை மாசுபடுத்தியுள்ளது. இதனால் அப்பகுதியிலுள்ள பல நூற்றுக்கணக்கான கிணறுகளிலும் கழிவொயில் கலந்து அப்பகுதி மக்களை பெரும் பாதிப்புக்கு உள்ளாக்கியுள்ளது.

இதனால் குடிநீர்த் தட்டுப்பாடு, பல்வேறு நோய்களின் தாக்கம், விவசாயத்துக்கான நீரியில் பயன்பாடு உட்பட பல்வேறுபட்ட நீர்த் தேவைகளுக்கு அப்பகுதி மக்கள் பெரும் கஷ்டங்களை ஒரு வருடத்திற்கு மேலாக எதிர்நோக்கி வருகின்றனர்.

இக் கழிவு எண்ணெய்ப் பிரச்சினை தொடர்பில் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு கழிவு எண்ணெய் கசிவினை ஏற்படுத்தும் சுன்னாகம் நொதேர்ன் பவர் மின உற்பத்தி நிலையத்திற்கு எதிராக நீதிமன்றத்தினால் தடை உத்தரவும் பெறப்பட்டு நிறுவனம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இந்நிலையில் கழிவு எண்ணெய்க் கசிவினால் மாசடைந்துள்ள நிலத்தடி நீர் தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு விரைவான தீர்வினை பெற்றுத் தரக் கோரியும் பல அமைப்புக்கள் போராட்டத்தை மேற் கொண்டிருந்த நிலையிலும் நேற்றையதினம் ஆசிரியர் சங்கமும் போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

## 19-வது திருத்தச்...

பலத்தில் நிறைவேற்ற வேண்டும் என்பதால், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் இணக்கத்தை பெறுவதற்காக திருத்தச் சட்டம் அந்த கட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.(எ-11)

## முன்னாள்...

யின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் ஜனாதிபதிகள் மூவரும் தனிப்பட்ட முறையில் சந்தித்து கட்சியின் ஒற்றுமை சகோதரத்துவம் மற்றும் பிரிவினைகளின்றி கட்சியின் அதிகாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதே இந்த சந்திப்பின் முக்கிய நோக்கமாக காணப்பட்டது என கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

குரோதங்கள் இன்றி குழந்தைகள் போல ஒற்றுமையாக இருப்பதே தமது நோக்கம் என தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர், நடைமுறையிலுள்ள மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளை தனித்தனியாக சந்தித்து பேச்சு வார்த்தை நடத்த போவதாகவும் தெரிவித்துள்ளார். (எ-11)

## வாழ்த்துவதற்...

என தெரிவித்திருந்தனர்.

எனினும் அவர் தனது தவறுகளை உணர்ந்து மக்களுக்கு நல்லாட்சி வழங்குவார் எனும் நம்பிக்கையில் நானும், இன்னும் மூவரும் அவரை ஜனாதிபதி வேட்பாளராக நியமித்தோம்.

ஆனால் நான் கட்சியின் மூத்த உறுப்பினர்களின் கருத்திற்கு முக்கியத்துவம் அளிக்காத்தை கூட அவர் பொருட்படுத்தாமல் அப்போதிருந்த எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து கொண்டு எனக்கு எதிராக மேடை பேச்சுக்களை நடத்துவது உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் ஈடுபட்டார்.

இந்நிலையில் அவருக்கு ஒத்துழைப்பு வழங்கிய ரணில் விக்கிரமசிங்கவிடம் அவரது கட்சியிலுள்ள 23 முக்கிய உறுப்பினர்களை தான் பதவிக்கு வந்ததன் பின்னர் தனது கட்சிக்கு அழைத்து கொள்கின்றேன் என வாக்குறுதியளித்திருந்தார்.

எனினும் அவரால் அந்த வாக்குறுதியை செயற்படுத்த முடியாமல் போன நிலையில் அறுவருக்கு மாத்திரம் தனது கட்சியில் இடங்கொடுத்தார்.

அவரின் இந்நடவடிக்கைகளை நான் அறிந்திருந்தும் பழைய விடயங்களை பெரிதுபடுத்த கூடாது எனும் காரணத்தினால் அவர் ஜனாதிபதியாக பொறுப்பேற்றதன் பின்னர் அவருக்கு வாழ்த்து தெரிவிப்பதற்காக தொலைபேசி அழைப்பொன்றை விடுத்தேன்.

அதன் போது அவர் என்னை 19 நிமிடங்கள் தொடர்ச்சியாக தகாத வார்த்தைகளினால் திட்டித் தீர்த்தார். நான் அமைதியாக அவர் கூறியவற்றையெல்லாம் கேட்டு விட்டு குறிப்பிட்ட சிலர் மாத்திரமேயறிந்த அவரின் வாழ்க்கை இரகசியத்தை கூறினேன். உடனே அவர் தொலைபேசி அழைப்பை துண்டித்து விட்டார்.

பின்னர் மகிந்த என்னை சிறிது சிறிதாக பழிவாங்கினார், என்னை உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து வெளியேற்றுவதற்காக எனக்கு எதிராக வழக்கும் தொடர்ந்து என்னை மிகவும் கேவலப்படுத்தினார், எனினும் அவரால் அந்த வீட்டை பறிக்க முடியாது போய்விட்டது.

இந்நிலையில் கடந்த 9 வருடங்களாக அவர் நடத்திய அரசியல் சீரழிவுகளை பொருட்படுத்த முடியாமல் பல்வேறு தரப்பினர் என்னை மீண்டும் அரசியலுக்கு வருமாறு வற்புறுத்தினர்.

எனினும் மீண்டும் ஒருமுறை நான் அரசியலுக்கு வர விரும்பாததினால் இந்நாட்டை கட்டியெழுப்ப சிறந்த தலைமைத்துவம் ஒன்று வேண்டும் என தீர்மானித்து அதற்கு ஏற்றாற் போல் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நியமித்தேன் என்றார். (எ-11)

## கொலைகள் ...

அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை, நீண்ட ஒரு அதீத அதிகார ஆட்சிக்குள் இருந்து மீண்டுள்ளது. இதன் காரணமாக இலங்கை மக்கள் சந்தோசமடைந்துள்ளனர்.

இலங்கையை பற்றி சிந்திப்போர் இதனை சிறந்த வாய்ப்பு என்று கூறுகின்றனர். எனவே இவ்வாறான மாற்றத்தின் ஊடாக கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தை வலுப்படுத்த வாய்ப்பு கிடைத்துள்ளது.

அத்துடன் சித்திரவதை மற்றும் காணாமல் போதல் சம்பவங்கள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. கடந்த ஆட்சிக்காலத்தில் இடம் பெற்ற பல்வேறு திட்டமிட்ட கொலைகள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படும் என்றும் சொல்ஹெய்ம் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

எனினும் இவற்றில் இலங்கை தோல்வி கண்டால், தீவிர நிலை உருவாகும். இந்த நிலையில் தமிழர்கள் விடயத்தில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது என்பதில் இலங்கையின் புதிய அரசாங்கம் பாரிய சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும்.

தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமானால் அவர்களுக்கும் சிங்களவர்களை போன்று சமவுரிமை வழங்கப்பட வேண்டும். அவ்வாறான ஏற்பாடுகளுக்கு நோர்வே ஆதரவளிக்கும் என்றும் சொல்ஹெய்ம் குறிப்பிட்டார். (எ-11)

## முதன் முறையாக...

அமைச்சராக இருந்த காலங்களில் பொலநறுவையில் அபிமானமிக்க சுதந்திர தின நிகழ்வை ஒழுங்கு செய்து அந்நிகழ்விலேயே பங்கேற்று வந்துள்ளதாக அவர் மேலும் கூறினார். (எ-11)

## வெளிநாடு செல்ல ...

விஜித ஹேரத் சமர்ப்பித்த மனுவொன்றை ஆராய்ந்த பின்னரே நீதிபதிகள் இந்த உத்தரவைப் பிறப்பித்ததாக மனுதாரர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் தெரிவித்தார்.

நேற்று வியாழக்கிழமை இந்த மனு விசாரணைக்கு வந்தபோது, அரச தரப்பு வழக்கறிஞர் கே.பி. சம்பந்தமாக எடுக்கப்படவுள்ள சட்ட நடவடிக்கைகள் குறித்த தீர்மானத்தை எடுப்பதற்கு கால அவகாசம் கோரினார்.

ஆனால் அப்படி கால அவகாசம் வழங்குவதானால் குமரன் பத்மநாதன் வெளிநாடு செல்வதை தடைசெய்து, உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு மக்கள் விடுதலை முன்னணியின் வழக்கறிஞர் கோரினார்.

அந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள் அவர் வெளிநாட்டுக்குச் செல்வதை தடைசெய்து உத்தரவு பிறப்பித்தனர்.

அதேவேளை, கே.பிக்கு உயிர் அச்சுறுத்தல்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளதால், அவருக்குப் போதிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் எனவும் நீதிமன்றத்தில் கோரப்பட்டது.

கடந்த அரசாங்கத்தினால் கைது செய்யப்பட்ட குமரன் பத்மநாதனை இதுவரை நீதிமன்றத்தின் முன்னிறுத்தாத காரணத்தால், அவரை மீண்டும் கைதுசெய்து நீதிமன்றத்துக்கு கொண்டுவர வேண்டும் என்று கோரியே மக்கள் விடுதலை முன்னணி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளது.

மனுமீதான அடுத்தகட்ட விசாரணை பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (எ-11)

## தனித்துவமும்...

இலங்கையின் 67 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு தேசிய சூறா சபையின் ஏற்பாட்டில் கொழும்பிலுள்ள சுதந்திர சதுக்கத்தில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு,

இலங்கையின் சுதந்திரப் போராட்டத்தில் சிறுபான்மையினரின் பங்கு மிகவும் முக்கியமானது. அன்று இலங்கையின் சுதந்திர தின செய்தியை எடுத்துக்கொண்டு பிரிட்டனுக்குச் சென்றவர் சிங்களவர் அல்லர். சேர். பொன்னம்பலம் இராமநாதன்தான். பிரிட்டன சென்ற அவர், அந்நாட்டு நாடாளுமன்றில் 4 மணிநேரத்துக்கு உரையாற்றினார். அந்த உரையைக் கேட்ட பின்னர்தான் இலங்கைக்கு சுதந்திரம் வழங்க வேண்டும் என்று பிரிட்டனைச் சேர்ந்த அதிகமானவர்கள் தீர்மானித்தனர்.

அதுபோல முஸ்லிம்களின் பங்கும் இன்றியமையாததாகும். அன்று ஐக்கிய தேசியக் கட்சி உருவாக்கப்பட்டபோது, அதன் தலைவராக டி.எஸ்.சேனாநாயக்கவின் பெயரை எஸ்.நடேசன் என்ற தமிழர் முன்மொழிந்தார். அதை டி.பி.ஜயா என்ற முஸ்லிம்தான் வழிமொழிந்தார்.

தமிழ், முஸ்லிம்கள் இணைந்து சிங்களவருக்கு தலைமைத்துவத்தை வழங்கினர். அதுபோல தற்போது மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாவதற்கு தமிழ், முஸ்லிம் மக்கள் தமது முழு ஆதரவையும் வழங்கியுள்ளனர்.

பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டபோதும், நாட்டில் சமாதானம் ஏற்படவில்லை. சமாதானத்தை ஏற்படுத்த போராட்டத்தை ஆரம்பித்து, அதில் நாம் வெற்றியும் கண்டோம். அது இரண்டாவது சுதந்திரப் போராட்டமாகும். அபிவிருத்திகளால் வடக்கு மக்களுக்குப் பயனில்லை மகிந்த ராஜபக்ஷ வடக்குக்கு என்ன செய்யவில்லை?

பல கோடிக்கணக்கில் பணத்தைச் செலவு செய்து அபிவிருத்திகளை செய்தார். ஆனால், அந்த அபிவிருத்திகளால் அவர்களுக்கு எந்தப் பயனும் ஏற்படவில்லை. அபிவிருத்தியை அனுபவிக்கும் நிலையில் அந்த மக்கள் இல்லை. மகிந்த அபிவிருத்தி செய்தாலும், வடக்கு மக்கள் யாருக்கு வாக்களித்தனர்.

தமக்கு இந்த நாட்டில் உரிய இடம் கிடைக்கவில்லை என்பதே தமிழ் மக்கள் மனதில் பெரும் கவலையாக உள்ளது. இந்நிலையில், அவர்களுக்கு வேறு எதைக் கொடுத்தும் பயனில்லை. 1950 ஆம் ஆண்டுமுதல் தமிழ்த் தலைவர்கள் அபிவிருத்தியைக் கேட்கவில்லை. இலங்கையர் என்ற தனித்துவத்தைத்தான் கேட்கின்றனர் என்றார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓமந்தையில் மீண்...

பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பாதுகாப்பு அமைச்சில் இருந்து கிடைத்த திடீர் உத்தரவையடுத்தே இந்த சோதனை நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பெப்ரவரி 2 ஆம் திகதி பகல் விடுத்த உத்தரவுக்கு அமைவாக இந்த சோதனைச் சாவடியின் சோதனை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு, ஏ 9 வீதியில் வாகனங்கள் எந்தவித சோதனைகளுமன்றி செல்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது.

ஓமந்தை சோதனைச்சாவடியின் சோதனை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தாலும், வடக்கு நோக்கிச் செல்கின்ற லொறிகளில் வெடி பொருட்கள் மற்றும் பைனாகுலர்ஸ் போன்ற வடபகுதிக்குக் கொண்டு செல்ல முடியாதவை என்று தடை செய்யப்பட்டிருந்த பொருட்கள் கொண்டு செல்லப்படுகின்றனவா என்பதைப் பரீட்சிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

அதேவேளை, வடக்கில் இருந்து பழைய இரும்புப் பொருட்களை ஏற்றிவருகின்ற லொறிகளில் யுத்த மோதல்களின்போது கைவிடப்பட்ட அல்லது அப்பகுதிகளில் கண்டெடுக்கப்படுகின்ற வெடிபொருட்களும் பழைய இரும்புப் பொருட்களுடன் கொண்டு வரப்படலாம் என்பதால், பழைய இரும்புப் பொருட்களை ஏற்றி வருகின்ற லொறிகள் சோதனையிடப்படும் என்றும் கூறப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே, சோதனை நடவடிக்கைகள் நீக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்ட இரண்டாவது நாளான நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு முதல் மீண்டும் ஓமந்தை சோதனைச்சாவடியில் சோதனை நடவடிக்கைகள் முன்னைய நடைமுறைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படுகின்றன.

ஓமந்தையில் சோதனை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றதே, நீங்கள் ஏன் சோதனையிடுகின்றீர்கள் என ஓமந்தை சோதனைச்சாவடியில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் அங்குள்ள அதிகாரிகளிடம் வினவியுள்ளனர்.

சோதனை நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பித்து பழையபடி நடந்துகொள்ளுமாறு எங்களுக்கு மேலிடத்தில் இருந்து உத்தரவு வந்துள்ளது. அதன் அடிப்படையிலேயே நாங்கள் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றோம் என்று அங்குள்ள அதிகாரிகள் ஓமந்தை ஊடாகப் பயணம் செய்த பயணிகளிடம் தெரிவித்துள்ளனர். (எ-11)

## மொஹான் பீரிஸ்...

தேரர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்க தேரரை சந்தித்த போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். மொஹான் பீரிஸ், சிரேஷ்ட சட்டத்தரணி என்ற வகையில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து ஓய்வுபெற்றார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவரை மீண்டும் சட்டமா அதிபராக நியமித்தார். அதில் இருந்து அவர் ஓய்வுபெற்றார். மூன்றாவது முறையாக உயர் நீதிமன்றத்திற்கு வந்து ஓய்வு பெறவுள்ளார்.

உலகில் எந்த நாட்டில் ஒருவர் மூன்று முறை ஓய்வுபெற முடியும். அப்படியான அரச தொழில் எங்கு உள்ளது. இதனை தவிர மொஹான் பீரிஸ், ஜனாதிபதியின் சட்ட ஆலோசகராகவும் பணியாற்றினார். அமைச்சரவையின் சட்ட ஆலோசகராகவும் இருந்தார். லலித் கொத்தலாவவிடம் இருந்து கொள்ளையிடப்பட்ட செலான் வங்கியின் தலைவராகவும் மொஹான் பீரிஸ் பணியாற்றுகிறார்.

பாதுகாப்பு அமைச்சகத்தின் சட்ட ஆலோசகர், இலங்கைக்கு ஆயுதங்களை இறக்குமதி செய்யும் சொப்ட் லொஜிக் நிறுவனத்தின் பங்குகளை கொண்ட பணிப்பாளராகவும் ரக்னா லங்கா பாதுகாப்பு சேவை நிறுவனத்திலும் பங்குகளை கொண்டுள்ள அவர், பணிப்பாளராக இருந்து வருகிறார்.

இப்படியான பல பதவிகளை கொண்டிருக்கும் மொஹான் பீரிஸிடம் இருந்து நீதித்துறை எப்படி நியாயத்தை எதிர்பார்க்க முடியும் எனவும விஜயதாச ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார். (எ-11)

## தமிழ் மக்களுக்கு நன்மை...

இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 67 ஆவது சுதந்திரதின தேசிய வைபவத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத் தலைவர் இரா.சம்பந்தன் கலந்து கொண்டமை தொடர்பில் வினவியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. தற்போது அதிகாரத்தினை கைப்பற்றியுள்ளவர்கள் நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டும், வடக்கிலும் தெற்கிலும் வாழ்கின்ற மக்களுக்கு இடையில் நல்லிணக்கம் ஏற்பட வேண்டும், யுத்தத்தின் போதும் யுத்தத்தின் பின்னரும் தமிழ்மக்களுக்கு ஏற்பட்ட துயரங்கள் நீங்க வேண்டும், அரசியல் தீர்வுகாணப்பட வேண்டும் என்ற நல்ல கருத்துக்களை கூறி வருகின்றார்கள்.

அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதற்குரிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் நான் சொல்லமாட்டேன்.

இருந்த போதிலும் இவ்விதமான ஒரு முயற்சியில் பங்காளிகளாக நாங்கள் இருக்க தயார் என்பதை காட்ட வேண்டிய தேவை இருக்கின்றது.

நாட்டில் வாழும் ஏனைய மக்களுக்கும் அந்த செய்தியை தெரிவிக்க வேண்டிய தேவை இருக்கின்றது. அதன் அடிப படையில் இந்த புதிய சூழலில் நாம் பங்குபற்றிகொள்வது இந்த நாட்டில் வாழும் தமிழ மக்களுக்கு நன்மை பயக்கும் என்ற நம்பிக்கையுடனும் எதிர பார்ப்புடனும் நான் சுதந் திரதினத்தில் பங்கேற்றேன் என குறிப்பிட்டார். (எ-11)


BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS

இன்னும் சில நாட்களில் நீங்கள் பல்கலைக்கழகம் செல்லவேண்டும், படித்துப் பட்டதாரியாக வேண்டும் அல்லது வேறு உயர் கற்கை நெறிகளைக் கற்க வேண்டும் அல்லது போட்டித் தொழிற்சந்தையிலே நல்ல வேலை வாய்ப்பை பெற வேண்டும், இவ்வாறான உங்களின் கனவுகள் நனவாக வேண்டுமெனில், நீங்கள் வாழ்க்கையில் வளம்பெற வேண்டுமெனில் தற்போதைய காலகட்டத்தில் ஆங்கில அறிவு மிக, மிக அவசியமானது

**Spoken English With Grammar - Quick Learning Course**

Duration: (1 1/2 Months)

- சர்வதேச தராதரத்திற்கேற்ற பாடத்திட்டம்.
- கற்கைநெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.
- விரிவுரைகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video) நடைபெறுகின்றது.
- ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.

**நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும்.**

**Diploma In English** Duration: (2 Months)

தற்காலத்திலே ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. உயர் கல்வி கற்பதாயினும் சரி, அலுவலகத்தில் வேலை புரிவதாயினும்சரி, Internet, E-mail, Internet Chatting மற்றும் நாளாந்த வாழ்க்கையிலே இலத்திரனியல் சாதனங்களை பாவிப்பதிலும் சரி ஆங்கிலத்தின் தேவையை யாரும் புறந்தள்ளமுடியாது. இதை நாம் நன்கு உணர்ந்து எல்லோரும் இலகுவில் கற்கக்கூடிய விதத்தில் ஒரு பாடத்திட்டத்தினைப் புதிய தொழில்நுட்பங்களுடன் (Audio & Video System) அமைத்துள்ளோம்.

**B1 Exam** Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானதுடன் IELTS-4.5இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றமுடியும். Duration: (2 Months)

**IELTS** Acadamic/General We do Official Online Registration for Exam Candidates Duration: (2 Months)

(International English Language Testing System)

Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.

**We gurantee success rate 6.5 band and above**

**A1 Exam** Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது (City & Guilds)
சான்றிதழின் கால எல்லை வரையறையற்றது
நம்பிக்கைக்குரிய சர்வதேசப் பரீட்சை
ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது Duration: (2 Months)

Batches Starts on
06.02.2015 @ 9.00 am
07.02.2015 @ 8.30 am
08.02.2015 @ 11.00 am
09.02.2015 @ 3.00 pm

No.15, Sirambiyadi Lane, Off Stanley road (Above Sathosa SM), Jaffna.
Tel : 021-2224550
Head Office: No.30 15/2, W.A. D. Silva Mawatha, Colombo -06. Tel : 0112500207
Hot Lines : 0777585913, 0777222422, 0714299935
(C-024)



**மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்**

இடம் : யாழ் புத்தகசாலை (மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்) (305, 307, 309 ஞானம்ஸ் ஹோட்டல் அருகாமை)
காலம் : 29.12.2014 முதல் 15.02.2015 வரை
நேரம் : காலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை
(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)

Grade 6க்கு உரிய Science வெளிவந்துவிட்டது (2015 New Syllabus), English literature உரிய புத்தகங்கள் வெளிவந்துவிட்டது.

பத்திரிகைகளும் பெற்றுக் கொள்ளலாம்

யாழ். புத்தகசாலை
305, 307, 309 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(ஞானம்ஸ் ஹோட்டல் அருகாமை)
(C-026)

தொடர்புகளிற்கு : 077 8349 507, 021 4545 552



**கனடா EXPRESS ENTRY VISA**
**முதல் கட்டமாக 779பேர் தெரிவு!**

2015ம் ஆண்டு 3 இலட்சம் வரையானோருக்கு நிரந்தர குடியுரிமை வழங்கும் கனேடிய அரசாங்கத்தின் அதிரடி அறிவிப்பின் பிரகாரம், பொருளாதார குடியுரிமைக்கு விண்ணப்பித்தவர்களில் 779 பேர் கடந்த ஜனவரி 31ம் திகதி நிரந்தர குடியுரிமைக்கு விண்ணப்பிக்க தகுதி பெற்றுள்ளனர்.

ஒரு வருடத்துக்குக் குறையாத தொழில் அனுபவத்துடன் துறைசார் பட்டமொன்றையும் கொண்டிருக்கும் எவரும் கனடா Express Entry Visaவுக்கு விண்ணப்பிக்கலாம்

Express Entry Visa என்றால் என்ன?
விண்ணப்பிப்பதற்கான தகுதி என்ன?
என்னென்ன தொழில்வாய்ப்புக்கள் உண்டு?
விண்ணப்ப படிமுறைகள் எவை?

அனைத்து விபரங்களை அறிந்துகொள்ள பாருங்கள்
**www.sikaram.lk**
info@sikaram.lk என்ற மின்னஞ்சலுக்கு உங்கள் சுயவிபரக்கோவையை அனுப்பி விண்ணப்பிப்பதற்கான தகுதியை அறிந்துகொள்ளுங்கள்

கனேடிய குடிவரவுத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்ற முகவரின் அனுமதியுடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இந்தச் சேவையை வழங்கும் ஒரே நிறுவனம்!

SIKARAM
Education Abroad
Work, Migration & Visa Solutions
Sikaram (Pvt) Ltd.,
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி.
யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0773616798 / 021 222 00 11
(C-025)



**31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்**



மண்ணில் 09.02.1948
விண்ணில் 08.01.2015

அமரர் **தங்கராசா ஜெயராசா**
(உரிமையாளர், ஜெயராசா படமாடம், பிரதான வீதி, பருத்தித்துறை)

திங்களொன்று ஓடிச் சென்றதுவே எம்
அன்புத் தெய்வம் எம்மை விட்டகன்று
இணையில்லா நல்வாழ்வை எமக்களித்து நீங்கள்
இறையடி சேர்ந்தீரே !
கண்களில் கண்ணீர் வழிந்தோட சென்ற
திசைதனைப் பார்த்து ஏங்கி நிற்கின்றோம்
மீண்டும் எப்போது எமை நாடி வருவீர் என்று ...

அன்னாரின் மரணச்செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள், பதாகைகள் வெளியிட்டோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த யாவருக்கும் எங்கள் குடும்பம் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் (07.02.2015) நாளை சனிக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் கீரிமலை தீர்த்தக் கடற்கரையிலும் வீட்டுக் கிரியைகள் நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓடக்கரை,
பருத்தித்துறை.

தகவல் : குடும்பத்தினர்
தொ.பே.இல : 077 979 1046
(C-022)

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.02.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org